www.padippakam.com

# புரட்சிக்கனல்

இதழ் ௧ | கும்பம் 2024 | பிப்ரவரி 1993

☐ பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை 3

☐ தேசியப் பிரச்சினை பற்றி மார்க்சிய ஆசான்கள் 24
(மேற்கோள் தொகுப்பு)

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி இதழ்

படிப்பகம்

www.padippakam.com

உள்ளே...

## பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை


1. தேசமும் தேசிய இனமும் 3
2. தேசிய இயக்கமும் தேசிய அரசும் 4
3. சனநாயகப் புரட்சியும் தேசியப் பிரச்சினையும் 6
4. சோசலிசத்திற்கானப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தேசியத் திட்டம் 9
5. சுயநிர்ணய உரிமையும் தேசிய விடுதலையும் 11 (வரலாற்றுச் சான்றுகளிலிருந்து)
6. தேசியப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையும் வர்க்கப் போராட்ட நலன்களும் 15
7. பல்தேசிய அரசு சமூகத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி 19


## தேசியப் பிரச்சினை பற்றி மார்க்சிய ஆசான்கள்

( மேற்கோள் தொகுப்பு )


1. தேசம் 24
2. தேசிய இயக்கம் 27
3. தேசிய இயக்கமும் விவசாயிகள் பிரச்சினையும் 30
4. தேசிய இயக்கத்தின் இரு கட்டங்கள் 31
5. தேசிய அரசு : முதலாளித்துவ காலகட்டத்தின் விதியும் - பொதுவழக்கும் 32
6. ஆசியா மற்றும் இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினை 35
7. தொழிலாளி வர்க்க சனநாயகத்தின் தேசியத் திட்டம் 35
8. தேசியக் கலாச்சாரமும் பூர்சுவா தேசியவாதமும் 41
9. மொழி சமத்துவம் குறித்து — பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ மிதவாதிகளும் 43
10. விசேச சலுகைகள் மற்றும் உரிமைகள்பாலான பாட்டாளி வர்க்கத்தின் அணுகுமுறை 44
11. ஒடுக்கப்பட்ட, ஒடுக்கும் தேசிய இனங்களும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் அணுகுமுறையும் 45
12. ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கக் கட்சியும் சர்வதேசியவாதமும் 48
13. மூன்றுவித நாடுகளும் ஒடுக்கும் தேசப் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் 49
14. அயர்லாந்து விடுதலை பற்றி மார்க்ஸ் 50
15. சொந்த தேசம் குறித்து மார்க்ஸ், லெனின் பெருமிதம் 51
16. பல்தேசிய அரசுகள் எப்போது முற்போக்கானவை? 53
17. ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும் சனநாயகவிரோத அரசு எல்லையும் 54
18. சுயநிர்ணய உரிமை மறுப்பு என்பது கட்டாயப் பிரதேச இணைப்பு 55
19. பிரிவினையும் பாட்டாளி வர்க்க அய்க்கியமும் 57
20. தேசிய விடுதலையும் தேசங்கள் இரண்டறக் கலத்தலும் 58


படிப்பகம்

www.padippakam.com

# பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை

## 1

## தேசமும் தேசிய இனமும்

தேசம் என்பது என்ன? "ஒரு தேசம் என்பது ஒரு பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு மற்றும் ஒரு பொது வான கலாச்சாரத்தில் வெளிப்படும் பொதுவான மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும்" (மா / 10) என்று ஸ்டாலின் மிகச்சரியாக வரையறுத்துக் கூறியுள்ளார். இத்தகைய தேசம் முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவத்தின் மீது வெற்றி கொள்ளும் காலகட்டத்திலேயே அமைகிறது. ஆனால் தேசிய இனம் என்பது இதற்கு முந்தியதாகும்.

பழங்குடி (Tribes) மக்கள் சமூக அமைப்பி லிருந்து முதலாவது வர்க்க சமுதாயம் தோன்றியபோது தேசிய இனங்கள் அமைந் தன. அதாவது மக்கள் முதன் முதலாக ஒரு பொது மொழியுடன் ஒரு பிரதேச அடிப் படையிலான மக்கள் சமூகங்களாக அமைந்த போது அவர்கள் தேசிய இன சமூகங்களா யினர். எனவே தேசிய இனம் என்பது ஒரே பொதுமொழி கொண்ட ஒரு பிரதேச அடிப் படையில் வாழ்கின்ற நிலையான மக்கள் சமூகமாகும். முதலாவது தேசிய இனம் அடிமை பிரபுக்களைக் கொண்டது. அதற் கடுத்த நிலவுடைமை சமூக தேசிய இனங்கள் மத்திய காலத்தில் அமைந்தன. பழங்குடி அமைப்புகளிலேயே பொதுமொழி ஒன்று உருவாகி இருக்கும் எனினும் பிரதேச அடிப் படையிலான ஒரு சமூகமாக உருவாவது வர்க்க சமுதாயத்தின் தோற்றத்துடன்தான் என்பதால் முதலாவது புராதன தேசிய இனத்தின் தோற்றம் புராதன அடிமை சமுதாயத்துடன் இணைந்துள்ளது.

தேசிய இனத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முக்கியமான வேறுபாடு பொது மொழி, பொது பிராந்தியம் என்பதுடன் ஒரு பொதுவான பொருளாதார வாழ்வு என்ற அம்சமும் இணைவதாகும். இது நிலப்பிரபுத் துவத்தின் மீது முதலாளித்துவம் வெற்றி கொள்ளும்போது ஏற்படுகிறது; அதற்கு முன்னதாக அல்ல.

தொல்குல சமூக அமைப்பின் அழிவில் அடிமை உடைமை சமூக அமைப்பும் அடிமை உடைமை சமுதாய அமைப்பின் அழிவில் நிலவுடைமை சமுதாய அமைப்பும் தோன்றிய காலகட்டத்தின் வரலாற்று வகையினம் தேசிய இனம் என்றால், நிலப்பிரபுத்துவத் தின் அழிவின் மேல் முதலாளித்துவம் வெற்றி கொள்ளும் கால கட்டத்தின் வரலாற்று வகையினமே தேசம் ஆகும். தேசத்தின் தோற்றம் இதுவரை துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த மக்களின் பொருளாதார வாழ்க்கையை ஒரு பொது மொழி பிரதேசத்

படிப்பகம்

www.padippakam.com



திற்குள் ஒருங்கிணைந்ததாக, அதிகபட்ச வேலைப்பிரிவினையுடனும், சுதந்திரமான, விரிவான வர்க்கப் பகுப்புடனும் ஒரு நவீன தேசத்திற்கான ஒரு பொதுவான பொருளாதார வாழ்வாக உருமாற்றுகிறது.

இவ்விதம் அமையும் தேசத்தில் இரு வகை கூறுகள் உள்ளடங்கியுள்ளன. முதலாவது இனக்கூறு, இரண்டாவது சமுதாயக் கூறு; பொதுமொழியும், பிரதேசமும் இனக் கூறாகும். இதில் மொழியே பிரதானமானது. நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தினை வெற்றி கொள்ளும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பே சமுதாயக் கூறு ஆகும். இது முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளுற்பத்தி உறவுகளை-வர்க்க உறவுகளைக் குறிப்பிடுகிறது.

ஒரு தேசம் என்பது ஒரு பொது மொழி இன்றி இருக்க முடியாது; ஒன்றுக்கு மேற்பட்ட பொதுமொழிகள் கொண்டதாகவும் இருக்க முடியாது. காரணம்வெவ்வேறுபொதுமொழிகள் வெவ்வேறு தேசிய இனங்களைக் குறிப்பவையாகும். அதே போல தேசம் என்பது ஒரு பொது மொழியுடன் ஒரு ஒருங்கிணைந்த பொருளாதார வாழ்வைக் கொண்ட ஒரு பிரதேசம் இன்றி இருக்க முடியாது; அதே நேரத்தில் வெவ்வேறு தனித்தனியான பொருளாதார வாழ்வைக் கொண்ட தனித்தனியான பிரதேசங்கள் ஒரே மொழியின் காரணமாக ஒரே தேசமாகக் கருதப்படவும் முடியாது.

## 2

## தேசிய இயக்கமும் தேசிய அரசும்

"தேசிய இயக்கம் என்பது சாராம்சத்தில் முதலாளித்துவ இயக்கம் ஆகும்" (மா/30) என்றார் ஸ்டாலின். "உலகம் முழுவதும் முதலாளித்துவமானது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது" (தேசி/73) என்றார் லெனின். உண்மையில் நிலப்பிரபுத்துவத்தின் மீதான முதலாளித்துவத்தின் வெற்றியும், தேசங்களின் உருவாக்கமும் தேசிய இயக்கங்களுடன் இணைந்ததாகும்.

தேசிய இயக்கம் என்பது என்ன? அது அடிப்படையில் நான்கு பண்புக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. முதலாவதாக ஒரு தேசிய இயக்கம் என்பது மொழி, கலை, இலக்கிய, கலாச்சார மறுமலர்ச்சி இயக்கமாகும். இரண்டாவதாக அது ஒரு விவசாயிகள் இயக்கமாகும். மூன்றாவதாக அது ஒரு சனநாயக இயக்கமாகும். நான்காவதாக அது ஒரு தேசிய அரசை நிறுவுவதற்கான இயக்கமாகும். இவ்வாறு தேசிய இயக்கம் என்பது நான்கு பண்புக் கூறுகளைக் கொண்டிருக்கிறது.

நிலப்பிரபுத்துவத்தின் மீதான முதலாளித்துவத்தின் வெற்றி என்பது மூலதனத்தின் வெற்றியே. இதற்கு முதலாளிகள் விரிவான சந்தையைக் கைப்பற்ற வேண்டும். அதற்கு ஒரேமொழி பேசும் மக்களைக் கொண்ட இணைந்த பிரதேசங்கள் அனைத்தையும் ஒரே அரசின் எல்லைக்குள் கொண்டு வர வேண்டும். அது மட்டுமின்றி சந்தை விரிவாக்கத்திற்கு மக்களிடையே - வாங்குவோருக்கும், விற்போருக்கும் இடையே, வேலை தருவோருக்கும் வேலை பெறுவோருக்கும் இடையே, உற்பத்தியாளனுக்கும் நுகர்வோனுக்கும் இடையே-நெருக்கமான தொடர்பும் சுதந்திரமான, விரிவான வர்க்கப் பகுப்புகளும் உருவாக மொழியின், அதன் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும். எனவேதான் லெனின் கூறினார்: ''மக்கள் தேசிய ரீதியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நெருக்கமாக ஒரு முகப்பட்டிருப்பது முதலாளித்துவத்தின் நவீன தேவைகளில் ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை; ஏனெனில் உள்நாட்டுச் சந்தையை முழுமையாகக் கைப்பற்றுவதற்கும் பொருளாதாரத் தொடர்புகளை முழுச் சுதந்திரமாக அனுபவிப்பதற்கும் முக்கியமாகத் தேவைப்படுவது தேசிய இனமும், மொழிவழிப் பகுப்பும் ஆகும்'' (தேசி/66)

படிப்பகம்

www.padippakam.com



எனவே நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான முதலாளித்துவ இயக்கம் என்பது முதலாவதாக மொழி, கலை, இலக்கிய கலாச்சார மறுமலர்ச்சிக்கான இயககமாக இருக்கிறது என்பது தெளிவு.

நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான முதலாளித்துவத்தின் போராட்டம் தேசிய இன ஒருமைப்பாடு, விரிந்த, சுதந்திரமானவர்க்கப் பகுப்பு, மொழி இலக்கிய மறுமலர்ச்சி ஆகியவற்றுக்கு காரணமாய் இருப்பது மட்டுமின்றி அது இறுதியில் நிலப்பிரபுத்துவ அரசியல், பொருளாதார அமைப்புகள் அனைத்தையும் வீழ்த்துகிறது. இப்போராட்டத்தில் பரந்துபட்ட, மிகப் பின்தங்கிய மக்கள் பகுதியினர் உட்பட சகல பகுதி மக்களும் தமது அரசியல் உரிமைக்கான-தேசிய இன உரிமைக்கான போராட்டத்தில் ஈர்க்கப்பட்டு அரசியல் அரங்கிற்கு வருகின்றனர். வரலாறு காணாத அளவுக்கு இயங்கங்களில் பங்கேற்கின்றனா. அச்சு இலக்கியங்கள் பெருமளவுக்கு வெளியிடப்படுகின்றன. மக்கள் அமைப்புகளும், மக்கள் பிரதிநிதித்துவ சபைகளும் தோன்றுகின்றன. அரசியல் அமைப்புக்குட்பட்ட ஆட்சிமுறை தோன்றுகிறது. இவ்வாறு நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான முதலாளித்துவத்தின் போராட்டம் ஒரு முதலாளித்துவ சனநாயகத்துக்கான இயக்கமாகவும் இருக்கிறது.

மேலும் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான முதலாளித்துவ இயக்கம் சாராம்சத்தில் விவசாயிகள் இயக்கமேயாகும். விவசாயிகள் பங்கேற்பின்றி முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் மீது இறுதி வெற்றி கொள்ள முடியாது. ஸ்டாலின் கூறினார்: "தேசியப் பிரச்சினையின் அடிப்படையும், சாரமும் விவசாயிகள் பிரச்சினையே என்பதில் அய்யமில்லை. இதிலிருந்து தேசிய இயக்கத்தின் முக்கிய படை விவசாயிகளே என்பதும் விவசாயிகள் படையின்றி உண்மையான தேசிய இயக்கம் இருக்க முடியாது என்பதும் தெளிவு" (7/71-72) தேசியப் பிரச்சினை என்பது விவசாயிகள் பிரச்சினையுடன் தேசிய கலாச்சாரம், தேசிய அரசு போன்ற பிரச்சினைகளையும் உள்ளடக்கியது என்பது அவர் கூற்று. எனவே தேசிய இயக்கம் என்பது ஒரு விவசாயிகள் இயக்கமும் ஆகும் என்பதும் தெளிவு.

முதலாளித்துவத்தின் மிக மிகச் சுதந்திரமான, விரிவான வேகமான வளர்ச்சிக்கு வழி செய்யும் கடமைப் பணிகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றவல்லது தேசிய அரசேயாகும். எனவேதான் "ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும் நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்றாகப் பூர்த்தி செய்யப்பட வாய்ப்புள்ள தேசிய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது. மிக மிகத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலக்கை நோக்கி இட்டுச்செல்கின்றன'' (தேசி/73) என்றார் லெனின்.

உலகம் முழுவதும் முதன் முதலாக அய்ரோப்பாவில் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான தேசிய இயக்கங்கள் வெடித்து பிரிட்டன், பிரெஞ்சு, செர்மன், இத்தாலி போன்ற மேற்கு அய்ரோப்பிய நாடுகளில் தேசிய அரசுகள் அமைந்தன.

இத்தகைய தேசிய அரசுகள் அமைவது மேற்கு அய்ரோப்பாவுக்கு மட்டுமல்ல முதலாளித்துவ காலகட்டத்தின் உலகம் முழுவதற்கும் பொதுவானதாகும் என்று லெனின் வலியுறுத்தினார். முற்றிலும்நிலப்பிரபுத்துவம் வீழ்த்தப்படாத எல்லா நாடுகளும் தேசிய அரசுகளை அமைப்பதை நோக்கிய தேசிய இயக்கங்களைக் கடந்தேசென்றாகவேண்டும் என்பது வரலாற்றின் விதியாகும். ''மேற்கு அய்ரோப்பா முழுவதற்கும் ஏன் நாகரிக உலகம் முழுவதற்கும் தேசிய அரசு என்பது முதலாளித்துவ காலகட்டத்தில்மாதிரிப்படிவமானது, வழக்கமானது'' என்ற லெனின், மேற்கு அய்ரோப்பிய நாடுகளை மட்டுமின்றி ஆசியாவில் சப்பானையும், பால்கன் நாடுகள் உதாரணங்களையும் எடுத்துக்காட்டி ''சுதந்திரமான தேசிய அரசில் மட்டுமே பண்ட உற்பத்தியின் மிகவும் முழுமையான வளர்ச்சிக்கும், மிகச் சுதந்திரமான, விரிவான, வேகமான முதலாளித்துவ வளர்ச்சிக்கும் தேவையான நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன'' என்றார். மேலும் ''முற்போக்கான நாகரிகமுற்ற மனித சமுதாயம் முழுவதன் உதாரணமும், பால்கன் நாடு

படிப்பகம்

www.padippakam.com

கள், ஆசியா ஆகியவற்றின் உதாரணமும் தேசிய அரசு என்பது முதலாளித்துவத்தின் விதியும் பொதுவழக்கும் ஆகும் என்பதைக் காட்டுகின்றன'' என்று மீண்டும் வலியுறுத்தினார். மேலும் ஆசியாவில் கூட முதலாளித்துவம் தேசிய இயக்கங்களைத் தோற்றுவித்திருக்கின்றன என்றும் "இவ்வியக்கங்களின் போக்கு ஆசியாவில் தேசிய அரசுகள் உருவாவதற்கு வழிசெய்வதற்கான பாதையை நோக்கிச் செல்லும் போக்கு" என்றும் அவர் கூறினார். (தேசி/73-78)

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் மேற்கு அய்ரோப்பாவில் தேசிய ஒருமை கொண்ட தேசிய அரசுகளை நிறுவின. அவை அந் நாடுகளில் தங்குதடையற்ற விரிவான முதலாளித்துவ வளர்ச்சிக்கு வகை செய்தன. ஆனால் உலகம் முழுவதும் நிகழ்ச்சிகள் இம்முறையில் நடந்தேறவில்லை. முதலாளித்துவத்தின் முழு வளர்ச்சிக்கு முன்னதாகவே சில பெரிய தேசிய இனங்களும், ஏகாதிபத்தியங்களும், பொருளாதார ரீதியில் பின் தங்கிய, நிலப்பிரபுத்துவம் இன்னும் ஒழிக்கப் படாத, முதலாளித்துவம் இன்னும் பலவீனமாக உள்ள, பொருளாதாரம் ஒருங்கிணைந்து இன்னும் தேசங்களாக உருவாகாத பலவீனமான தேசிய இனங்களைப் பலாத்காரமாக வென்று பின்தங்கிய பல்தேசிய அரசுகளையும், காலனிய அரசுகளையும் உருவாக்கின.

இவ்வாறு பலாத்காரமாக உருவாக்கப் பட்ட பல்தேசிய அரசுகளில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய இயக்கங்கள் தமது சொந்த நிலப்பிரபுத்துவ சக்திகளை மட்டும் இன்றி வல்லாதிக்கம் செலுத்தும் ஒடுக்கும் தேசிய இன ஆளும் வர்க்கங்களையும் எதிர்க்க வேண்டியிருந்தது. ஏகாதிபத்தியங்களால் காலனியாக்கப்பட்ட நாடுகளில் தேசிய இயக்கங்கள் ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக இருந்தன.

எனினும் எல்லாவித தேசிய இயக்கங்களின் நோக்கமும் சுதந்திரமான, விரிவான முதலாளித்துவ வளர்ச்சிக்கு வகைசெய்யும் தேசிய அரசு ஒன்றை நிறுவுவதேயாகும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. எனவேதான், ''உலக வரலாற்றில் தேசிய அரசு என்பது ஒரு பொதுவிதியாக இருக்கிறது'' (41/314) என்றும், ''தேசங்கள் என்பவை சமுதாய வளர்ச்சியின் முதலாளித்துவ சகாப்தத்தில் தவிர்க்க முடியாதபடி உண்டாகிற ஒரு படைப்பு, வடிவம்'' (21/72) என்றும், ''எல்லா முதலாளித்துவ சனநாயகப் புரட்சிகளிலும் சுயேச்சையான தேசிய அரசு அமைக்கப்படும் போக்கு காணப்படுகிறது'' (தேசி/159) என்றும் லெனின் கூறினார்.

காலனி நாடுகளிலும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களிலும் எழுச்சியுறும் தேசிய இயக்கங்களின் நோக்கமும் தேசிய அரசை அமைப்பதுதான் எனினும் அது ஒரு தேசிய விடுதலை யுத்தத்தின் மூலமே சாதிக்கப்பட முடியும் என்பது அதன் சிறப்புப் பண்புக்கூறு ஆகும்.

## 3

## சனநாயகப் புரட்சியும் தேசியப் பிரச்சினையும்

சனநாயகப் புரட்சி என்பது என்ன? நிலப்பிரபுத்துவத்தை முற்றாக ஒழித்துக் கட்டும் புரட்சி எழுச்சியே சனநாயகப் புரட்சி எனப்படுகிறது. இது ஒரு முதலாளித்துவப் புரட்சியேயாகும். இப்புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கினால் கூட அதன் சாரம் முதலாளித்துவ சனநாயகப் புரட்சி என்பதிலிருந்து மாறுவதில்லை. நிலப்பிரபுத்துவம் முற்றாக வீழ்த்தப்படும் முன் ஏகாதிபத்தியத்தால் காலனியாக்கப் பட்டிருப்பின் இந்த முதலாளித்துவ சனநாயகப் புரட்சி ஏகாதிபத்தியத்துக்கும் எதிரானதாக இருக்கும்.

முதலாளித்துவ சனநாயகப் புரட்சிக்கும், தேசியப் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம்? இதற்குமுன் தேசியப் பிரச்சினை என்று நாம் எதைக் குறிப்பிடுகிறோம்

படிப்பகம்

www.padippakam.com



என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். நாம் தேசியப் பிரச்சினை என்று கூறுவது ஒரு தேசிய இனம், நவீன தேசமாக வளர்ச்சியடைவதில் உள்ள பிரச்சினையையே. தேசிய இனம் என்பது ஒரு பொதுமொழியையும், பிரதேசத்தையும் கொண்ட மக்கள் சமூகமாகும். அடிமை சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் இத்தகைய தேசிய இன சமூகங்கள் அமைகின்றன. எனினும் அவை தேசங்கள் எனப்படுவதில்லை. தேசங்கள் என்பது நிலப்பிரபுத்துவத்தின் மீது முதலாளித்துவம் வெற்றி கொள்ளும்போதே அமைகின்றன. எனவே முதலாளித்துவ சனநாயகப் புரட்சியும், நவீன தேசங்களின் உருவாக்கமும் உடன் நிகழ்வுகளாகும். வேறொரு வகையில் கூறுவதானால் முதலாளித்துவ சனநாயகப் புரட்சியே நவீன தேசங்கள் உருவாவதற்கான தேசிய இயக்கமாக அமைகிறது.

லெனின் கூறினார் :

"உலகம் முழுவதும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவத்தின் மீது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. பண்ட உற்பத்தியின் முழு வெற்றிக்கு உள்நாட்டுச் சந்தையை முதலாளிகள் கைப்பற்ற வேண்டும். ஒரே மொழிபேசும் மக்களைக் கொண்ட, அரசியல் ரீதியில் அய்க்கியப் படுத்தப்பட்ட நிலப்பரப்புகள் அதற்கு வேண்டும். தம் மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்றுத் திகழ்வதற்கும் முட்டுக்கட்டையாக உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும். இங்கேதான் தேசிய இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கிறது. மனித உறவுகளுக்கு மிக மிக முக்கியமான சாதனம் மொழி. நவீன முதலாளித்துவத்திற்கு ஏற்ற அளவில் உண்மையிலேயே சுதந்திரமான, விரிவான வாணிகத்திற்கும், மக்கள் சுதந்திரமாகவும், விரிவாகவும் பல்வேறு வர்க்கங்களாக அமைவதற்கும். இறுதியாக சந்தைக்கும் ஒவ்வொரு சிறிய, பெரிய உடைமையாளனுக்கும் விற்போருக்கும், வாங்குவோருக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கும் மிக மிக முக்கியமான சூழ்நிலைகள் மொழியின் அய்க்கியமும் தடையற்ற வளர்ச்சியும் தான். ஆகவே ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும், நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்றாகப் பூர்த்தி செய்யப்பட வாய்ப்புள்ள தேசிய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது - மிகமிகத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலக்கை நோக்கி இட்டுச் செல்கின்றன." (தேசி/73)

நிலப்பிரபுத்துவத்தின் கீழ் துண்டு துண்டான பொருளாதார வாழ்க்கையைக் கொண்டிருந்த மக்களை முதலாளித்துவம் ஒரு ஒருங்கிணைந்த பொருளாதார வாழ்க்கையின் கீழ் கொண்டு வருவதுடன், அரசியல் ரீதியிலும் அய்க்கியப்படுத்துகிறது. மக்களுக்கிடையே நெருக்கமான தொடர்புகளையும், விரிவான சுதந்திரமான வர்க்கப் பகுப்புகளையும் ஏற்படுத்துகிறது. இதற்கு ஒரே மொழிபேசும் மக்களும் அரசியல் ரீதியில் அய்க்கியப்படுத்தப்பட்ட நிலப்பரப்பும் அம்மொழியின் அதன் இலக்கியத்தின் தங்கு தடையற்ற வளர்ச்சியும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார் லெனின். "மக்கள் தேசிய ரீதியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நெருக்கமாக ஒரு முகப்படுத்தப்பட்டிருப்பதும்" "தேசிய இனமும், மொழிவழிப் பகுப்பும்" (தேசி/66) அவசியம் என்றார் அவர்.

இவை எல்லாம் சனநாயகப் புரட்சியும், தேசிய இயக்கமும் பிரிக்க முடியாதது என்பதையும் (முதலாளித்துவ) சனநாயகப் புரட்சி என்பது ஒரே மொழி பேசும் தேசிய இன சமூக அடிப்படையிலேயே சாத்தியம் என்பதையும் தெளிவு படுத்துவதாகும். இது முதலாளி வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி, பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி பொருந்தக்கூடியதே.

இது மத அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட பல்தேசிய அரசில், அந்த அடிப்படையிலான தேசிய இயக்கமும், சனநாயகப் புரட்சியும் இருக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. உண்மையில் மத அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல தேசிய இனங்களின் ஒற்றுமை ஒடுக்கும் தேசிய இனத்தின் ஒடுக்குமுறையைப் பாதுகாப்பதே

படிப்பகம்

www.padippakam.com

யாகும். இங்கு மத ஒற்றுமையின் பேரால் தேசிய ஒடுக்குமுறையும், இதனால் ஒடுக்கும், ஒடுக்கப்படும் ஆகிய இரு தேசிய இனங்களின் சனநாயகப் புரட்சியும் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒரு பிற்போக்கான நிலைமையும்தான் நிலவும். "பல்தேசிய அரசு என்பது பின்தங்கிய நிலைமையைக் குறிக்கிறது. அல்லது அது ஒரு விதிவிலக்கு" (தேசி/78) என்று லெனின் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மத அடிப்படையில் ஒரு தேசிய அரசு இருக்க முடியாது. ஒரு தேசிய அரசு என்பது தேசிய இன அடிப்படையிலானது. ஒரே பொதுமொழி பேசும் மக்களையும், பிராந்தியத்தையும் கொண்டது. மத அடிப்படையில் விரிந்த பல்தேசிய அரசு உருவாகலாம். ஆனால் அது தேசிய அரசு அல்ல. மதவாத அரசே. சனநாயக இயக்கங்கள் அங்கு தோன்றும் போது, நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான தேசிய இயக்கங்கள் தோன்றும்போது இயல்பாகவே அந்த மதவாத அரசு சிதறி தேசிய இன அடிப்படையிலான தேசிய அரசுகள் அமைந்துவிடும். அய்ரோப்பா முழுவதும் ஒரே மதம் கிருத்துவ மதம். அம் மதத்தின் கீழ் ஒரே அரசாக இருந்த அய்ரோப்பா,தேசிய இயக்கங்கள்-சனநாயக இயக்கங்கள்-முதலாளித்துவ வளர்ச்சியுடன் இணைந்த வடிவில் தோன்றியபோது தேசிய இன அடிப்படையிலான பல்வேறு தேசிய அரசுகளாகச் சிதறிவிட்டது என்பது வரலாற்று உண்மை. இசுலாமிய நாடுகள் பல ஒரே பிரதேசத்தில் இருந்தாலும் அவை மதத்தால் ஒன்றுபட இயலாமல் சிதறியே உள்ளன. மதத்தால் ஒன்று பட்டிருந்த பாகிஸ்தானிலிருந்துதான் பங்களாதேஷ் தனி நாடாகப் பிரிந்தது. எனவே மதம் பல்வேறு தேசங்களை ஒன்றிணைக்கும் என்பதோ அதன் அடிப்படையில் சனநாயகப் புரட்சி என்பதோ சாத்தியம் இல்லை; மத அடிப்படையிலானபல்தேசிய இன ஒன்றிணைப்பு பிற்போக்கானதும், சனநாயகப் புரட்சிக்கு முற்பட்டதும் ஆகும்.

சனநாயக இயக்கங்கள் என்றாலே அவை தேசிய அரசுகள் அமைக்கும் இலக்குகளைக் கொண்டவையே. இது பொதுவிதி. அதனால்தான் லெனின் தேசிய இன அடிப்படையில் அமையும் அரசு எல்லைகளை 'சனநாயகமானது' என்றும், எங்கெல்ஸ் 'இயல்பான எல்லை' என்றும் கூறினர்.

இரசியாவில் லெனின் தலைமையில் பல்தேசிய அரசு சமூகத்தில் ஒட்டு மொத்தமாக சனநாயகப்புரட்சி நடத்தப்பட்டது உண்மையே. ஆனால் இந்த பல் தேசிய நாட்டு சனநாயகப்புரட்சியில் ஒடுக்கும் தேசத்தின் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் தலைமைப் பாத்திரமும், தீர்மானகரமான பாத்திரமும் ஆற்றியது. அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு அரசுரிமையை-சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது. எந்த தேசிய இனமும் தமது சொந்த தேசிய அரசு என்ற இலக்கை விட்டுவிடவில்லை. புரட்சிக்குப்பின் சில தேசிய இனங்கள் தனி தேசிய அரசுகளை அமைத்துக்கொண்டன. மற்ற தேசிய இனங்கள் தமது சொந்த குடியரசுகளின் ஒன்றியமாகவே புரட்சிக்குப் பிந்திய இரசியாவில் சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தை அமைத்தன. இரசியாவில் முதலாளித்துவம்மீட்டமைக்கப்பட்ட பின் சமீபத்தில் அத் தேசிய இனக் குடியரசுகள் தமது சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் தனித்தனி தேசிய அரசுகளாக அமைத்துக் கொண்டதை அறிவோம். எனவே இரசியப் புரட்சி, தேசிய இனங்களின் தேசிய அரசு என்ற கொள்கையையும் சனநாயகப்புரட்சியானது தேசிய அரசு (அல்லது அரசுரிமை) என்பதை இலக்காகக் கொண்டிருப்பது என்ற கொள்கையையும் உறுதிப்படுத்துவதேயாகும். ஒரு தேசிய இனம் ஒரு தேசிய அரசு என்ற கொள்கை, அதன் சரியான, சனநாயகத் தன்மைகளின் காரணமாக இரசியப் புரட்சியின் வெற்றியையடுத்தே (1920ல்) சர்வதேசிய ரீதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கையாகியது.

எனவே சனநாயகப் புரட்சியில் தேசியப் பிரச்சினை என்பது முக்கியமான பிரிக்கப்பட முடியாத கூறு என்பதும், தேசிய அரசு (உரிமை) என்ற இலக்குடன் இணைக்கப்படாமல் சனநாயகப்புரட்சி வெற்றியடைய முடியாது என்பதும், தேசிய அரசு என்பது

படிப்பகம்

www.padippakam.com



தேசிய இன அடிப்படையில் அமைந்ததன்றி மதம் போன்ற வேறு அடிப்படையில் அமைந்ததல்ல என்பதும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மைகளாகும்.

## 4

## சோசலிசத்திற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தேசியத்திட்டம்

''தேசிய இனம் என்ற கோட்பாடு முதலாளித்துவ சமுதாயத்தில் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது என்பதையும் இந்த சமுதாயத்தைக் கணக்கில் கொண்டு தேசிய இயக்கங்கள் வரலாற்று ரீதியில் முறையானவை என்பதையும் மார்க்சியவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்'' (தேசி/43) சமுதாய வரலாற்றில் முதலாளித்துவ சகாப்தத்தில் தவிர்க்க முடியாத விதியாகிவிட்ட தேசிய இயக்கமும், தேசிய அரசும் வரலாற்று ரீதியில் ஆற்றும் முற்போக்கான, அவசியமான, பாத்திரத்தையும் மார்க்சியவாதிகள் மறுக்கவில்லை. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கம் அதனினும் உயர்ந்ததாகும். அது சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் இலட்சியமாய்க் கொண்டிருக்கின்றது. இந்த இலட்சியத்தை அடைவதற்கான வழி வர்க்கப் போராட்டமே. எனவே முதலாளி வர்க்கம் ஒவ்வொரு தேசிய இயக்கத்தையும் தேசிய அரசையும் முதலாளித்துவ நோக்கங்களுக்கான சாதனங்களாகக் கொள்ளும் அதே வேளையில் பாட்டாளி வர்க்கம்அவற்றை வர்க்கப் போராட்டத்திற்கு சாதகமான நிலைமைகளை உருவாக்குவது என்ற கண்ணோட்டத்தில் அணுகுகிறது.

'' நவீன தேசம் ஒவ்வொன்றும் இரண்டு தேசங்களைக் கொண்டிருக்கின்றன'' (தேசி/39) ஒன்று முதலாளி வர்க்க தேசம்; மற்றொன்று பாட்டாளிவர்க்க தேசம். முதலாளிவர்க்கம் தனது தேசத்திற்குள் பாட்டாளிகளைச் சுரண்டுவதற்கான முழுப்பாதுகாப்பு,பிற தேசங்களின் மீதான மேலாதிக்கம் சர்வதேசிய ரீதியில் மூலதனத்தின் சுரண்டலும், ஆதிக்கமும் என்பவற்றை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. நிலப்பிரபுக்களும் பிற பிற்போக்காளரும் அதன் கூட்டாளிகளாக இருக்கிறார்கள். ஆனால் பாட்டாளி வர்க்கம் தனது தேசத்தில் மத்திய கால மிச்ச மீதங்களை மட்டுமின்றி முதலாளித்துவ சுரண்டலையும் ஒழித்து சோசலிசத்தை நிறுவுவதையும் பிற தேசங்களுடன் சமத்துவ உறவுகளைப் பேணுவதையும் சர்வதேச பாட்டாளிகளின் ஒற்றுமையைச் சாதித்து சர்வதேச மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலம் உலகு தழுவிய சோசலிச இலட்சியங்களை அடைவதையும் தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறது. உழைத்து உழலுகின்ற, சுரண்டப்படுகின்ற மக்கள் அனைவரும் அதனுடன் இருக்கின்றனர். ''அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் தவிர்க்க முடியாத வகையில் சனநாயகம், சோசலிசம் என்பவற்றின் சித்தாந்தங்களைத் தோற்றுவிக்கின்றன" (தேசி 26) இவ்வாறு ஒரே தேசத்தில் இருக்கும் 'முதலாளி வர்க்க தேசம்' ஏகாதிபத்திய நோக்கங்களையும், 'பாட்டாளி வர்க்க தேசம்' சோசலிச நோக்கங்களையும் கொண்டிருக்கின்றன.

எனவேதான் லெனின் முதலாளித்துவ தேசியவாத நோக்கங்களுக்கு எதிராக ''அனைத்து தேசங்களுக்கும் சுய நிர்ணய உரிமை, தேசங்களுக்கிடையே சம உரிமை, அனைத்து தேசப் பாட்டாளிகளுக்கு இடையிலும் அய்க்கியம், இதுதான் மார்க்சியமும், அகில உலக அனுபவமும், ருஷ்ய அனுபவமும் தொழிலாளாகளுக்குப் போதிக்கும் தேசியத் திட்டம்'' (தேசி/164) என்று பிரகடனப்படுத்தினார்.

இக்கொள்கை தேசங்களுக்கிடையிலான தேசியப் பூசல்களை அகற்றுவது; ஒவ்வொரு தேசத்திலும் அதன் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த மூலதனத்துக்கு எதிராகவும் சர்வதேச பாட்டாளி வர்க்கம்

படிப்பகம்

www.padippakam.com



ஒன் றிணைந்து சர்வதேச மூலதனத்துக்கு எதிராகவும் தாக்குதல் தொடுக்கும் வர்க்கப் போராட்டத்திற்குரிய சாதகமான நிலைமை களை உருவாக்குவது என்ற நோக்கைக் கொண்டிக்கிறது என்பது தெளிவு.

எனினும் ஒரு நாட்டின் பாட்டாளி வர்க் கம் தனது சொந்த தேசியத் திட்டத்தை வகுத்துக் கொள்ளும்போது பின்வரும் நான்கு விசயங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக, தேசிய இயக்கங்களைப் பொருத்தவரை ஒன்றுக்கொன்று தீவிரமாக மாறுபடுகின்ற முதலாளித்துவத்தின் இரு காலகட்டங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது கட்டம் முதலாளித்துவ சமுதாயமும் முதலாளித்துவ அரசும் அமைப்பதற்கான முதலாளித்துவ சனநாயக-தேசிய இயக்கங்களின் காலகட்டம். அதாவது மத்திய காலத்தை முழு மையாகத் துடைத்தொழித்து முதலாளித்துவ சனநாயகத்தை முழுவதுமாக நிறுவுவதற் கான கால கட்டம். இரண்டாவது கட்டம் முதலாளித்துவ அரசு முழுவதுமாய் உருப் பெற்றுவிட்ட முதலாளித்துவத்தின் வீழ்ச்சித் தருவாய் என்று கூறக்கூடிய பொதுமக்களின் முதலாளித்துவ சனநாயக இயக்கங்கள் அருகிவிட்ட காலகட்டம். அதாவது முதலா ளித்துவ சனநாயகத்திலிருந்து பாட்டாளி வர்க்க சனநாயகத்திற்குச் செல்லும் கால கட்டம். இவ்விரு காலகட்டங்களில் ஒரு நாடு எந்தக் காலகட்டத்தில் இருக்கிறது பூர்சுவா சனநாயகப் புரட்சிக்காலகட்டத்திலா அல்லது அது முடிவுற்றுவிட்ட காலகட்டத் திலா என்பதை பாட்டாளி வர்க்கம் தீர்மானித் துக் கொள்ள வேண்டும். இதில் எல்லா நாடுகளும் ஒரே மாதிரியாக ஒரே காலகட்டத் தில் இருப்பதில்லை. மேற்கு அய்ரோப்பிய நாடுகளில் பூர்சுவா சனநாயகப் புரட்சி முற்றுப் பெற்றிருந்தபோது கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும், கீழ்திசை நாடு களிலும் அது முற்றுப் பெறாதிருந்ததை லெனின் சுட்டிக்காட்டினார். இத்தகைய நாடுகளில் பூர்சுவா சனநாயகப் புரட்சிக் கட்டத்தைப் புறக்கணித்துவிட்டு பாட்டாளி வர்க்கம் முன்னேறிவிட முடியாது. ஏனெனில் "சனநாயகத்தின் மூலமாக அன்றி பாட்டாளி வர்க்கம் வெற்றிபெற முடியாது" (21/408). அவ்வாறு பூர்சுவா சனநாயகப் புரட்சிக் கட்டத்தை புறக்கணித்துவிட்டு முன்னேற முயன்றால் "நாங்கள் பின்லாந்து தேசம் எதையும் அங்கீகரிக்கப் போவதில்லை- தொழிலாளி வர்க்க பின்லாந்து தேசம் தவிர- என பிரகடனப்படுத்தினால் அதைப்போன்ற முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது உண்மையில் நிலவுவதை நாம் அங்கீகரிக்க மறுத்தால் அது நம்மை அங்கீகரிக்கும்படி நிர்பந்திக்கும்" (29/174) என்றும். "தேசிய ஒடுக்குமுறை இருக்கும் ஒரு நிலையில் தேசிய விடுதலைப் பணியைப் புறக்கணிப்பது சோசலிஸ்டுகளின் கண்ணோட்டத்தில் தவறானது" (தேசி/129) என்றும் லெனின் எச்சரித் தார்.

இரண்டாவதாக, தனது சொந்த நாட்டின் தேசிய இனங்களின் வளர்ச்சி வேகம், தேசிய அமைப்பு, மக்கட்தொகைப் பங்கீடு போன்ற பல்வேறு பிரச்சினைகளி லும் அவற்றின் சிறப்புக்கூறுகளையும், பிற நாடுகளிலிருந்து அவை வேறுபட்டிருக் கும் முறைகளையும் பருண்மையாக வேறு படுத்திக் காண வேண்டும்.

இவ்விரண்டு விசயங்களையும் பருண்மை யாக ஆய்வுசெய்து கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் - "பொதுவான வரலாற்று ரீதி யிலான நிலைமைகளையும், அரசு நிலைமை களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் எந்த நாட்டைச் சேர்ந்த மார்க்சியவாதிகளும் தமது தேசியத் திட்டத்தை வகுக்கும் பேச்சுக்கே இடமில்லை" (தேசி/81)

மூன்றாவதாக, தேசிய இயக்கம் என்பது சார்பற்ற ஒரு முழுமையல்ல. தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி மட்டுமே எல்லா தேசங்களுக்கும் முழுமையான விடுத லையைத் தரமுடியும். இந்நிலையில் ஒடுக் கும் தேசப் பாட்டாளி வர்க்க விடுதலை இயக்கங்களுக்கும், ஒடுக்கப்படும் தேசங் களின் பூர்சுவா விடுதலை இயக்கங் களுக்கும் இடையிலான உறவு மிகுந்த முக்கியத்தும் வாய்ந்ததாகும். ஆனால் "இதில் என்னென்னவிதமான உறவுகள் சாத்தியம் என்பதை முன்கூட்டியே

படிப்பகம்

www.padippakam.com



மதிப்பிட்டுக் கூறமுடியாது" (தேசி/141) அது பருண்மையான நிலைமைகளில் மட்டுமே மதிப்பிடக்கூடியதாகும். எனவே ஒரு நாட்டின் மார்க்சியவாதிகளின் தேசியத்திட்டம் இவ்வுறவுகள் குறித்த பருண்மையான ஆய்வுகளின் அடிப்படையிலும் அமைந்திருப்பது அவசியமாகும்.

நான்காவதாக, இது ஏகாதிபத்திய சகாப்தம் "ஒரு சில மாபெரும் வல்லரசுகள் உலகம் முழுவதும் உள்ள தேசங்களை ஒடுக்குவது தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற சகாப்தமே ஏகாதிபத்தியம்" (சர்/189) என்றும் "மற்ற தேசங்களை ஒடுக்குகின்ற தேசங்கள் இந்த ஒடுக்குமுறையை விரிவுபடுத்தவும் பெருக்கவும் காலனிகளை மறுபடியும் தமக்கிடையே மறுபங்கீடு செய்து கொள்ளவும் செய்கின்ற முயற்சிகளே ஏகாதிபத்தியம்" (சர்/184) என்றும் கூறினார் லெனின். எனவே எந்த ஒரு தேசிய இயக்கத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. இது பாட்டாளி வர்க்கம் தனது "சோசலிசத்திற்கான புரட்சிகர போராட்டத்தை தேசிய பிரச்சினை பற்றிய ஒரு புரட்சிகர திட்டத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்" (21/408) என்பதை வலியுறுத்துகிறது.

## 5

## சுயநிர்ணய உரிமையும் தேசிய விடுதலையும்

### (வரலாற்றுச் சான்றுகளிலிருந்து)

சுயநிர்ணய உரிமை என்பது ஒவ்வொரு தேசிய இனமும் தனித்து தேசிய அரசு அமைத்துக் கொள்வதற்கான உரிமையாகும். சுயநிர்ணயம் என்பது தனித்து தேசிய அரசு அமைத்துக் கொள்வது அல்லது அந்த உரிமையுடன் பிற தேசங்களுடன் சேர்ந்து ஒரு அரசின் கீழ் வாழ்வது என்பதாகும். தேசிய விடுதலை என்பது ஒடுக்கும் தேசத்தின் அல்லது ஏகாதிபத்தியத்தின் காலனியத் தளையை உடைத்தெறிந்து தனி தேசிய அரசை நிறுவிக்கொள்வதாகும்.

பாட்டாளி வர்க்கம் பூர்சுவா தேசிய அரசின் வரலாற்றுப்பாத்திரத்தை அங்கீகரிக்கும் அதே வேளையில் "தேசங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற எதிர்மறைக் கோரிக்கையுடன் மட்டும் தன்னை நிறுத்திக் கொள்கிறது" (தேசி/94)என்றார் லெனின். ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒரு பல் தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனத்திற்கு மட்டுமேயுரிய தனிச்சலுகையாகவே சுயநிர்ணய உரிமை இருக்கிறது. இரசியாவில் பெரிய ருசிய தேசிய இனத்திற்கு மட்டுமே இச்சலுகை இருந்ததை லெனின் சுட்டிக்காட்டினார். எனவே இங்கு அங்கீகரிக்கப்பட வேண்டியிருப்பது ஒடுக்கப்படும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையே என்பது தெளிவு. இதன் பொருள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஒவ்வொரு தேசியக் கோரிக்கை விசயத்திலும், தேசிய விடுதலை-பிரிவினை விசயத்திலும் ஆதரவு அல்லது எதிர்ப்பு என்ற நிலையை பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ளக்கூடாது என்பது அல்ல. மாறாக பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட நலன் என்ற கண்ணோட்டத்தில் அனைத்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும் அதே நேரத்தில் குறிப்பான ஒவ்வொரு தேசியக் கோரிக்கை - பிரிவினை - விடுதலை விசயத்திலும் ஆதரவு அல்லது எதிர்ப்பு என்ற உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்பதேயாகும். எனவேதான் பாட்டாளி வர்க்கம் "எந்த ஒரு தேசியக் கோரிக்கையையும் ஒவ்வொரு தேசியப் பிரிவினையையும் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டம் என்ற கோணத்திலேயே மதிப்பிடுகிறது" (தேசி/96) என்றும் "எல்லா தேசங்களுக்கும் பிரிந்து போகிற உரிமை அளிப்பது; பிரிந்து போகிற பிரச்சனை எழுகிறபோது எல்லா ஏற்றத் தாழ்வுகளையும் எல்லாத் தனித்துவ போக்குகளையும் நீக்கும்

படிப்பகம்

www.padippakam.com

நோக்கத்துடன் அதை அணுகி சீர்தூக்கிப் பார்ப்பது-கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததும், செயல்பூர்வமானதும், சனநாயகம், சுதந்திரம், பாட்டாளி வர்க்க அய்க்கியம் - ஆகியவற்றை உண்மையில் பேணுகிறதுமான கொள்கை இதுதான்" (தேசி/98) என்றும் கூறினார் லெனின்.

ஆனால் இது எந்தக் காரணத்தாலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கே மறுப்பாக முடியாது. ஏனெனில் அது தேசிய ஒடுக்குமுறைக்கும், தேசிய சமத்துவமின்மைக்கும், அதன் காரணமாக ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களைச் சேர்ந்த பாட்டாளிகளிடையேயான தேசிய கசப்புணர்வுகளுக்கும் ஒற்றுமை இன்மைக்கும் அதன் காரணமாக வர்க்கப் போராட்டத்தை பின்னுக்குத் தள்ளி தேசியப் பூசல்களை முதன்மைப்படுத்துவதற்கும், இதன் மூலம் சோசலிச இலட்சியங்களைப் பின்னுக்குத் தள்ளுவதற்கும் ஆதரவளிப்பதாகவே இருக்கும். ''சுயநிர்ணய உரிமையை அல்லது பிரிந்து போகும் உரிமையை மறுப்பதானது மேலோங்கி ஆட்சிபுரியும் தேசத்தின் விசேச உரிமைகளை நடைமுறையில் ஆதரிப்பதாகவே முடியும்'' (தேசி/117) என்றார் லெனின். எனவே பாட்டாளி வர்க்கம் எக்காரணம் கொண்டும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக இருக்க முடியாது.

இக்காரணத்தாலேயே இரசியாவில் ரோசா லக்சம்பர்க் போலந்து தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்கு எதிர்ப்பு தெரிவித்த போது அதைக் கடுமையாகச் சாடினார் லெனின். ''போலந்தின் தேசியவாத பூர்சுவாக்களுக்கு 'உதவக்கூடாதே' என்ற கவலையில் ரோசா லக்சம்பர்க் ருசிய மார்க்சியவாதிகளின் செயல்திட்டத்தில் காணப்படும் பிரிந்து போகும் உரிமையை நிராகரிக்கிறார். அப்படிச் செய்கையில் பெரிய ருசிய கறுப்பு நூற்றுவர்க்கு அவர் உண்மையில் உதவுகிறார்'' என்றும் ''போலந்தில் தேசியவாதத்துக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தின் ஆர்வத்தால் உந்தப்பட்டு ரோசா லக்சம்பர்க் பெரிய -ருசியர்களின் தேசிய வாதத்தை மறந்து விட்டார்'' (தேசி/97) என்றும் கூறினார்.

அதே நேரத்தில் போலந்து சோசலிஸ்ட் கட்சியினரின் தேசியவிடுதலை என்ற கோரிக்கையையும் அவர் ஆதரிக்கவில்லை. அதை ''பூர்சுவா தேசியவாதம்'' என்றும் ''குட்டி பூர்சுவா தீவிர தேசியவாதம்'' என்றும் அவர் சாடினார். 1840-1870களில் மார்க்ஸ் (இரசியாவிலிருந்து) போலந்துபிரிவினையையும் (பிரிட்டனிலிருந்து) அயர்லாந்து பிரிவினையையும் ஆதரித்ததை மேற்கோள்காட்டி போலந்து பிரிவினையை வலியுறுத்தியவர்களுக்கு மார்க்ஸ் அயர்லாந்து, போலந்து பிரிவினையை ஆதரித்தற்கும், போல்சுவிக் கட்சி போலந்து பிரிவினையை ஆதரிக்காததற்கும் கொள்கை அடிப்படை ஒன்றே என்பதை நிறுவினார்.

இங்கிலாந்திலிருந்து அயர்லாந்துபிரிவது ''சாத்தியமற்றது'' என்று முதலில் கருதிய மார்க்ஸ், அது ''தவிர்க்க முடியாதது'' என்று பின்னர் வலியுறுத்தினார். ஆங்கிலேய தொழிலாளி வர்க்கத்தின் கை ஓங்கி அது புரட்சியை முன் நடத்துமானால் அயர்லாந்து விடுதலை சாத்தியம் என முதலில் அவர் கருதினார். ஆனால் ஆங்கிலேய பாட்டாளி வர்க்கம் கணிசமான காலம் மிதவாதிகளுடைய செல்வாக்கின் கீழிருந்து அவர்களுக்கு வால்பிடித்து அவர்களுடைய கொள்கையையே கடைப்பிடித்ததன் மூலம் புரட்சிகர தலைமையற்று நின்றுவிட்டது. அதே நேரத்தில் அயர்லாந்து பூர்சுவா விடுதலை இயக்கம் வலுப்பெற்று புரட்சிகர வடிவங்களை எடுத்தது. அப்போது அயர்லாந்து விடுதலையை ஆதரித்த மார்க்ஸ் ''அயர்லாந்தை இங்கிலாந்து அடிமைப் படுத்தியதால் இங்கிலாந்தில் பிற்போக்கு வலுப்பெற்று ஊட்டம் பெற்றுவிட்டது'' (தேசி/142) என்றும் ''அயர்லாந்து இங்கிலாந்தின் தளையிலிருந்து விடுபடும் வரை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் சுதந்திரம் பெற்றிருக்க முடியாது'' என்றும் ''அயர்லாந்தை விட்டுத் தொலைக்கும்வரை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் எதையும் சாதிக்க முடியாது... இங்கிலாந்தில் ஆங்கிலேயப் பிற்போக்குவாதத்துக்கு மூல

படிப்பகம்

www.padippakam.com



காரணம் அயர்லாந்தை அடிமைப்படுத்தியது தான்'' (தேசி/141)என்றும் கூறினார்.

ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் பிற்போக்கில் ஊட்டம் பெற்றிருந்தபோது அயர்லாந்து பூர்சுவா விடுதலை இயக்கம் புரட்சிகர வடிவங்களை எடுத்திருந்தது. இந்த நிலையில்தான் மார்க்ஸ் அயர்லாந்து விடுதலையை ஆதரித்தார். "'அயர்லாந்து, பிரிட்டிஷ் தொழிலாளர்கள் மார்க்சின் கொள்கையை ஏற்று அயர்லாந்து விடுதலையை தமது முழக்கமாக ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் அது படுமோசமான சந்தர்ப்பவாதமாக இருந்திருக்கும். சனநாயகவாதிகள், சோசலிஸ்டுகள் என்ற முறையில் தங்கள் கடமைகளைக் கைவிட்டதாக இருந்திருக்கும். ஆங்கிலேய பிற்போக்குக்கும், ஆங்கிலேய பூர்சுவாக்களுக்கும் விட்டுக் கொடுப்பதாக இருந்திருக்கும்'' (தேசி/145) என்றார் லெனின்.

1840-1860 களில் ருசியாவிலும் பெரும்பாலான ஸ்லாவ் நாடுகளிலும் பொதுமக்கள் உணர்ச்சியற்ற உறக்கநிலையில் இருந்தபோது, அங்கு சுயேச்சையான பொதுமக்களின் சனநாயக இயக்கங்கள் இல்லாதபோது, போலந்தில் நடைபெற்ற சிறு நிலப்பிரபுக்களின் விடுதலை இயக்கம் ருசிய சனநாயகத்தின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமின்றி, ஸ்லாவ் மற்றும் அய்ரோப்பிய சனநாயகத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் பிரதானமான, பிரமாண்டமான முக்கியத்துவத்தைப் பெற்றதாய் இருந்தது. (தேசி/130) ''அப்போது போலந்து முழுவதுமே-விவசாயிகள் மட்டுமல்ல மேன்மக்களில் பெரும் பகுதியினரும்கூட-புரட்சிகரமாக இருந்தனர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் மரபுகள் மிகவும் பலமானவையாக, ஆழமாக வேரூன்றியவையாக இருந்தன'' (சர்/30) இந்த நிலைமையில் தான் மார்க்ஸ் போலந்தின் விடுதலையை ஆதரித்தார்.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலைமை வேறுமாதிரியாகி விட்டது. ''பீட்டர்ஸ்பர்க், வார்சாவைக் காட்டிலும் மிக அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகரமான மையமாகி விட்டது. ருசியாவின் புரட்சிகர இயக்கம் போலந்து இயக்கத்தைக் காட்டிலும் மாபெரும் சர்வதேச முக்கியத்துவத்தை அடைந்துவிட்டது'' (சர்/31)

இந்த நிலையில்தான் போலந்து தொழிலாளர்களுக்கு தேசியப் பிரச்சினை இரண்டாம்தர முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறிய போலந்து சமூக சனநாயகக் கட்சி ருசியத் தொழிலாளர்களுடனான நெருங்கிய வர்க்கப் போராட்ட ஒற்றுமையை வலியுறுத்தியது. (தேசி/131) லெனின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்மானத்தை வலியுறுத்திய அதே வேளையில் அது பிரிந்து செல்வது பற்றிய கோரிக்கையை ஆதரிக்கவில்லை.

எனினும் ''போலந்தின் உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமைகளில் மாறுதல் ஏற்பட்டு மீண்டும் அது தனியாக பிரிந்து போவதுதான் சரியானது என்கிற நிலை வராது என்று கூறமுடியாது'' என்பதை (மா/33) ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

1905ல் சுவீடனில் புரட்சிகர எழுச்சி எதுவும் இல்லாத நிலையில் நார்வே தானாகவே தீர்மானித்து சுவீடனிலிருந்து பிரிந்தது. தொடர்ந்து நார்வேயின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து வந்த சுவீடன் பாட்டாளி வர்க்கம் இந்தப் பிரிவினையை அங்கீகரித்தது. நார்வே மீது படையெடுக்க வேண்டும் என்று சுவீடன் நிலப்பிரபுக்கள் கூறியபோது அதை சுவீடன் தொழிலாளி வர்க்கம் எதிர்த்தது. சுவீடனிலிருந்து நார்வே பிரிந்ததை லெனினும் ஆதரித்தார். ''அய்ரோப்பிய மன்னர்களாலும், சுவீடன் உயர் குடியினராலும் நார்வே மீது திணிக்கப்பட்ட உறவுகள் களைந்ததால், நார்வே-சுவீடன் தொழிலாளிகளின் உறவுகள் வலுவடைந்தன'' (தேசி/124) என்றார் லெனின்.

மேலும் நார்வே பிரிவினையின்போது நார்வே தேச மக்களில் பெரும்பான்மையினர் முடியாட்சியையே விரும்பினர் ஆனால் பாட்டாளி வர்க்கம் குடியரசை விரும்பியது. எனவே நிலைமை சாதகமாக இருந்தால் புரட்சி அல்லது பெரும்பான்மையின் விருப்பத்துக்கு இணங்கி நின்று தொடர்ந்து பிரச்சாரமும் கிளர்ச்சியும் நடத்துவது

படிப்பகம்

www.padippakam.com



என்பதுதான் நார்வே பாட்டாளி வர்க்கத்தின் நிலை (தேசி/122) என்பதையும் லெனின் விளக்கினார்.

அயர்லாந்து, போலந்து நார்வே ஆகிய மூன்றின் உதாரணங்கள் காட்டுவது என்ன?

முதலாவதாக: ஒடுக்கும் தேசிய இனத்தில் சனநாயக இயக்கங்களோ பாட்டாளி வர்க்க இயக்கங்களோ இன்றி அது பிற்போக்கில் மூழ்கி இருக்கும்போது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை உறுதியாக தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்பதை அயர்லாந்து போலந்து பிரச்சினைகளில் மார்க்சின் அணுகுமுறை தெளிவுபடுத்துகிறது.

இரண்டாவதாக: ஒடுக்கும் தேசிய இனத்தில் சனநாயக இயக்கங்களும், பட்டாளி வர்க்க இயக்கங்களும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தைவிட முன்னணியில் இருக்கும்போது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அவை அங்கீகரிப்பதுடன் இரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கமும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்; ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பிரிவினைக் கோரிக்கையை ஆதரிக்கக்கூடாது என்பதை போலந்து விவகாரத்தில் போல்சுவிக் கட்சியின் அணுகுமுறை உணர்த்துகிறது.

மூன்றாவதாக: ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்க இயக்கம் இருந்து அதைவிட ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசிய விடுதலை இயக்கம் முன்னணியில் இருக்குமாயின் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் பிரிவினையையும் அங்கீகரிக்க வேண்டும். அதே நேரத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் சாத்தியமானால் ஒரு புரட்சிக்குத் தயாராய் இருக்க வேண்டும் என்பதை சுவீடன், நார்வே கட்சிகளின் அணுகுமுறையும் உணர்த்துகின்றன.

தொகுப்பாகக் கூறின் இம்மூன்று உதாரணங்களும் உணர்த்தும் உண்மை என்னவெனில் ஒடுக்கப்படும் தேசத்தின் பாட்டாளி வர்க்க தேசியத்திட்டம் தேசிய விடுதலையை முன்வைப்பதா அல்லது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்த வர்க்கப் போராட்டத்தை முன்வைப்பதா என்பது முற்றிலும் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் பலம் மற்றும் நடத்தையைப் பொருத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதேயாகும்.

அதே நேரத்தில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்றில்லாத, ஆனால் தேசிய ஒடுக்குமுறை உள்ள ஒரு பல் தேசிய நாட்டில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிவர்க்கக் கட்சிகளின் தேசியத்திட்டம் என்னவாக இருக்கும். உதாரணமாக பிரெஞ்சு காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த இந்தோ சீனாவும், காலனிய கால மற்றும் இன்றைய இந்தியாவும், இப்படிப்பட்ட பல் தேசிய நாடுகளாகும். இங்கு ஒடுக்கப்படும் தேசப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் தேசியத் திட்டம் என்னவாக இருக்க வேண்டும் என்பதற்கு வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர் ஹோசிமின்னும் சரியான உதாரணங்களாவர். இந்தோசீன விடுதலை, இந்தோ சீன கம்யூனிஸ்ட் கட்சி என்றிருந்ததை வியட்நாம் தேசிய விடுதலை, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி என மாற்றியே ஹோசிமின் வியட்நாம் புரட்சி யுத்தத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றார். ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத தேசிய ஒடுக்குமுறையுள்ள ஒரு பல் தேசிய இன நாட்டில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த தேசிய விடுதலையையே திட்டமாகக் கொள்ள வேண்டும் என்பதையே வியட்நாம் புரட்சி வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

எனினும் இன்னொருவகைப்பட்ட தேசிய விடுதலைக் கோரிக்கையையும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியாது. போலந்து, அயர்லாந்து விடுதலையை ஆதரித்தது போலவே மார்க்ஸ் 1840-1850ம் ஆண்டுகளில் ஹங்கேரியர்களின் விடுதலை இயக்கத்தையும் ஆதரித்தார். அதே சமயத்தில் செக் மக்கள், தெற்கு ஸ்லாவ் மக்கள் என்கிற இரு தேசிய இனங்களின் விடுதலை இயக்கங்களையும் எதிர்த்தார். ஏனெனில்

படிப்பகம்

www.padippakam.com



செக்குகளும், தெற்கு ஸ்லாவியர்களும் பிற்போக்கு தேசிய இனங்களாக இருந்தனர்; அய்ரோப்பாவில் ரசிய எதேச்சதிகார ஆட்சிக்கு உதவிசெய்யும் 'காவல் நிலையங்களாக' இருந்தனர்: ஹங்கேரியர்களும் போலந்துக்காரர்களும் எதேச்சதிகார ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தபோது செக்குகளும், தென் ஸ்லாவியர்களும் ஜாரியத்திற்கு ஆதரவாக இருந்தனர். ஜாரியம் அய்ரோப்பிய புரட்சி இயக்கத்திற்கே விரோதியாக இருந்ததால் அதற்கு ஆதரவளித்த செக், தென் ஸ்லாவ் தேசிய இனங்களின் தேசிய விடுதலையினை மார்க்ஸ் ஆதரிக்கவில்லை.

சுவீடன்-நார்வே பிரச்சினையில் நார்வேயின் சுயநிர்ணய உரிமையை சுவீடன் தொழிலாளர்கள் ஆதரிப்பது அவர்களுடைய கடமையாக இருந்தது (அப்படி நிபந்தனை அற்ற முறையில் ஆதரிக்காத சுவீடன் தொழிலாளி ஒரு சமூக சனநாயகவாதியாக இருக்க முடியாது என்றார் லெனின்) என்பதை சுட்டிக்காட்டிய லெனின் அதே நேரத்தில் பிரிவினையை ஆதரிப்பது நார்வே தொழிலாளர்களுக்கு ஒரு கடமையாக இருக்கவில்லை என்றும் சில சமயங்களில் (பிரிவினையால் பிரிட்டிசு-செர்மன் யுத்த சாத்தியப்பாடு நிச்சயம் அல்லது சாத்தியம் என்ற நிலை ஏற்படுமானால்) பிரிவினையை எதிர்க்கவும் செய்யலாம் அதுவே அவர்கள் தமது சர்வதேச கடமையினை அப்போது நிறைவேற்றுவதாக அமையும் என்றும் எடுத்துரைத்தார். (கேலி/60,69—70)

செக், தென் ஸ்லாவ் விடுதலையை மார்க்ஸ் எதிர்த்ததற்கும், நார்வே தொழிலாளர்கள் தமது தேசிய பிரிவினையை எதிர்ப்பதற்கு வாய்ப்புள்ள காரணம் என லெனின் கூறுவதற்கும் அடிப்படை ஒன்றே அதாவது ஒரு தேசத்தின் விடுதலை ஒட்டுமொத்த சர்வதேச புரட்சி இயக்கத்தின் நலன்களின் ஒரு பகுதியாகப் பார்க்கப்பட வேண்டும் சர்வதேச புரட்சியின் நலனுக்கு விரோதமாக சர்வதேச எதிரிகளுக்கு ஆதரவாக விளங்குமாயின் அல்லது உலக அரங்கில் மிகப் பெரிய யுத்தங்களுக்கும் அழிவுகளுக்கும் அது காரணமாய் விளங்குமாயின் அத்தகைய தேசிய விடுதலை கோரிக்கைகள்எதிர்க்கப்படவேண்டும்;ஆதரிக்கப்படக்கூடாது என்பதே அது. அய்ரோப்பாவின் ஒட்டுமொத்த புரட்சி நலனுக்கு விரோதமாக இருந்ததால் செக்,தென் ஸ்லாவ் தேசிய விடுதலைக் கோரிக்கையை மார்க்ஸ் எதிர்த்தார்; செர்மனி பிரிட்டிசு இடையிலான அழிவுயுத்த சாத்தியப்பாட்டிற்கு காரணமாக அமைந்துவிடுமெனின் நார்வே பிரிவினையை தொழிலாளர்கள் எதிர்ப்பார்கள் என்றார் லெனின்.

## 6

## தேசியப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையும் வர்க்கப் போராட்ட நலன்களும்

அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, தேசங்களுக்கிடையே சமத்துவம், அனைத்து தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களிடையே ஒற்றுமை பாட்டாளி வர்க்கத்தின் இக்கொள்கையின் அடிப்படையிலேயே ஒவ்வொரு தேசியக் கோரிக்கையையும் பிரிவினைக் கோரிக்கையையும் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டம் என்ற கோணத்தில் மதிப்பீடு செய்து அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரிப்பதுடன் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பிரிவினைக் கோரிக்கையை-தேசிய விடுதலைக் கோரிக்கையை-ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டையும் மார்க்சிஸ்டுகள் மேற்கொள்கிறார்கள்.

அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, தேசங்களுக்கிடையே சமத்துவம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வதும், அத்துடன் குறிப்பான பிரச்சினைகளில் தேசிய விடுதலையை-பிரி

படிப்பகம்

www.padippakam.com



வினையை-ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டை மேற்கொள்வதும் எவ்வகையில் பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கும் வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் உகந்ததாக அமைகிறது ?

சுயநிர்ணய உரிமையையும், சமத்துவத்தையும் மறுப்பது தேசிய ஒடுக்குமுறையே. இது இரு தேசிய இனங்களுக்கிடையே ஒடுக்கும் தேசிய இனம் - ஒடுக்கப்படும் தேசிய இனம், சலுகை பெற்ற தேசிய இனம்-உரிமை மறுக்கப்பட்ட தேசிய இனம் என்ற பிளவையும் ஏற்படுத்துகிறது. இது இரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்திடையேயான பிளவுக்கும் காரணமாகிறது என்பதுடன் தேசியப் பூசல்களுக்கும் காரணமாகிறது. தேசியப் பூசல்கள் ஒவ்வொரு தேசிய இனத்திலும் மூலதனத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளுவதுடன் மூலதனத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையையும் சிதறடிக்கிறது. இதற்கு மாறாக சுயநிர்ணய உரிமையும் சமத்துவமும் அங்கீகரிக்கப்படுவது (இதை அங்கீகரிக்க வேண்டியவர்கள் முதன்மையாக ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளிகள்தாம்) ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிகளுக்கு ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளிகள் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் என்பதுடன் அது தேசியப் பூசல்களை இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளிவிடும்; ஒவ்வொரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கமும் தனது சொந்த மூலதனத்தை எதிர்த்துப் போராடுவதையும் சர்வதேசிய மூலதனத்துக்கு எதிராக ஒன்றுபடுவதையும் இது சாத்தியமாக்கும். இவ்வாறு தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் தேசங்களிடையிலான சமத்துவத்தையும் அங்கீகரிப்பது, வர்க்கப் போராட்டத்துக்கும் வர்க்க ஒற்றுமைக்கும். அவசியமான நிபந்தனைகளாகின்றன. எனவேதான் "பாட்டாளிகளின் அய்க்கியம் பற்றிய நலன்களும், அவர்களது வர்க்க ஒற்றுமையின் நலன்களும் தேசிய இனங்களின் பிரியும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என கோருகின்றன" (தேசி/147) என்று பிளாக்கனவ் எழுதியதை ஆதரித்து எழுதினார் லெனின்.

எனினும் ஒடுக்கப்படும் தேசிய இனம் பிரிவினைக் கோரிக்கையை - விடுதலைக் கோரிக்கையை எழுப்பும் குறிப்பான காலங்களில் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் தேசிய சமத்துவத்தையும் அங்கீகரிப்பதாகக் கூறுவது மட்டும் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கும், வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் போதுமானதல்ல. அவற்றை அங்கீகரிப்பதுடன் கூடவே தேசிய விடுதலைக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு என்ற குறிப்பான நிலைப்பாட்டையும் மேற்கொள்ள வேண்டும். ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் ஆதரவு-சாத்தியமானால் தலைமை ஏற்பது-அல்லது எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். இம்முடிவுகள் ஒவ்வொரு பிரச்சினையிலும் பருண்மையான நிலைமைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பருண்மையான முடிவுகளாகும். இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் மட்டுமே பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடும். வர்க்கப் போராட்ட நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

தேசிய இனங்களின் சுயநிர்ணயம் சம்பந்தமாக மூன்றுவித நாடுகளைக் குறிப்பிட்ட லெனின் (தேசி/185) அவற்றில் ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியக் கடமையை—பாட்டாளிவர்க்க ஒற்றுமை, வர்க்கப் போராட்ட நலன் என்பதற்கு அதுவே முதல்நிபந்தனை—தெளிவுபடுத்தினார். பூர்சுவா முற்போக்கு தேசிய இயக்கங்கள்வெகுநாட்களுக்கு முன்பே முடிந்து ஏகாதிபத்தியங்களாக மாறிவிட்ட மேற்கு அய்ரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் அவற்றால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின், காலனி நாடுகளின் உடனடி சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்றார். பூர்சுவா தேசிய இயக்கங்கள் முடிவடையாத-நிகழ்காலத்திற்குரியதாக உள்ள ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களைக் கொண்ட பல் தேசிய சமூகங்களில் உள்ள ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதன் மூலம் ஒடுக்

www.padippakam.com



கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் அய்க்கியப் பட வேண்டும் என்றார். பூர்சுவா தேசிய இயக்கங்கள் தொடக்க நிலையில் உள்ள காலனி, அரைக்காலனி நாடுகளில் உள்ள தேசிய விடுதலை இயக்கங்களுக்கு-புரட்சிகர சக்திகளுக்கு ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கம் உறுதியான ஆதரவு தரவேண்டும் என்றார்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பாதுகாப்பதில் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளையே லெனின் எப்போதும் முதன்மையாக வலியுறுத்தி வந்தார். "ஒடுக்கும் நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களைச் சர்வதேசிய உணர்வில் பயிற்றும்போது ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்குப் பிரிந்துபோகும் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்பதை ஆதரித்து அதற்காகப் போராட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இது இல்லாவிட்டால் சர்வதேசியம் என்பது இருக்க முடியாது. ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த சமூக சனநாயகவாதிகள் அத்தகைய பிரச்சாரத்தை செய்யத் தவறினால் அவ்வாறு தவறிய ஒவ்வொருவரையும் ஏகாதிபத்தியவாதி என்றும், கயவர் என்றும் கருதுவது நமது உரிமையும் கடமையும் ஆகும்'' (தேசி/236) என்றும் ''சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை ஒடுக்கும் தேசங்களைச் சேர்ந்த சோசலிஸ்டுகளின் நடத்தையை ஆதாரமாகக் கொண்டு திகழ்கிறது'' (21/293) என்றும் அவர் கூறினார்.

ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பிற்போக்கால் ஊட்டம் பெற்றிருக்கும் போது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலையை ஆதரிக்க வேண்டும் என்பதற்கு மார்க்ஸ் அயர்லாந்து விடுதலையை ஆதரித்தது உதாரணமாகும். இந்த விடுதலையால் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் பிற்போக்கு ஊட்டம் வற்றி அது 'ஏதும் செய்ய முடியாது' என்ற நிலைக்கு முடிவு கட்டப்படும் என்று மார்க்ஸ் கருதினார். மேலும் இத் தேசிய விடுதலையினால் ஒடுக்கும் தேசிய இனத்திலும் தேசியப் பிரச்சினை இரண்டாம்பட்சமாகி வர்க்கப் போராட்டம் முதன்மையாகும். இவ்வாறு இவ்விசயத்தில் வர்க்கப் போராட்டமும் அதனால் வர்க்க ஒற்றுமையும் (ஒடுக்கும் தேசிய இனத்தின் பிற்போக்கு ஊட்டம் வற்றும்போது அது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்துடன் வர்க்கப் போராட்டத்தில் ஒன்றுபடுவதும் சாத்தியமாகும்) பயன் பெறுகிறது.

மற்றொரு உதாரணமாக, ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பலவீனமாக இருக்கும்போது-தனது சொந்த ஆளும் வர்க்கத்தைத் தூக்கி எறியும் போராட்டத்தில் உடனடியாகத் தலைமை ஏற்காத நிலையில் இருக்கும்போது (உதாரணம் சுவீடன் பாட்டாளி வர்க்கம்) அது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் அது பிரிந்து போகும் போது முழு ஆதரவும் தருவது (சுவீடனிலிருந்து நார்வே பிரிந்து சென்றபோது அதை சுவீடன் பாட்டாளி வர்க்கம் அங்கீகரித்தது) பாட்டாளி வர்க்க ஒற்றுமையை பிளவுபடுத்துவதாகும் என்று வாதாடியவர்களுக்கு எதிராக ''நார்வே, சுவீடன் மக்களின் பொதுநலன்களும் அவர்களின் நெருங்கிய உறவும்தான் சுவிடனிலிருந்து நார்வே பிரிந்ததால் பயன் பெற்றன'' (20/222) என்றும் ''சுவீடன், நார்வே ஆகிய இரு பூர்சுவாக்களுக்கு எதிரான போராட்டத்தில் இரு தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் சம அந்தஸ்தையும், வர்க்க ஒருமைப்பாட்டையும் தங்களால் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதை சுவீடன் தொழிலாளர்கள் நிரூபித்து விட்டார்கள்'' (தேசி/125) என்றும் லெனின் கூறினார். சுவீடனிலிருந்து நார்வே பிரிந்ததன் மூலம் தேசியப் பூசல் பின்னுக்குத் தள்ளப்பட்டு தமது சொந்த முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தை இரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கமும் முதன்மைப்படுத்த முடிந்ததையே இங்கு லெனின் குறிப்பிடுகிறார். இதன் மூலம் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடும் வர்க்கப் போராட்ட நலனும் இலாபம் அடைந்தது.

அடுத்து ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பலமானதாக இருந்து

படிப்பகம்

www.padippakam.com



அது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்குமானால் அதன் மூலம் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்துடன் அது ஐக்கியப்பட முடியும். இத்தகைய நிலைமைகளில் ஒடுக்கப்படும் தேசிய இனத்திலிருந்து பிரிவினைக் கோரிக்கை எழுமானால் அது பிற்போக்கானது; தமது சொந்த பூர்சுவா தேசியவாத நலன்களைக் காப்பதை நோக்கமாகக் கொண்டது என்பது மட்டுமின்றி ஒன்றுசேர்ந்து பொது எதிரியை— ஒடுக்கும் தேசிய இன ஆளும் வர்க்கத்தை— எதிர்த்துப் போராடி வீழ்த்துவதற்கான வாய்ப்பை நிராகரிப்பதன் மூலம் அதற்கு மறைமுகமாக துணை செய்வதும் ஆகும். எனவேதான் இரசிய பெருந்தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்க இயக்கம் பலமாகவும் அனைத்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகப் போராடுவதாகவும் புரட்சியின் முக்கிய சக்தியாகவும் இருந்தபோது அதனுடன் ஒன்றுபட்டு போராடுவதற்குப் பதிலாக-போலந்தில் ஒரு பிரிவினர் பிரிந்து போக வேண்டும் என கோரியதை லெனின் எதிர்த்தார். இத்தகைய நிலைமைகளில் ஒடுக்கும்-ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பாட்டாளிகளுக்கிடையேயான ஒற்றுமையை நிராகரித்து ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பிரிவினையைக் கோருவது தேசியப் பூசல்களை இரண்டாம்பட்ச நிலைக்குத் தள்ளுவதற்கான வாய்ப்பை நிராகரித்து வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் வர்க்க ஒற்றுமை நலன்களுக்கும் ஊறு செய்வதாகும். இத்தகைய நிலைமைகளில் அதாவது ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை- பிரிந்து போகும் உரிமையை அங்கீகரித்து பிரச்சாரம் செய்யும்போது ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் அதை ஏற்று ''ஐக்கியப்படும் உரிமைக்காக'' தனது தேசிய இனத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டும்; இவ்வாறு ''தேசிய குறுகிய மனப்பான்மை, தனிநதி நித்தல், ஒதுங்கி வாழ்தல் ஆகியவற்றுக்கு எதிராகப் போராட வேண்டும்'' (தேசி/137) என்றார் லெனின்.

அதே போல் ஒரு தேசிய இனத்தின் விடுதலைக் கோரிக்கை உலகப்புரட்சியின் எதிரிக்கு பிற்போக்குவாத சக்திகளுக்கு சாதகமாக அமையுமெனில் அத்தகைய நிலைமைகளிலும் பேரழிவு கொண்ட யுத்தங்களுக்குக் காரணமாகிவிடக்கூடும் எனில் அத்தகைய நிலைமைகளிலும் அத் தேசிய இனப் பாட்டாளி வர்க்கமே அவ்விடுதலைக் கோரிக்கையை எதிர்க்க வேண்டும். இது உலகப் பாட்டாளி வர்க்க நலன்களுக்குப் பொதுவாக மட்டுமின்றி ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்ககத்தின் குறிப்பான நலன்களுக்கும் கூட அவசியமானது. இது ''முழுமையையும் பொதுவையும் ஏற்றுக்கொள்வதற்கான, பொதுவின் நலன்களுக்கு தனியின் நலன்கள் கீழ்ப்பட்டவை'' என்பதற்கான போராட்டமாகும். (தேசி/237) இப்போராட்டம் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துடன் ஒற்றுமையைப் பேணுவதற்கும் தேசிய, சர்வதேசிய வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் அவசியமாகும்.

அதே நேரத்தில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்றில்லாத ஆனால் தேசிய ஒடுக்கு முறை உள்ள ஒரு பல் தேசிய இன நாட்டில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தமது சொந்த தேசிய விடுதலையை தமது தேசியத் திட்டமாகக் கொள்வதே பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கும், வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் உகந்ததாகும். காரணம் தேசிய ஒடுக்குமுறை இருக்கும் இடத்தில் பாட்டாளி வர்க்கம் தேசிய விடுதலையைப் புறக்கணிக்க முடியாது அவ்வாறு புறக்கணித்தால் அந்த தேசிய இனங்கள் பூர்சுவா தேசியவாதத்துக்குப் பலியாகி அதன் விளைவாக பாட்டாளி வர்க்க ஒற்றுமையும், வர்க்கப்போராட்ட நலன்களும் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும். ஒடுக்கும் தேசிய இனம் இருந்து அதில் பலம்வாய்ந்த பாட்டாளிவர்க்க இயக்கம் இருக்குமானால் அதன் வெற்றி பிற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய விடுதலைக்கும் வழிவகுத்து விடும் என்பதால் அத்தகைய நிலைமையில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கும்

படிப்பகம்

www.padippakam.com



தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்துடன் சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கையுடன் இணைவது சாத்தியம். ஒடுக்கும் தேசிய இனமே இல்லாத நிலையில் அதில் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்க இயக்கம், அது ஒடுக்கப்படும்தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உறுதியளிப்பது அதையேற்று ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்க இயக்கம் அதனுடன் ஒன்றுபடுவது என்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் இடம் இல்லை. எனவே இத்தகைய நிலைமையில் ஒடுக்கப் படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தேசிய விடுதலையை தனது தேசியத் திட்டமாக வைத்துக் கொள்ளாவிடில் அது மக்களை பூர்சுவா தேசிய வாதத்துக்குப் பலியாக்கி வர்க்கப் போராட்ட நலன்களுக் கும், வர்க்க ஒற்றுமைக்கும் தீங்கு பயப்ப தாகவே இருக்கும். தேசிய விடுதலையைத் தனது தேசியத் திட்டமாகக் கொள்ளும் போது அது தனது மக்களை பூர்சுவா தேசிய வாதத்திலிருந்து மீட்டு பிறதேசிய இனங் களுடன் சமத்துவ, சகோதரத்துவ உறவைப் பேணவும், அதன் மூலம் விடுதலையைத் துரிதப்படுத்தி வர்க்கப் போராட்டத்திற்கு மிகுந்த சாதகமான நிலையை உருவாக் கவும் முடியும்.

## 7

## பல்தேசிய அரசு சமூகத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி

ஒடுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங் களைக் கொண்ட ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி எப்படி அமைய வேண்டும் ? ஒரு அரசின் கீழ் ஒரு கட்சி என்ற கோட்பாட்டின்படியா, ஒரு தேசிய இனத்திற்கு - தேசத்திற்கு ஒரு கட்சி என்ற கோட்பாட்டின்படியா ?

பாட்டாளி வர்க்கக் கட்சி ஒவ்வொன்றும் ஒரு வேலைத்திட்டத்தைக் கொண்டதாகும். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைதிட்டங்களுடன் ஒரு கட்சி இயங்க முடியாது. அவ்வாறு நோக் கின் ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனம் மட்டுமே சலுகையாக சுய நிர்ணய உரிமை பெற்றதாக இருக்கிறது. மற்ற ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு அவ் வுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த ஆளும்வர்க்கங்களைஎதிர்த்த வர்க்கப் போராட்டத்தை எதிர்கொள்ளும் அதே வேளையில்-ஒடுக்கப்படும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் உடனடியாக தேசிய விடுதலை மூலம் தேசிய அரசு அமைத்தல் என்ற கடமையினை எதிர் கொள்கிறது. எனவே இரு தேசிய இனப் பாட்டாளிகளுக்கும் வேலைத்திட்டம்ஒன்றாக இல்லை. இந்நிலையில் அவை எதிர்கொள் ளும் வேறுபட்ட கடமைகளின் காரணமாக அவை தனித்தனிக் கட்சிகளாக அமைவதே தர்க்கப் பொருத்தமாகும்.

ஆனால் ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பலமாகவும், புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் நிலையிலும் இருக் குமாயின், (இரசியா, சீனா போல) இரு தேசிய இனப் பாட்டாளிகளும் ஒரே வேலைத் திட்டத்தின் கீழ் ஒரே கட்சியில் இணைவதும் சாத்தியமே. அதாவது ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரித்து ஆதரித்து அதற்காகப் போராடு மாயின் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தேசிய விடுதலை என்ற கோரிக் கையை தானும் சுயநிர்ணய உரிமை என்ப தாக மாற்றிக் கொண்டு அதனுடன் ஒரே கட்சியில் ஒன்றிணைய முடியும்; இது சாத்தி யம் என்பது மட்டும் அல்ல, இத்தகைய நிலைமையில் இதுவே பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் ஆகும். காரணம் ஒடுக்கும் தேசியஇனப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி பிற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்கும் வழி வகுக்கக் கூடியதாகும்.

ஆனால் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாத நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் அதன் பாட்டாளி வர்க்க இயக்கம் முன்வைக்கும் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு ஒன்றுபடுவ தற்கே இடமில்லை. ஒடுக்கப்படும் தேசிய

படிப்பகம்

www.padippakam.com



இனங்களின் எதன் ஒன்றின் விடுதலையும், பிறவற்றின் தேசிய விடுதலைக்கும் வழி வகுக்காது என்பதால் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் அனைத்தும் தேசிய விடுதலை என்ற தமது தேசியத் திட்டத்தை சுயநிர்ணய உரிமை என மாற்றிக் கொண்டு ஒன்றிணை வதற்கான வாய்ப்பும் இல்லை. இதனால் இத்தகைய நாடுகளில் ஒவ்வொரு தேசிய இனப் பாட்டாளி வர்க்கக் கட்சியும் தமது சொந்த தேசிய விடுதலைத் திட்டத்துடன் தனித்தனிக் கட்சியாக அமைவதன்றி வேறு வழி எதுவும் இல்லை.

எனவே ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி அரசு எல்லையின் அடிப்படையில் அமைவதா தேசிய இன பிராந்திய எல்லை அடிப்படையில் அமைவதா என்பது முற்றிலும் ஒடுக்கும் தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் பலத்தையும், நடத்தையையும் சார்ந்தே இருக்கிறது. ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாத நிலையில் பாட்டாளி வர்க்கக் கட்சி தேசிய இன பிராந்திய எல்லை அடிப்படையில் அமைவது என்பதில் விவாதத் திற்கே இடமில்லை.

இவ்வாறு கூறும்போது இது பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு எதிரானது என்றும், பிளவுபடுத்துவது என்றும், ஒருமைப்படுத்தப் பட்ட பெரிய அரசை பிளவுபடுத்தி அதன் மூலம் பொருளுற்பத்தி வளர்ச்சிக்கும் வர்க்கப் போராட்ட நலன்களுக்கும் உள்ள கூடுதலான சாதகமான நிலைமைகளைக் கெடுக்கும் பிற் போக்கு நடவடிக்கை என்றும் ஏற்கனவே ஒரு அரசுக்குள் ஒன்றுபட்டுள்ள பல்தேசிய இன மக்களை தேசிய இன ரீதியில் பிளவு படுத்துவது என்றும் வர்க்கப் போராட்டத்தை கைவிடுவது, தேசிய வாதத்துக்குப் பலியா வது என்றும் கூறப்படும் விமர்சனங்களை நாம் அறிவோம். (இதுவரை இத்தகைய விமர்சனங்களைச் சார்ந்தே தவறான நிலைப் பாடுகளை நாமும் கொண்டிருந்தோம்) ஆனால் இவை அனைத்தும் மார்க்சிய-லெனி னியத்துக்கு உட்படாத தவறான விமர்சனங் களே. உண்மையில் இந்த விமர்சனங்கள் எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் வைக்கப்படுகின்றனவோ அந்தக் கோட்பாடு களே இந்த விமர்சனங்களுக்குரியனவாகும்.

ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பிற்போக்கு ஊட்டம் பெற்றிருக்கும் போது அல்லது பலவீனமாயிருக்கும்போது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் பிரிந்து செல்வதால் பாட்டாளி வர்க்க ஒற்றுமையும், வர்க்கப் போராட்ட நலனும் பலம் பெறும் விசயத்தை அயர்லாந்து, நார்வே உதாரணங் கள் மூலம் லெனின் தெளிவுபடுத்தியதை ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். எனவே ஒரு தேசிய இனம் பிரிந்து சென்று தனி தேசிய அரசு அமைக்கிறது என்றாலே அது பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கு எதிரானது என்ற வாதம் தவறானதும் உண்மைக்குப் புறம்பானதும் ஆகும். பல சமயங்களில் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கும் வர்க்கப் போராட்ட நலனுக்கும் பிரிவினை அவசியமாகிறது என்பதே உண்மை.

எனவே பருண்மையான நிலைமைகள் குறித்த ஆய்வின்றி ஒரு அரசின் எல்லைக் குள் ஒரு கட்சி என்ற கோட்பாடு முன் வைக்கப்படுமானால் அதில் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் மட்டுமே எஞ்சியிருக்கும்.

பாட்டாளி வர்க்கம் இரண்டு வகையில் அமைந்த அரசு எல்லைகளை மட்டுமே சனநாயகப்பூர்வமானதாக ஏற்றுக் கொள் கிறது. முதலாவது: தேசிய இன அடிப் படையில்-மொழிஉணர்வு அடிப்படையில் அமைந்த தேசிய அரசு எல்லைகள் இத்தகைய எல்லைகளை இயற்கையானது என்று எங்கெல்சும் 'சனநாயக முறையிலா னது' என்று லெனினும் (தேசி/200-1) அழைத்தார்கள். மற்றொன்று ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் தாமாக விரும்பி பிரிந்துபோகும் உரிமையுடன் இணைந்து அமைத்துக் கொண்ட அரசு எல்லைகள். இதை 'சனநாயக ரீதியான மையப்பாடு' (தேசி/62) என்று லெனின் அழைத்தார்.

இவ்விருவகை சனநாயக ரீதியிலமைந்த அரசு எல்லைகளைத் தவிர்த்து வல்லாதிக் கத்தின் மூலம் அமைந்த அரசு எல்லைகளை "சனநாயக முறையில்" மக்களின் உணர்வு களைக் கவனித்து மீண்டும் திருத்தி வரையும் சோசலிஸ்டுகளின் கடமை குறித்தே லெனின் வலியுறுத்தினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் எப்போதுமே வல்லாதிக்கத்தின் மூலம் வரையப்பட்ட அரசு எல்லைகளைப் பொருட்படுத்தவில்லை. மாறாக "குறிப்பிட்ட அரசின் வரலாற்றில் எம்மாறுதல்கள் நிகழ்ந்தாலும், பூர்சுவாக்களால் தனி அரசுகளின் எல்லைகள் எவ்வாறு மாற்றப்பட்டாலும்" (தேசி/132) பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை நீடிப்பது பற்றி மட்டுமே அவர் கவலைப்பட்டார். சுயநிர்ணய உரிமையின் காரணமாக இரசியா தனித்தனி குடியரசுகளாகச் சிதறிவிடும் என்றவர்களுக்குப் பதில் சொல்லும்போது "இதற்காக நாம் அஞ்சவில்லை, சுதந்திரக் குடியரசுகளின் எண்ணிக்கை எத்தனையானாலும் நாம் அஞ்சவில்லை. அரசு எல்லைகள் எப்படி வரையப்பட்டிருக்கின்றன என்பது நமக்கு முக்கியமானதல்ல. ஆனால் எல்லா தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தில் தேசிய இன வேறுபாடின்றி தொடர்ந்து கூட்டாக இருப்பதுதான் நமக்கு முக்கியமானது" (26/344) என்றார்.

"அரசியல் ரீதியில் பிரிந்துபோகும் சுதந்திரம்-இது அரசின் எல்லைக்கோடுகளை வரைவதைக் குறிக்கிறது" (தேசி/19g) என்ற லெனின் இரசியாவில் "எந்தக் குறிப்பிட்ட தேசிய வளர்ச்சிப் பாதையைப் பற்றியும் உத்திரவாதம் அளிக்க முடியாது" என்றும் "உதாரணமாக உக்ரேய்ன் ஒரு சுதந்திர அரசாக அமையுமா என்பது முன்கூட்டியே அறியமுடியாத ஆயிரம் காரணங்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று" (தேசி/99) என்றும் கூறினார். பின்னர் பின்லாந்து, போலந்து தேசிய இனங்கள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து சென்றதை லெனின் அங்கீகரித்தார்.

இவை எல்லாம் பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காக மீண்டும் அரசு எல்லைகளை சனநாயக ரீதியில் வரைவது பற்றிதான் மார்க்சிஸ்டுகள் கவலைப்படுகிறார்களே தவிர பலாத்காரமாக வல்லாதிக்கமாக உருவாக்கப்பட்ட அரசு எல்லைகளைப் பாதுகாப்பது பற்றியல்ல என்பதைத் தெளிவுபடுத்தப் போதுமான சான்றுகளாகும்.

"முதலாளித்துவ உற்பத்தி சக்திகளின் விரிவான, துரிதமான வளர்ச்சிக்கு பரந்த அரசியல் ரீதியில் நெருக்கமான, ஒன்றிணைந்த அய்க்கியப்பட்ட பிரதேசங்கள்தான் தேவை" (தேசி/61) என்றும், "மத்திய கால ஒற்றுமையின்மையில் இருந்து எதிர்கால அனைத்துலக சோசலிச அய்க்கியத்திற்கான பாதையில் இந்தப் பெரிய அதிகார மையப்பாடு பெற்ற அரசானது வரலாற்று ரீதியில் பிரமாண்டமான முன்னேற்றம், (முதலாளித்துவத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்த) அத்தகையதொரு அரசின் வழியாகத்தான் எந்த ஒரு பாதையும் சோசலிசத்தை நோக்கிச் செல்ல முடியும்" (தேசி/62) என்றும் "பட்டாளி வர்க்கம் எவ்வளவு பெரிதாக முடியுமோ அவ்வளவு பெரிதான ஓர் அரசை உருவாக்கவே முயல்கிறது. காரணம் இது உழைக்கும் மக்களுக்குச் சாதகமானது. இது தேசங்களை ஒன்றுக்கொன்று மேலும் நெருக்கமாக இணையச் செய்கிறது. அவை வருங்காலத்தில் முற்றிலும் இணையும்படி செய்கிறது'' (சர்/251) என்றும் லெனின் எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டி வல்லாதிக்க முறையில் அமைந்த பெரிய பல்தேசிய இன அரசுகளின் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வாதிடுகின்றவர்கள் கூற்றை "பல்தேசிய இன அரசு என்பது பின்தங்கிய நிலையைக் குறிக்கிறது அல்லது அது ஒரு விதிவிலக்கு" (தேசி/78) என்கிற காவுத்ஸ்கியின் வாதத்தினைஆதரித்தபோதும் "ஆயினும் மையபபாட்டை ஆதரிக்கும்போது, நாம் சனநாயக மையப்பாட்டையே ஆதரிக்கிறோம் என்பதை மறந்து விடுவது மன்னிக்க முடியாதது" (தேசி/62) என்று கூறும் போதும், சிறிய நாடுகளைவிட பெரிய நாடுகளை இயல்பாக மார்க்சியவாதிகள் விரும்புவதற்கு முதல் நிபந்தனையாக, "மற்ற எல்லா நிலைமைகளும் சரிசமமாக இருக்க வேண்டும்" (தேசி 16)என்பதை வலியுறுத்திய போதும், "ஆனால் இந்த நோக்கங்களை வன்முறை மூலம் அடைவதற்கு விரும்பவில்லை; மாறாக அனைத்து தேசங்களின் தொழிலாளர் மற்றும் உழைக்கும் மக்களின் சுதந்திரமான சகோதர ஒற்றுமை மூலம் மட்டுமே அடைய விரும்புகிறது" (சர்/252) என்று எழுதும்போதும் லெனினே மறுத்து விடுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



பல்தேசிய அரசின் கீழ் அது வல்லாதிக்கத்தால் ஏற்பட்டதுதான் என்றாலும்கூட பொருளாதார ரீதியிலான இணைப்பும், குவிவும் ஏற்பட்டு விட்டதைச் சுட்டிக்காட்டி இந்நிலையில் பிரிவினை என்பது பிற்போக்கானதும் சாத்தியமற்றதுமாகும் என்று வாதிட்டவர்களுக்கு எதிராக இது "ஏகாதிபத்திய பொருளாதாரவாதம்" என்று லெனின் பதில் அளித்தார். மக்களின் மொழி, உணர்வுகள் அடிப்படையில் தேசிய இன அடிப்படையில் அவர்களுடைய உணர்வுகளையும் சித்தத்தையும் மதித்து அரசு எல்லைகளை மறுவரைவு செய்யாமல் ஏகாதிபத்தியங்கள் ஏற்கனவே இராணுவ ரீதியில் கைப்பற்றி பொருளாதார ரீதியிலும் இணைத்துவிட்டதை முற்போக்கானது என்றும், அதைப் பிரிப்பது பொருளுற்பத்தி வளர்ச்சிக்குத் தடை என்றும் வாதிடுவது— போலந்து நண்பர்கள் இவ்வாறு வாதிட்டார்கள்—"ஏகாதிபத்திய பொருளாதாரவாதமே" (தேசி/200) என்று அவர் அடையாளம் காட்டினார்.

மேலும் இங்கிலாந்துடன் அயர்லாந்து கொண்டிருந்த நெருக்கமான பொருளாதாரப் பிணைப்பும், சார்பும் மார்க்ஸ் அயர்லாந்து விடுதலைக்கு ஆதரவு தருவதைத் தடுக்கவில்லை என்பதையும், ஏகாதிபத்தியத்தின் கீழ் பொருளாதாரச் சார்பு கொண்டவையாக மாறிவிட்ட காலனிகளின் விடுதலைகூட இந்த ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளின் கருத்தோட்டத்தில் பிற்போக்கானதாக; சாத்தியமற்றதாக மாறி விட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்து ஒரே அரசு எல்லைக்குள் இணைந்து இருக்கும் பல்தேசிய இன மக்களை பிளவுபடுத்துவது என்ற அவர்களுடைய மறுப்பும் கூட ஏகாதிபத்திய பொருளாதார வாதமே. தேசிய ஒடுக்குமுறையின் கீழ் மக்கள் ஒன்றுபட்டு இருக்கிறார்கள் என்ற கருத்தே பொய்யானதாகும். எனவே அவர்களை பிளவுபடுத்துவது என்ற பிரச்சினைக்கே அங்கு இடம் இல்லை. மார்க்சிஸ்டுகள் எல்லா விசயங்களையும் போலவே தேசம், தேசிய இனம் என்பவற்றையும் வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையிலேயே அணுகுகின்றனர். அவை நிரந்தரமானவை என்றோ இறுதியானது என்றோ பாதுகாக்கப்பட வேண்டியது என்றோ அவர்கள் கருதவில்லை. ஆனால் வரலாற்றிலிருந்து அவற்றை நீக்குவதற்கு முன்னால் அவற்றின் வரலாற்றுப் பாத்திரத்தை அங்கீகரித்து அவற்றுக்கு முழுச் சுதந்திரமும் சனநாயகமும் தரப்பட வேண்டும் என்றும் அவற்றின் முழுவளர்ச்சிப் போக்கிலேயே தேசிய இனங்கள் ஒன்றோடொன்று சனநாயக ரீதியில் கலந்து இறுதியில் மறையும் என்றும் கருதுகிறார்கள். ஆனால் முதலாளித்துவவாதிகள் மக்களின் இந்த உணர்வுகளை மதிப்பதில்லை, மாறாக ஒடுக்குகிறார்கள்; எல்லைகளை தமது பொருளாதாரத் தேவைகளாக மட்டுமே கருதி விரிவுபடுத்தி வல்லாதிக்கங்களை நிறுவுகிறார்கள். இது முற்றிலும் சனநாயக விரோதமானதும், மக்களிடையே தேசியப் பூசல்களை உருவாக்கக்கூடியதும் பிற்போக்கானதும் ஆகும். "தேசிய இனங்களை ஒடுக்குகின்ற கொள்கை என்பது தேசங்களைப் பிரிக்கின்ற கொள்கை" என்றும் "மக்களின் மனங்களைத் திட்டமிட்ட வகையில் கெடுக்கின்ற கொள்கை" என்றும் (சர்/121) லெனின் சொன்னார். பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றுபடுவது, இரண்டறக் கலப்பது என்பது தேசிய இன ஒடுக்குமுறை வல்லாதிக்கங்கள் மூலமாக அல்ல. மாறாக தேசிய இனங்கள் அனைத்தும் தேசிய விடுதலை என்ற இடைக்கட்டத்தைக் கடந்த பின்பே அது சாத்தியமாகும் என பாட்டாளி வர்க்கம் அறைந்து கூறுகிறது. லெனின் கூறினார் "எவ்வாறு ஒடுக்கப்படும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற இடைநிலைக் காலத்திற்குப் பிறகுதான் வர்க்கங்களை மனித சமுதாயம் ஒழிக்க முடியுமோ அதே போல ஒடுக்கப்படும் எல்லா தேசங்களுக்கும் முழு விடுதலை என்ற-அதாவது பிரிந்து போவது என்றால் அதற்குத் தடையேதும் இல்லை, சுதந்திரம் உண்டு என்கிற இடைநிலைக் காலத்திற்குப் பிறகுதான் தேசங்கள் தவிர்க்க முடியாத வகையில் ஒன்றுபடுவது, இரண்டறக் கலப்பது என்ற நிலையை அடைய முடியும்" (தேசி/179)

படிப்பகம்

www.padippakam.com



தேசியப் போராட்டத்திற்கு பாட்டாளி வர்க்கம் தலைமையேற்பது தேசியவாதம் என்றும், வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவதாகும் என்றும் கூறப்படும் வாதங்களும் தவறானவையே. "தேசியத் தன்மை கொண்ட ஒரு போராட்டத்தில் தேசியப் போராட்டம் என்னும் வடிவத்தை வர்க்கப் போராட்டம் பெறுகிறது'' (2/205) என்றார் மாவோ. ''பாட்டாளி வர்க்கம் தன்னையும் தேசத்தினுள் ஒரு பகுதியாக்கிக் கொள்ளாமல், தானும் தேசியத்தன்மை பெறாமல் (இச்சொல்லின் முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல) அது பலம் பெற முடியவில்லை பக்குவம் பெறமுடியவில்லை, உருவாக முடியவில்லை'' (21/72) என்றார் லெனின். "உழைக்கும் மக்களுக்கு ஒரு தேசமும் இல்லை" என்று கூறிய மார்க்சும் எங்கெல்சும் தேசிய அரசுகள் உருவாகும்போது பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம் ஓரளவுக்கு விசேசமானது என்று கூறினார்கள். தேசிய யுத்தங்களுக்கும் அறைகூவல் விடுத்தார்கள். (சர்/240) கம்யூனிஸ்டுகள் எவ்வித பூர்சுவா தேசியவாதத்துக்கும் எதிராக நிற்கும் அதே நேரத்தில் தம் மக்கள் பற்றிய கவலையே படாத தேசிய சூனியவாதிகளின் ஆதரவாளர்களும் அல்லர்'' என கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது காங்கிரசு அறிக்கையும் (பக்.581, 'லெனினியமும் தேசிய இனப் பிரச்சினையும் பக்.298) கூறுகிறது. எனவே பாட்டாளி வர்க்கம் தேசிய இயக்கத்திற்குத் தலைமை ஏற்பது என்பது பூர்சுவா தேசியவாதமோ வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுவதோஅல்ல என்பது தெளிவு. ஆனால் தேசிய இயக்கத்திற்கு பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்க மறுப்பது தேசிய ஒடுக்குமுறைக்கு ஆதரவாக நிற்கும் ஏகாதிபத்தியவாதமாகவே (காலனிய அடிமைவாதமாகவே எனலாம்) இருக்கும். உண்மையில் தேசிய இயக்கத்திற்குத் தலைமை ஏற்பது என்பது பூர்சுவா சனநாயகப் புரட்சியை பூர்சுவா தேசியவாதத்திலிருந்து மீட்டு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஒரு அங்கமாக நடத்தி முடிப்பதேயாகும்.

○

## மேற்கோள்கள்

**தேசி** — தேசியக் கொள்கையும், பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதமும்: சில பிரச்சினைகள் — லெனின் கட்டுரைகள் தொகுப்பு நூல், மாஸ்கோ வெளியீடு, 1969 தமிழ்ப்பதிப்பு.

**சர்** — பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் — லெனின் கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பு நூல், மாஸ்கோ வெளியீடு, 1984 தமிழ்ப்பதிப்பு.

**மா** — மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சினையும் — ஸ்டாலின், சென்னை புக் ஹவுஸ் 1981 தமிழ்ப்பதிப்பு.

**கேலி** — ஏகாதிபத்திய பொருளாதார வாதமும் மார்க்சியத்தை இழிவுபடுத்தும் கேலிச் சித்திரமும் — லெனின், என்.சி.பி.எச்., 1974 தமிழ்ப்பதிப்பு.

○ மேற்கோள்களில் மொழிபெயர்ப்புத் தவறுகள் திருத்தப்பட்டுள்ளன.

○ முன்னெழுத்துக்கள் இன்றி அடைப்புக்குறிக்குள் இரு எண்கள் மட்டும் இருப்பின் அதில் முதல் எண் ஆசான்களுடைய தொகுப்பு நூல் தொகுதி (ஆங்கிலப் பதிப்பு) எண்ணையும், இரண்டாவது எண் அந்நூலின் பக்க எண்ணையும் குறிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# தேசியப் பிரச்சினை பற்றி மார்க்சிய ஆசான்கள்

## மேற்கோள் தொகுப்பு

### 1

### தேசம்

1. தேசம் என்றால் என்ன? தேசம் என்பது முதலாவதாக ஒரு சமுதாயம்; குறிப்பிட்ட மக்களைக் கொண்ட சமுதாயம் ஆகும்.

இந்த சமுதாயம் மரபின (Racial) அடிப் படையிலானதோ அல்லது பழங்குடிகள் என் பது போன்றதோ இல்லை. ரோமானியர்கள், டியூட்டேனியர்கள், எட்ருஸ்கனியர்கள், கிரேக்கர்கள், அரேபியர்கள் இன்னும் இவர் கள் போன்றவர்களிடமிருந்து உருவானது தான் இன்றைய நவீன இத்தாலி தேசம். காலியர்கள், ரோமானியர்கள், பிரிட்டானி யர்கள், டியுட்டேனியர்கள் போன்றவர்களி டமிருந்து உருவானதுதான் பிரெஞ்சு தேசம். இதே போன்றுதான் இங்கிலாந்து, செர்மன் இன்னும் மற்ற தேசங்கள் எல்லாமே பல்வேறு மரபினங்கள் மற்றும் பழங்குடிகளி டமிருந்து உருவானதாகும்.

எனவே தேசம் என்பது மரபின (Race) அடிப்படையிலோ அல்லது பழங்குடி (Tribal) அடிப்படையிலோ அமைந்தது அல்ல!

மாறாக வரலாற்று அளவிலே அமையப் பெற்ற மக்கள் சமுதாயமாகும்.

அதே நேரத்தில், சிரஸ், அலெக்சாண்டர் போன்றவர்களின் பேரரசுகளைத் தேசம் என்று அழைக்க முடியாது என்பது சந்தேகத் திற்கிடமற்ற ஒன்றாகும். இந்தப் பேரரசு கள் சரித்திர ரீதியாக அமையப் பெற்றாலும் பல்வேறு மரபின மற்றும் பழங்குடி மக்களைக் கொண்டிருந்தாலும் இவைகள் தேசங்களாக முடியாது. ஏனெனில் இப்பேரரசுகள் சாதாரண முறையில் எந்தவித பிடிப்புமின்றி சேர்க்கப்பட்ட பல்வேறு குழுக்களின் சேர்ப் பாகவே இருந்தன; மற்றும் இந்தச் சேர்ப்பு என்பது போரில் ஒரு குறிப்பிட்ட அரசனுக்கு ஏற்படும் வெற்றி அல்லது தோல்வியைப் பொறுத்து அதிகரிக்கவோ அல்லது குறை யவோ செய்தது.

எனவே தேசம் என்பது சாதாரண முறை யிலோ அல்லது நிலையற்ற முறையிலோ அமைந்திருக்கக்கூடிய சேர்ப்பு அல்ல. மாறாக தேசம் என்பது நிலையான மக்கள் சமூகமாகும்.

ஆனால் ஒவ்வொரு நிலையான சமூகமும் தேசமாகி விடமுடியாது. ஆஸ்திரியாவும், இரசியாவும் நிலையான சமூகங்கள்தாம். ஆனால் அவைகளை யாரும் தேசங்கள் என்று அழைப்பதில்லை. ஒரு தேசிய சமூகத்திற்கும் ஒரு அரசு சமூகத்திற்கும் அடிப்படையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? தேசிய சமூகம் என்பது ஒரு பொதுவான மொழி யில்லாமல் இருக்க முடியாது. ஆனால் அரசு சமூகத்திற்கு அவ்வாறு பொதுமொழி என்ற ஒன்று அவசியம் இருந்தாக வேண்டிய தில்லை. ஆஸ்திரியாவும், இரசியாவும் ஆஸ்திரியாவில் உள்ள செக் தேசமும் இரசி

படிப்பகம்

www.padippakam.com



யாவில் உள்ள போலந்து தேசமும் தங்களுக்கு என்று ஒரு பொதுமொழியை வைத்திருக்காவிடில் அவை தேசங்களாக இருக்க முடியாதவையாகும். அதே நேரத்தில் இரசியாவிலும், ஆஸ்திரியாவிலும் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன என்ற காரணத்தால் அவைகளின் ஒருமைப்பாடு பாதிக்கப்படுவதில்லை. இங்கு பல்வேறு மொழிகள் என்று குறிப்பிடுவது மக்களால் பேசப்படும் மொழிகளையே ஆகும். அரசின் உபயோகத்தில் இருக்கும் மொழிகளை அல்ல!

இவ்வாறு பொதுமொழி என்பதுஒருதேசத்தின் ஒரு சிறப்புப் பண்புக்கூறாகும். அதே நேரத்தில், இதன் காரணமாக பல்வேறு தேசிய இனங்கள் எப்போதும், எல்லா இடத்திலும் பல்வேறு மொழிகளைப் பேச வேண்டுமென்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட மொழியைப்பேசுகின்ற எல்லோரும் ஒரு குறிப்பிட்ட ஒரு தேசத்திற்குள்ளே அமைய வேண்டும் என்றோ கருதத் தேவையில்லை. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு பொதுமொழி என்பதால் வெவ்வேறு தேசங்களுக்கும் வெவ்வேறு மொழிகள் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஒரே நேரத்தில் பல்வேறு மொழிகளைப் பேசக் கூடிய ஒரே தேசம் என்பது இருக்க இயலாது எனும்போது ஒரேமொழியைப் பேசும் தேசங்கள் இருக்கமுடியாது என்று பொருளல்ல; உதாரணமாக, ஆங்கிலேயர்களும், அமெரிக்கர்களும் ஒரேமொழியைத்தான் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரே தேசமாக அமைந்திருக்கவில்லை. இதே உண்மை நார்வேஜினயர்களுக்கும், டேனிஸ்காரர்களுக்கும் மற்றும் ஆங்கிலேயர்களுக்கும், அயர்லாந்துகாரர்களுக்கும் பொருந்தும்.

அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் ஒரே மொழியைப் பேசினாலும் ஏன் அவர்கள் ஒரே தேசமாக அமைந்திருக்கவில்லை?

முதலாவதாக அவர்கள் ஒன்றாக வாழவில்லை. அவர்கள் வெவ்வேறு பகுதிகளில் வாழ்கிறார்கள். ஒரு தேசம் என்பது மக்கள் தலைமுறை தலைமுறையாக ஒன்றாக வாழ்ந்து அதன் மூலம் ஏற்படும் ஒரு நீண்ட நெடிய மற்றும் முறையான கலப்பின் மூலமாக உருவாகிறது. தங்களுக்கென்று ஒரு பொதுவான பகுதி இல்லாத வரையில் மக்கள் நீண்டகாலம் ஒன்றாக சேர்ந்து வாழமுடியாது. ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் ஆரம்பத்தில் ஒரே பகுதியில் வாழ்ந்தனர்; இங்கிலாந்து என்ற ஒரே தேசத்தை சேர்ந்தவர்களாகத்தான் இருந்தனர். பின்னர் இங்கிலாந்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதியினர் வெளியேறி அமெரிக்கா என்று அழைக்கப்படும்புதியபகுதியை அடைந்தனர். நாளடைவில் அந்தப் புதிய பகுதி அமெரிக்கா என்ற புதிய தேசமாயிற்று. இவ்வாறு வேறுபட்ட பிரதேசங்கள் வேறுபட்ட தேசங்கள் அமையக் காரணமாயிற்று.

இவ்வாறு பொதுவான பிரதேசம் என்பது ஒரு தேசத்தின் சிறப்புப் பண்புக் கூறுகளில் ஒன்றாக இருக்கிறது.

ஆனால், இது இருந்தால் மட்டும் ஒரு தேசம் உருவாகிவிடுவதில்லை. பொதுவான பிரதேசம் என்பது மட்டுமே ஒரு தேசத்தைஉருவாக்கிவிட முடியாது. இதற்கும் மேலாக தேசத்தின் பல்வேறு பகுதிகளை ஒன்றிணைத்து அவற்றை முழுமையாக்கும் அளவிற்கு உள்நாட்டு பொருளாதாரப் பிணைப்பு இருக்க வேண்டும். இது மாதிரியான ஒரு பிணைப்பு அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே இல்லை. எனவே அவை தனித்தனி தேசங்களாக விளங்குகின்றன. ஆனால் அமெரிக்கர்கள் தங்களைத் தாங்களே ஒரு தேசம் என்று அழைத்துக் கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். காரணம் உழைப்புப் பங்கீடு மற்றும் தொடர்பு சாதன வளர்ச்சி இவை காரணமாக அமெரிக்காவின் பல்வேறு பகுதிகள் பொருளாதார ரீதியாக முழுமை ஆக்கப்படவில்லை.

உதாரணத்திற்கு ஜியார்ஜியர்களை எடுத்துக் கொள்வோம். புனரமைப்பிற்கு முன்பு அவர்கள் ஒரே பகுதியில்தான் வாழ்ந்தனர். ஒரே மொழியைத்தான் பேசினர். ஆயினும் அடிப்படையில் பார்க்கும்போது அவர்கள் ஒரு தேசமாக அமையப் பெற்றவர்களாக இல்லை. காரணம் அவர்கள் பல்வேறு சிறு, சிறு அரசுகளாகத் தொடர்பற்று இருந்தனர். அவர்களுக்கென்று ஒரு பொதுவான பொருளாதார

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வு இல்லை. மேலும் அவர்கள் பல நூற்றாண்டு காலமாக ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டும், கொள்ளையடித்துக் கொண்டும், பார்சியர்களையும் துருக்கியர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் எதிராகப் போரிட்டுக் கொண்டும் இருந்தனர். சில சமயங்களில் வெற்றி பெறும் மன்னர்கள் இந்தச் சிற்றரசுகளைச் சாதாரணமாகவும், நிலையற்ற முறையிலும் ஓரளவு ஒருங்கிணைத்து ஒரு மேலோட்டமான நிர்வாக ஒழுங்கமைப்பைக் கொண்டு வந்தாலும் அந்தந்தச் சிற்றரசர்களின் மனபோக்கு காரணமாகவும், விவசாயிகளின் விருப்பு வெறுப்பு காரணமாகவும் அந்த ஒருங்கிணைப்பு வெகு வேகமாகச் சீர்குலையத் தொடங்கியது. இதன் காரணமாகவே ஜியார்ஜியா பொருளாதார ரீதியாக ஒருங்கிணையாத பகுதியாகவே இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பண்ணை அடிமைத்தனத்தின் வீழ்ச்சியும், நாட்டின் பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சியும் தொடர்பு சாதன வசதியில் ஏற்பட்ட முன்னேற்றமும், முதலாளித்துவ வளர்ச்சியும் ஜியார்ஜியாவில் உழைப்புப் பங்கீட்டை பல்வேறு பகுதிகளுக்கு அறிமுகப் படுத்தியது. இதனால் பொருளாதார அளவில் தனித்திருந்த பல்வேறு சிற்றரசுகள் உருக்குலையத் தொடங்கி இவை ஒரே முழுமையாக உருவெடுக்க கட்டாயப்படுத்தப் பட்டது. இதன் பின்பே ஜியார்ஜியா ஒரு தேசமாக உருவெடுத்தது.

இதே போன்றே நிலப்பிரபுத்துவக் கட்டத்தின் வழியாக முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தையடைந்த பல்வேறு தேசங்களைப் பற்றி சொல்லலாம்.

இவ்வாறு ஒரு பொதுவான பொருளாதார வாழ்வு, பொருளாதார ஒன்றிணைப்பு என்பவை ஒரு தேசத்திற்கான ஒரு சிறப்புப்பண்புக் கூறாக இருக்கிறது. மேலே சொன்னவை மட்டுமே ஒரு தேசத்திற்குப் போதுமானவைஅல்ல. இவை மட்டுமின்றி இன்னொன்றையும் நாம் கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும். அதாவது ஒரு தேசமாக உருவாகின்ற மக்களின் குறிப்பிட்ட ஒழுக்க நிலைப் பண்பை (Spritual Complexion) மனதில் கொள்ள வேண்டும். தேசங்கள் வாழ்க்கை நிலையில் மட்டும் மாறுபடவில்லை. இந்த ஒழுக்க நிலைப் பண்பிலும் மாறுபடுகின்றது. இந்த ஒழுக்கநிலைப் பண்பு அவர்களின் தேசியக் கலாச்சாரத்தின் குறிப்பிட்ட தன்மைகளாக விளங்குகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, அயர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் ஒரே மொழியைப் பேசினாலும் அவை தனித்தனி மூன்று தேசங்களாக விளங்குகின்றன. அவர்கள் தமது வாழ்க்கை நிலைமையில் உள்ள சீரற்ற நிலைமைகளினால் தலைமுறை தலைமுறையாக தங்களுக்குள் உருவாக்கிக் கொண்ட மனோபாவத்தினால் குறிப்பிட்ட மூன்று தேசத்தினராக இருக்கின்றனர் என்பது சாதாரண ஒன்றல்ல. இந்த மனஇயல்பு அல்லது வேறுவிதமாகச் சொன்னால் "தேசியத் தன்மை" என்று சொல்லக்கூடிய ஒன்று தனியாக பார்க்கும் பட்சத்தில் உணர முடியாததாக இருக்கலாம். ஆனால் இதுவே ஒரு தேசத்தின் ஒரு தனித் தன்மை வாய்ந்த பொதுக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாக இருக்கும் பட்சத்தில் இது உணரக்கூடியதாகவும் மறுக்க முடியாததாகவும் ஆகிறது.

"தேசியத்தன்மை" என்பது எல்லா காலத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இது வாழ்க்கை நிலையில் அவ்வப்போது ஏற்படுகின்ற மாறுதலுக்கேற்ப மாறுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட தேசியத் தன்மை ஒரு குறிப்பிட்ட காலத்தில் இருப்பதால் அது தனது முத்திரையை அந்த தேசத்தின் புற இயல்பில் பதித்து விடுகிறது.

இவ்வாறு ஒரு பொதுவான கலாச்சாரத்தில் வெளிப்படும் ஒரு பொதுவான மன இயல்பு என்பது ஒரு தேசத்தின் சிறப்புப் பண்புக் கூறுகளில் ஒன்றாகும். நாம் இப்போது ஒரு தேசத்திற்குரிய எல்லா சிறப்புப் பண்புக் கூறுகளையும் பார்த்துவிட்டோம்.

**ஒரு தேசம் என்பது, ஒரு பொதுவான மொழி, பிரதேசம், பொருளாதார வாழ்வு மற்றும் பொதுக்கலாச்சாரத்தில் வெளிப்படும் பொதுவான மன இயல்பு ஆகியவற்றை அடிப்படை**

படிப்பகம்

www.padippakam.com



யாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும். எல்லா வரலாற்று நிகழ்வுகளையும் போலவே தேசமும் மாற்றல் விதிக்குட்பட்டது என்பது சொல்லாமலே விளங்கக்கூடிய ஒன்றாகும். அது அதற்கே உரிய வரலாற்றையும் தொடக்கத்தையும் முடிவையும் கொண்டிருக்கும்.

மேலே கூறப்பட்ட அம்சங்களில் எதையும் தனியாக எடுத்துக் கொண்டு ஒரு தேசத்தை விளக்க முடியாது. மேலும் மேலே சொன்னவற்றில் ஏதாவது ஒரு அம்சம் குறைந்தாலும் தேசம் என்பது தேசமாக இருக்க முடியாது.

பொருளாதார வாழ்விலும், வாழும் பகுதிகளிலும், பேசுகின்ற மொழியிலும் வேறுபாடு இருப்பினும், ஒரே 'தேசியத்தன்மை' கொண்ட மக்களை அந்த ஒரு காரணத்திற்காக ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக இரசியர்கள், அமெரிக்கர்கள், ஜியார்ஜியர்கள் மற்றும் காகேசியர், ஹைலேண்ட் யூதர்கள் ஆகியோர் நம் கருத்துப்படி தனி தேசமாக அமையப் பெற்றவர்கள் என்று சொல்ல முடியாது.

ஒரு பொதுவான வாழும் பகுதி பொதுவான பொருளாதார வாழ்வு ஆகியவற்றைக் கொண்டிருக்கக் கூடிய மக்கள் ஒரு தனி தேசத்தை உருவாக்க முடியாது என்பது உணரக்கூடிய ஒன்றே. ஏனெனில் அவர்களுக்கு பொதுவான மொழியோ, பொதுவான ''தேசியத்தன்மையோ'' கிடையாது. உதாரணத்திற்கு செர்மனியையும், பால்டிக் பகுதியிலுள்ள லெட்ஸ்ஐயும் கூறலாம். இறுதியாக இன்னுமொரு எடுத்துக் காட்டைக் குறிப்பிடலாம். நார்வேஜியர்களும், டேனியர்களும் ஒரே மொழியைத் தான் பேசுகிறார்கள்; இருந்தாலும் அவர்கள் ஒரு தேசமாக அமையவில்லை. காரணம் ஒரு தேசத்துக்குரிய மற்ற அம்சங்கள் இல்லாததாகும்.

**மேற்சொல்லப்பட்ட இந்த எல்லா அம்சங்களும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கும் போதுதான் நாம் ஒரு தேசத்தைக் காண முடியும்.**

மா (பக். 5-11)

## 2

## தேசிய இயக்கம்

1. தேசம் என்பது வெறும் வரலாற்று ரீதியிலான வகையினம் மட்டுமல்ல ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைச் சேர்ந்த வரலாற்று ரீதியிலான வகையினமாகும். அதாவது முதலாளித்துவ உதயக் காலகட்டத்தைச் சேர்ந்த வரலாற்று ரீதியான வகையினம் ஆகும். நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து முதலாளித்துவம் வளர்ந்து வந்த அதே நேரத்தில் தான் மக்கள் தேசங்களாக இணைந்து அமையப் பெற்றார்கள். உதரணமாக இதற்கு மேற்கு அய்ரோப்பாவைச் சொல்லலாம். நிலப்பிரபுத்துவத்தில் ஏற்பட்ட பிளவை வெற்றிகொண்டு முதலாளித்துவம் வெற்றிகரமாக முன்னேறியபோதுதான் பிரிட்டன், பிரான்சு, செர்மனி, இத்தாலி போன்றவை தேசங்களாக உருவாயின.

அதே நேரத்தில், மேலே சொல்லப்பட்ட தேசங்கள் உருவான நிகழ்ச்சிகள் அவைகள் எவ்வாறு சுதந்திர தேசிய அரசுகளாக மாற்றப்பட்டன என்பதையும் குறிப்பாக சொல்கிறது. பிரிட்டன், பிரெஞ்சு மற்றும் இதர தேசங்கள் அதே நேரத்தில் பிரிட்டன், பிரெஞ்சு இதர அரசுகளாகவும் இருந்தன. அயர்லாந்து இந்த நிகழ்ச்சிப் போக்கில் பங்கு கொள்ளவில்லை. இருந்தாலும் பொதுவான நிலைமை என்பது மாறவில்லை.

கிழக்கு அய்ரோப்பாவிலோ நிகழ்ச்சிகள் சற்று வித்தியாசமாக நிகழ்ந்து கொண்டிருந்தது. மேற்கிலுள்ள தேசங்கள் அரசுகளாக உருவாயின. கிழக்கிலோ 'பல் தேசிய' அரசுகள் உருவாயின. அதாவது பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட அரசுகள் உருவாயின. உதாரணமாக ஆஸ்திரியா, ஹங்கேரி, இரசியாவைச் சொல்லலாம். ஆஸ்திரியாவில் செர்மனியர்கள் அரசியல் ரீதியாக முன்னேற்றம் அடைந்தவர்கள் என்று நிரூபித்து, அவர்களே முன்னின்று, பல்வேறு தேசிய இனங்களை ஒன்றி

படிப்பகம்

www.padippakam.com



ணைத்து ஒரு அரசை உருவாக்கினார்கள். ஹங்கேரியில் மிகவும் வளர்ந்த அரசு ஸ்தாபனத்தை உடையவர்களாக மேக்யர்கள் இருந்தனர். இவர்கள் ஹங்கேரிய தேசிய இனங்களில் மிகவும் முக்கியமானவர்களாக இருந்தனர். இவர்கள்தான் ஒன்றுபட்ட ஹங்கேரியை உருவாக்கினர். இரசியாவில் பல்வேறு தேசிய இனங்களை ஒன்றிணைக்கும் வேலையை மேற்கொண்டவர்கள் மா-ருசியர்கள் ஆவர். இவர்கள் சரித்திர ரீதியாக மிகவும் வலிமை பெற்ற மற்றும் நன்கு ஸ்தாபனப் படுத்தப்பட்ட பிரபுத்துவ இராணுவ அதிகாரத்துவத்தால் தலைமை தாங்கப்பட்டனர்.

இப்படித்தான் கிழக்கிலே நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிலப்பிரபுத்துவம் இன்னமும் ஒழிக்கப் படாத இடங்களிலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சி பலவீனமாக உள்ள இடங்களிலும் பொருளாதார அளவில் தங்களுக்குள் ஒருங்கிணைந்து தேசங்களாக இன்னமும் உருவாகாது பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்ட தேசிய இனங்கள் வாழ்கின்ற இடங்களிலும் அரசுகளின் உருவாக்க முறை இப்படித்தான் காணப்பட இயலும்.

ஆனால் கிழக்கத்திய அரசுகளிலும் முதலாளித்துவம் வளரத் துவங்கியது. வணிகம் மற்றும் தொடர்புசாதன வசதிகள் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தன. பெரிய நகரங்கள் பெருகத் துவங்கின. தேசங்கள் பொருளாதார ரீதியாக முழுமையடையத் துவங்கின. தேசிய இனங்களின் அமைதியான வாழ்க்கையில் முதலாளித்துவம் ஆரவாரத்தோடு புகுந்தது. இதன் காரணமாக அவர்கள் எழுச்சியூட்டப்பட்டு, கிளர்ச்சி செய்யக் கூடிய ஒரு பின்னணிக்குத் தள்ளப் பட்டார்கள். செய்தித்துறை மற்றும் நாடகத் துறை வளர்ச்சியும், ஆஸ்திரியாவில் ரியிச்ஸ்ராட்டும் இரசியாவில் டூமாவும் ''தேசிய உணர்வுகளுக்கு'' மேலும் வலுவூட்டின. புதிதாக உருவான அறிவுடைய மக்களும் ''தேசியக் கருத்துடன்'' ஒன்றிணைந்துஅந்த திசையிலேயே செயல்பட ஆரம்பித்தார்கள்.

ஆனால் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப் பட்டு தற்போது சுதந்திர வாழ்க்கைக்கு விழிப்படைந்துவந்த தேசங்கள் தாமே சுதந்திர தேசிய அரசுகளாக உருவாவது என்பது பழங்கதையாயிற்று; நீண்ட காலத்திற்கு முந்தியே மேலாதிக்கம் செலுத்தும் தேசங்களின் ஆளும் பிரிவுகள் அரசின் கட்டுப்பாட்டைத் தம் கீழ் கொண்டு வந்து விட்டதால் அத்தகைய ஆளும் பிரிவுகளின் கடுமையான எதிர்ப்பைப் புதிய விழிப் படைந்த தேசங்கள் சமாளிக்க வேண்டி யிருந்தது. இவர்கள் மிகவும் தாமதமாகி விட்டவர்கள்.

இந்த முறையில்தான் ஆஸ்திரியாவில், செக்கோஸ்லோவாகியர்கள், போலந்துக்-காரர்கள் மற்றும் இவர் போன்றோர் தங்களைத் தாங்களே தேசங்களாக அமைத்துக் கொண்டனர். இதே போன்று ஹங்கேரியில் கிராட்டியர்களும் மற்றவர்களும் அமைத்துக் கொண்டனர்; இரசியாவில் லெட்டியர், லிதுயானியர்கள், உக்ரெய்னியர்கள், ஜியார்ஜியர்கள், ஆர்மீனியர்கள் போன்றோரும் தங்களைத் தேசங்களாக்கிக் கொண்டனர். மேற்கு அய்ரோப்பாவில் எது விதிவிலக்காக இருந்ததோ (அயர்லாந்து) அதே விசயம் கிழக்கு அய்ரோப்பாவில் விதியாக இருந்தது.

மேற்கு அய்ரோப்பாவில் அயர்லாந்து தன்னுடைய விதிவிலக்கான நிலைமைக்கு தேசிய இயக்கமாக உருவெடுத்து பதிலடி கொடுத்தது. கிழக்கில், புதிதாக எழுச்சியடைந்த தேசங்களும் இதே பாதையை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறு உருவான சூழ்நிலையின் காரணமாக கிழக்கு அய்ரோப்பாவில் உள்ள புதிய தேசங்கள் போராட்டப் பாதையை மேற்கொள்ள வேண்டிவந்தது.

இவ்வாறு துவங்கிய போராட்டம் பரவத் தொடங்கியது. உண்மையில் பார்க்கப் போனால் இந்தப் போராட்டம் தேசங்களுக்கிடையே நிகழ்வில்லை; மாறாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய தேசிய இனங்களின் ஆளும் வர்க்கங்களுக்கும்அடக்கப்பட்டதேசிய இனங்களுக்கும் இடையே நிகழ்ந்தது. பொதுவாக

படிப்பகம்

www.padippakam.com



இப் போராட்டம் ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களைச் (செக் மற்றும் செர்மன்) சேர்ந்த பெரு முதலாளிகளை எதிர்த்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த நகர்புறக் குட்டிமுதலாளிகளால் நடத்தப் பட்டது; அல்லது ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களைச் (போலந்தில் உள்ள உக்ரெய்னியர்கள்)சேர்ந்தநிலப்பிரப்புக்களை எதிர்த்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைச் சேர்ந்த நாட்டுப்புற முதலாளிகளால் நடத்தப் பட்டது; அல்லது ஒடுக்கப்பட்ட "தேசிய இனங்களைச் சேர்ந்த எல்லா "தேசிய" முதலாளிகளும் ஒன்று சேர்ந்து ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனங்களைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்திற்கெதிராகத் (ரசியாவில் போலந்து,லிதுயானியா மற்றும் உக்ரெய்ன்) தொடுக்கப்பட்டது. முதலாளிகள் இதில் பிரதானப் பங்கு வகித்தனர்.

சந்தைப் பிரச்சினை என்பது புதிதாக தோன்றிய முதலாளிகளுக்கு மிக முக்கியப் பிரச்சினையாக இருந்தது. அவர்களுக்கு தங்கள் பொருள்களை விற்க வேண்டும என்பதும் மற்ற தேசிய இனங்களைச் சேர்ந்த முதலாளிகளுடன் நடக்கும் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்பதும் நோக்க மாயிருந்தது. எனவே அவர்கள் தங்களுக் கென்று ஒரு 'சொந்த', 'உள்நாட்டு' சந்தை வைத்துக்கொள்ள விரும்பினர். சந்தை என்கின்ற இந்த ஆரம்ப பள்ளியில் தான் முதன் முதலில் முதலாளிகள் தேசிய வாதத்தைக் கற்றறிந்தனர்.

ஆனால் பிரச்சினை என்பது பொதுவாக, சந்தையோடு மட்டும் நிற்கவில்லை. ஆதிக் கம் செலுத்தும் தேசிய இனங்களைச் சேர்ந்த அரைநிலப்பிரபுத்துவ மற்றும், அரை முதலா ளித்துவ, அதிகார வர்க்கத்தினர் இதைத் ''தடுத்து நிறுத்த" தம் சொந்த முறைகளைக் கையாண்டு போரட்டத்தில் தலையிட்டனர். ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளிகள் மிக அதிகமானவர்கள் ஆயினும், குறைவானவர்கள் ஆயினும், மிகவும் ''வேகமாகவும்'' ''தீர்க்கமாகவும்'' தங்களின் போட்டியாளர்களை எதிர்த்துச் செயல்பட்டனர். ''அன்னிய" முதலாளி களுக்கு எதிராக சக்திகள் ஒன்று திரட்டப் பட்டு தொடர்ச்சியான கட்டுப்படுத்தும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; அவை ஒடுக்குமுறை நடவடிக்கைகளாகவே உருமா றின. இவ்வாறு நடந்த இந்தப் போராட்டம் பொருளாதாரத் தளத்திலிருந்து அரசியல் தளத்திற்குப் பரவியது. அதாவது இடம் விட்டு இடம்பெயரும் உரிமைக்கு கட்டுப் பாடு, மொழி ஒடுக்குமுறை வாக்குரிமைக்கு கட்டுப்பாடு, பள்ளிகள் மூடப்படுதல், மத உணர்வுகள் மீது கட்டுப்பாடு போன்ற இன்னும் பல நடவடிக்கைகள் போட்டி யாளர்களின் தலைக்கு மேலே குவிந்து கொண்டே போயிற்று. இதுபோன்ற நட வடிக்கைகள், ஆதிக்கம் செலுத்தும் தேசிய இனத்தைச் சார்ந்த முதலாளிகளின் நலனுக் காக மட்டும் நடத்தப்படவில்லை; இன்னும் சொல்லப் போனால் குறிப்பாக ஆளும் அதி கார வர்க்கத்தின் சாதியக் குறிக்கோள்களை விரிவுபடுத்தவேண்டும் என்பதற்காகவும் நடத்தப்பட்டன. ஆனால் இந்தக் காரியங் களினால் ஏற்பட்ட முடிவுகளை வைத்துப் பார்க்கும்போது இந்தக் குறிக்கோள்கள் நிறைவேறியதாகத் தெரியவில்லை. இரசியா, ஹங்கேரி, ஆஸ்திரியா ஆகிய எல்லா இடங்களிலும் முதலாளிவர்க்கமும் அதிகாரத்துவமும் இந்த விசயத்தில் எப்போ தும் ஒன்றோடொன்று இணைந்தே செயல் பட்டன.

ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளிகள் ஒவ்வொரு முறையும் அடக்கி ஒடுக்கப்பட்டனர்; இதன் காரணமாக இயற்கையாகவே அவர்கள் ஒரு இயக்கமாகக் கிளர்ந்தனர். அவர்கள். தங்கள் ''சொந்த மக்களுக்கு" வேண்டு கோள் விடுக்க ஆரம்பித்தனர்; தங்கள் ''தாய்நாட்டின்'' நலனுக்காக கூப்பாடு போட்டனர். தம் நலனே தேசத்தின் மொத்த நலன் என்றும் உரிமை கொண்டாடினர். தங்கள் ''தாய்நாட்டின்'' நலனுக்காக ''கிராமப்புற மக்களிடம்'' இருந்து ஒரு படையைத் திரட்டினர். ''மக்களும்'' இந்த வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் இல்லை. இவர்களின் பதாகையின் கீழ் மக்கள் அணி திரண்டனர்; அதுவரை அனுப வித்து வந்த அடக்குமுறையின் காரணமாக

படிப்பகம்

 www.padippakam.com

மக்கள் தங்களுடைய மனக்குமுறலை வெளிப்படுத்தினர். இவ்வாறாக தேசிய இயக்கம் துவங்கியது.

எந்த அளவுக்கு பாட்டாளிகளும் விவசாயிகளும் தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டார்கள் என்பதைப் பொறுத்தே தேசிய இயக்கத்தின் வலிமை தீர்மானமாகியது.

மா (பக். 19-24)

2. மக்கள் தேசிய ரீதியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நெருக்கமாக ஒரு முகப்பட்டிருப்பது முதலாளித்துவத்தின் நவீனத் தேவைகளில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை; ஏனென்றால் உள்நாட்டுச் சந்தையை முழுமையாகக் கைப்பற்றுவதற்கும் பொருளாதாரத் தொடர்புகளை முழுச் சுதந்திரத்துடன் அனுபவிப்பதற்கும் முக்கியமாகத் தேவையானவை தேசிய இனமும், மொழிவழிப் பகுப்பும் ஆகும்.

(பக். 66)

3. மேற்கத்திய கண்டப்பகுதி அய்ரோப்பாவில் பூர்சுவா சனநாயகப் புரட்சிகளின் சகாப்தமானது திட்டவட்டமான ஒரு காலப்பகுதி. கிட்டதட்ட 1789லிருந்து 1871 வரையிலான காலம் அது எனலாம். இக்காலத்தில்தான் தேசிய இயக்கங்களும், தேசிய அரசுகளின் அமைப்பும் நிகழ்ந்தன. இந்தச் சகாப்தம் முடிவுக்கு வந்ததும் மேற்கு அய்ரோப்பாவானது பூர்சுவா அரசுகளைக் கொண்டதொரு நிலைபெற்ற அமைப்பு முறையாக உருப்பெற்றுவிட்டது; இவை பொதுவாக தேசிய ஒருமைகொண்ட அரசுகளாக இருந்தன. ஆகவே இன்று இந்தச் சமுதாயத்தில் மேற்கு அய்ரோப்பிய சோசலிஸ்டுகளின் செயல்திட்டங்களில் சுயநிர்ணய உரிமையைத் தேடுவது தனக்கு மார்க்சியத்தின் அரிச்சுவடிகூட தெரியாது என்பதைக் காட்டிக் கொள்வதாகும்.

கிழக்கு அய்ரோப்பாவிலும் ஆசியாவிலும் பூர்சுவா சனநாயகப் புரட்சிகளின் சகாப்தம் 1905ல்தான் தொடங்கிற்று. ருசியா, பாரசீகம், சீனா, துருக்கி ஆகிய நாடுகளில் புரட்சிகள், பால்கன் போர்கள்-நமது "கீழை நாடுகளில்" நமது சகாப்தத்தில் உலக நிகழ்ச்சிகளின் சங்கிலித்தொடர் இவ்வாறுஇருக்கிறது. ஒரே தொடர்ச்சியாக பூர்சுவா - சனநாயக தேசிய இயக்கங்கள் மலர்ச்சி பெறுவதை நிகழ்ச்சிகளின் இச்சங்கிலித் தொடரில் ஒரு குருடன் தான் காணத்தவற முடியும். இவ்வியக்கங்கள் தேசிய ரீதியில் சுயேச்சையான தேசிய நோக்கில் ஒருமையுடைய அரசுகளை உண்டுபண்ண முயலுகின்றன.

(பக். 87,88)

## 3

## தேசிய இயக்கமும் விவசாயிகள் பிரச்சினையும்

1. அக்டோபர் புரட்சிக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, போல்சுவிக்குகள் எப்பொழுதுமே தேசியப் பிரச்சினையை புரட்சியின் பொதுப் பிரச்சினையிலிருந்து பிரித்ததில்லை. தேசியப் பிரச்சினை குறித்த போல்சுவிக் அணுகுமுறையின் சாரம், போல்சுவிக்குகள் எப்பொழுதுமே தேசியப் பிரச்சினையை புரட்சிகரக் கண்ணோட்டத்திலிருந்து பிரிக்கமுடியாத தொடர்புடன் ஆய்வு செய்தனர் என்பதுதான்.

-ஸ்டாலின், தொகுதி 7, (பக். 69)

2. இரசிய மார்க்சியம் தேசியப் பிரச்சினையை அணுகியதில் இரு கட்டங்கள் இருந்தன. முதலாவது கட்டம் அக்டோருக்கு முந்தியது. இரண்டாவது கட்டம் அக்டோபர் கட்டம். முதலாவது கட்டத்தில் தேசியப் பிரச்சினை, முதலாளித்துவ சனநாயகப் புரட்சி குறித்த பொதுப்பிரச்சினையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. அதாவது பாட்டாளிகள் மற்றும் விவசாயிகளின் சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது இரண்டாவது கட்டத்தில், தேசியப் பிரச்சினை அதிக முக்கியத்துவம் பெற்று காலனியப் பிரச்சினையாக உருவானபோது— ஓர் அரசுக்கு உட்பட்ட பிரச்சினை என்பதிலிருந்து மாற்றம் பெற்று ஓர் உலகப் பிரச்சினையாக உருவான

படிப்பகம்

www.padippakam.com



போது-அது பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்த பொதுப் பிரச்சினையின் ஒரு பகுதியாகவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் குறித்த பிரச்சினையின் பகுதியாகவும் கருதப் பட்டது. இரண்டு கட்டங்களிலும் முற்றிலும் புரட்சிகர அணுகுமுறையே மேற்கொள்ளப் பட்டது.

சீமிச் இதனை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. எனவேதான் அவர் தேசியப் பிரச்சினையை வெறுமனே ஓர் அரசியல்சாசனப் பிரச்சினையாக - ஒரு சீர் திருத்தப் பிரச்சினையாக - குறுக்கிப் பார்க் கிறார்.

இந்தத் தவறு காரணமாகவே, தேசியப் பிரச்சினை சாராம்சத்தில் உழவர் பிரச்சினையாக இருப்பதை அவர் பார்க்க மறுக் கிறார்...தேசியப் பிரச்சினையையும் உழவர் பிரச்சினையையும் ஒன்றாகக் கருதக்கூடாது என்பது சரியானதுதான். ஏனெனில், உழவர் பற்றிய பிரச்சினைகளுடன் கூடவே தேசியக் கலாச்சாரம், தேசிய அரசு போன்ற பிரச்சினைகளையும் உள்ளடக்கியதுதான் தேசியப் பிரச்சினை. ஆனால் தேசியப் பிரச்சினையின் அடிப்படையும், சாரமும் உழவர் பிரச்சினையே என்பதில் அய்யமில்லை. இதிலிருந்து தேசிய இயக்கத்தின் முக்கியப் படை உழவர்களே என்பதும், உழவர் படையின்றி வலிமையான தேசிய இயக்கம் இருக்கமுடியாது என்பதும் தெளிவாகிறது. தேசியப் பிரச்சினை சாராம்சத்தில் உழவர் பிரச்சினை என்று சொல்லப் படுவதன் பொருள் இதுவே.

-ஸ்டாலின், தொகுதி 7 (பக். 71,72)

## 4

## தேசிய இயக்கத்தின் இரு கட்டங்கள்

1. தேசியப் பிரச்சினை விசயத்தில் வரலாற்றுரீதியான இரண்டு போக்குகளை வளர்ந்துவரும் முதலாளித்துவம் அறியும். முதலாவது, தேசியவாழ்வும், தேசிய இயக்கங்களும் விழிப்புற்று எழுதல், தேசிய ஒடுக்குமுறை அனைத்தையும் எதிர்த்துப் போராடுதல், தேசிய அரசுகளைத் தோற்றுவித்தல் ஆகியவை. இரண்டாவது, சர்வ தேச தொடர்புகள் அபிவிருத்தியடைந்து மேலும் அடிக்கடி ஏற்படுவது, தேசியத் தடைகள் தகர்ந்து போவது, மூலதனம், பொதுவாகப் பொருளாதார வாழ்வு, அரசியல், விஞ்ஞானம் முதலிய பல துறைகளிலும் சர்வதேச ரீதியில் ஒற்றுமை உருவாதல் ஆகியவை.

இவ்விரண்டு போக்குகளும் முதலாளித்துவம் முழுமைக்கும் பொருந்தும் ஒரு விதியின் சாரமாகும். அதன் வளர்ச்சியின் தொடக்கத்தில் முதலாவது போக்கு மேலோங்கி நிற்கிறது; சோசலிச சமுதாயமாக உருமாறுவதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் ஒரு முதிர்ந்த முதலாளித்துவத்தை இரண்டாவது போக்கு காட்டுகிறது. மார்க்சியவாதிகளின் தேசிய செயல்திட்டம் இவ்விரு போக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு முன்வைத்து ஆதரித்துப்பரப்புவது: முதலாவது, தேசிய இனங்கள், மொழிகள் ஆகியவைகளுக்கு சம அந்தஸ்து; இந்த விசயத்தில் எந்த விசேச உரிமைகளையும் அனுமதிக்கக்கூடாது (மேலும் தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும். இதைப் பற்றிப் பின்னர் தனியாக கவனிப்போம்). இரண்டாவது, சர்வதேசியம் என்ற கோட்பாடு; பூர்சுவா தேசியவாதம் - மிகவும் நயப்படுத்தப்பட்ட வகையைச் சேர்ந்த தேசிய வாதமாக இருப்பினும் சரிதான் - என்பது பாட்டாளி வர்க்கத்தைப் பிடித்துவிடாமல் இருப்பதற்கென அதை எதிர்த்து சிறிதும் விட்டுக் கொடுக்காது போராடுதல்.

(பக். 31,32)

2. தேசிய இயக்கத்தைப் பொருத்தவரை ஒன்றுக்கொன்று தீவிரமாக மாறுபடுகின்ற முதலாளித்துவத்தின் இரு காலகட்டங்களும் வெவ்வேறானவை என்பதைத் துல்லியமாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அது கூறுகிறது. ஒருபக்கத்தில் நிலப்பிரபுத்துவமும் வரம்பிலா முடியரசும் வீழ்ச்சியுற்ற

படிப்பகம்

www.padippakam.com



காலம்; பூர்சுவா சனநாயக சமுதாயமும் அரசும் அமைக்கப்பட்ட காலம். அப்பொழுது தான் முதன்முதலாக தேசிய இயக்கங்கள் பொது மக்கள் இயக்கங்களாக பரிணமித்தன; அச்சு வெளியீடுகள், பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களில் பங்கு கொள்ளுதல் முதலிய வழிகளில் எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த மக்களையும் ஏதாவது ஒரு வகையில் அரசியலுக்குள் புகும்படி தேசிய இயக்கங்கள் செய்தது அப்பொழுதான். மற்றொரு பக்கத்தில், நெடுங்காலமாக நிலைபெற்றுவிட்ட அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியையும், பாட்டாளிவர்க்கத்துக்கும் பூர்சுவாக்களுக்கும் இடையில் நன்கு வளர்ந்துவிட்ட பகையையும் கொண்ட முதலாளித்துவ அரசுகள் முழுமையாக உருப்பெற்றுவிட்ட காலம்; முதலாளித்துவத்தின் வீழ்ச்சித் தருவாய் என்று கூறக்கூடிய காலம்.

முதல் காலகட்டத்தின் சிறப்பு அம்சங்கள்: தேசிய இயக்கங்களின் மலர்ச்சியும், நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையான, மிக மந்தமான வகுப்பைச் சேர்ந்த விவசாயிகள் பொதுவாக அரசியல் உரிமைகளுக்கான, சிறப்பாக தேசிய இன உரிமைகளுக்கான போராட்டத்தையொட்டி இவ்வியக்கங்களில் ஈர்க்கப்படுவதும் ஆகும். இரண்டாவது காலகட்டத்தின் சிறப்பு அம்சங்கள்: பொதுசன பூர்சுவா சனநாயக இயக்கங்கள் இன்மை; இந்தக் காலகட்டத்தில் வாணிகத் தொடர்புகளில் ஏற்கனவே முழுமையாகக் கவரப்பட்டுவிட்ட தேசிய இனங்களை ஒன்றோடொன்று அதிக நெருக்கமாகப் பிணைத்து, மேலும் அதிகமாக அவைகளை ஒன்றோடொன்று கலக்கும்படி செய்வதன் மூலமாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவம் சர்வதேசிய ரீதியில் அய்க்கியப்பட்ட மூலதனத்துக்கும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குமான முரண்பாட்டை முன்னணிக்கு கொண்டு வருகிறது.

இவ்விரண்டு காலகட்டங்களும் சுவர் வைத்தாற்போல் பிரிந்து நிற்கவில்லை என்பது உண்மைதான். இவை பல இடைநிலை இணைப்புகளால் தொடர்புபடுத்தப் பட்டிருக்கின்றன; தங்களது தேசிய வளர்ச்சி வேகத்தில், தேசிய இன அமைப்பில், மக்கட் தொகை பங்கீட்டில், இப்படி இன்னும் பலவற்றில் பல்வேறு நாடுகளும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இந்தப் பொதுவான வரலாற்று ரீதியான மற்றும் பருண்மையான அரசு நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் எந்த நாட்டைச் சேர்ந்த மார்க்சியவாதிகளும் தங்களது தேசிய செயல்திட்டத்தை வரையும் பேச்சுக்கே இடமில்லை. (பக். 80, 81)

## 5

## தேசிய அரசு: முதலாளித்துவ காலகட்டத்தின் விதியும் - பொதுவழக்கும்

1. உலகம் முழுவதிலும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவத்தின்மீது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. விற்பனைப் பண்ட உற்பத்தியின் முழுவெற்றிக்கு உள்நாட்டு மார்க்கெட்டை பூர்சுவாக்கள் கைப்பற்ற வேண்டியது அவசியம்; ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட, அரசியல் ரீதியில் அய்க்கியப்படுத்தப்பட்ட நிலப்பரப்புகள் அதற்கு வேண்டும்; அம்மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருபெற்றுத் திகழ்வதற்கும் முட்டுக்கட்டையாக உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும். இங்கேதான் தேசிய இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கிறது. மனித உறவுகளுக்கு மிகமிக முக்கியமான சாதனம் மொழி. நவீன முதலாளித்துவத்துக்கு ஏற்ற அளவில் உண்மையிலேயே சுதந்திரமான, விரிவான, வாணிகத்துக்கும், மக்கள் சுதந்திரமாகவும் விரிவாகவும் பல்வேறு வர்க்கங்களாக அமைவதற்கும், இறுதியாக சந்தைக்கும், ஒவ்வொரு சிறிய பெரிய உடைமையாளனுக்கும், விற்போருக்கும் வாங்குவோருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்

படிப்பகம்

www.padippakam.com



படுத்துவதற்கும் மிகமிக முக்கியமாகத் தேவையான சூழ்நிலைகள், மொழியின் அய்க்கியமும், தடையற்ற வளர்ச்சியும்தான்.

ஆகவே, ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும் நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்றாகப் பூர்த்தி செய்யப்பட வாய்ப்புள்ள தேசிய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது. மிகமிகத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலக்கை நோக்கி இட்டுச் செல்கின்றன; எனவே மேற்கு அய்ரோப்பா முழுவதற்கும், ஏன் நாகரிக உலகம் முழுவதற்கும், தேசிய அரசு என்பது முதலாளித்துவக் காலகட்டத்தின் மாதிரிப் படிவமானது, வழக்கமானது. (பக். 73)

2. ஆகவே. சட்டரீதியான வரையறைகளை வைத்துக்கொண்டு மாயவித்தை செய்வதன் மூலமோ அல்லது அருவமான வரையறைகளைப் "புனைவதன்" மூலமோ இன்றி, தேசிய இயக்கங்களின் வரலாற்றுப் பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் வாயிலாகத்தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதன் பொருளைப் புரிந்துகொள்ள நாம் விரும்பினால், அன்னிய தேசிய அமைப்புகளிலிருந்து இத்தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேசிய அரசு ஒன்றை அமைத்தல் என்பதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் என்ற முடிவுக்குத்தான் நாம் வந்து தீருவோம். (பக். 74)

3. ''இன்றைய நிலைமைகளுக்கு (அதாவது, முதலாளித்துவ, நாகரிகமடைந்துள்ள, பொருளாதாரரீதியில் முற்போக்கான நிலைமைகளுக்கு, மத்தியகாலத்தைச் சேர்ந்த, முதலாளித்துவத்துக்கு முந்திய நிலைமைகளினின்று வேறுபட்ட இன்றைய நிலைமைகளுக்கு) மிகவும் பொருத்தமான வடிவம் தேசிய அரசுதான்; அந்த வடிவத்தில் தான் அரசு தனது கடமைகளை (அதாவ்து, முதலாளித்துவத்தின் மிக மிகச் சுதந்திரமான, விரிவான, வேகமான வளர்ச்சிக்கு வழிசெய்யும் கடமைப் பணிகளை) சிறப்பாக நிறைவேற்ற முடியும்." பல தேசிய இனங்கள் கலந்து வாழும் அரசுகள் (தேசிய அரசுகளிலிருந்து வேறுபட்டனவாகப் பல் தேசிய இன அரசுகள் என்று இவை வழங்கப்படுகின்றன) ''தங்களது உள்நாட்டு அமைப்பு ஏதோ சில காரணங்களினால் முறைக்குப் பொருந்தாத அல்லது வளர்ச்சி குன்றிய (பின் தங்கிய) நிலையில் இருக்கும் நாடுகள்தான்" என்று காவுத்ஸ்கி இறுதியில் மேலும் துல்லியத் தெளிவாகக் கூறுகிறார் என்பதையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். வளர்ந்து வரும் முதலாளித்துவத்தின் தேவைகளுக்கு மிகவும் ஏற்றது எதுவோ அதனுடன் பொருந்தாதவை என்ற பொருளில் மட்டும்தான் முறைக்குப் பொருந்தாத நிலைமைகளைப் பற்றி காவுத்ஸ்கி பேசுகிறார் என்பதை நாம் கூறத்தேவையில்லை. (பக். 74,75)

4. அதேபோல் பால்கன் அரசுகளின் உதாரணமும் அவரது வாதத்தைமறுக்கிறது; ஏனென்றால் அத் தீபகற்பத்தில் சுயேச்சையான தேசிய அரசுகள் எந்த அளவுக்கு உருவாகின்றனவோ அதே அளவில்தான் பால்கன் நாடுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான மிகச்சிறந்த நிலைமைகளும் உருவாகின்றன என்பதை யாரும் இப்பொழுது பார்க்க முடியும்.

ஆகவே ரோசா லக்சம்பர்க் என்னதான் சொன்னாலும் முற்போக்கான நாகரிகமுற்றுள்ள மனித சமுதாயம் முழுவதன் உதாரணமும், பால்கன் நாடுகள், ஆசியா ஆகியவற்றின் உதாரணமும் தேசிய அரசு என்பது முதலாளித்துவத்தின் விதியும் "பொது வழக்கும்" ஆகும்; பல்தேசிய அரசு என்பது பின்தங்கிய நிலையைக் குறிக்கிறது அல்லது அது ஒரு விதிவிலக்கு என்கிற காவுத்ஸ்கியின் கூற்று முற்றிலும் சரியானது என்பதைக் காட்டுகின்றன. தேசிய உறவுகளைப் பொறுத்தவரையில் முதலாளித்துவ வளர்ச்சிக்கான மிகச்சிறந்த நிலைமைகளைத் தேசிய அரசுதான் உண்டு பண்ணிக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் பூர்சுவா உறவுகளின் மேல் கட்டப்பட்டிருக்கும் அத்தகையதொரு அரசு தேசிய இனங்களைச் சுரண்டுதலையும் ஒடுக்குதலையும் அகற்றி விடலாம் என்பதல்ல இதன் பொருள். தேசிய அரசுகளை உண்டாக்குவதற்கான

www.padippakam.com



தூண்டுசக்தியைத் தோற்றுவிக்கும் பலம் வாய்ந்த பொருளாதார காரணிகளை மார்க்சியவாதிகள் மறந்துவிடக் கூடாது என்பது தான் இதன் பொருள். வரலாற்றுப் பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் மார்க்சியவாதிகளின் செயல்திட்டத்தில் உள்ள "தேசிய இனங்களின் சுயநிர்ணயம்" என்பதற்கு அரசியல் சுயநிர்ணயம் அரசின் சுயேச்சைத் தன்மை, ஒரு தேசிய அரசு அமைத்தல் என்கிற பொருள்தான் உண்டு. வேறு பொருள் இருக்க முடியாது.

(பக். 78,79)

5. பொருளாதார அமைப்பில் முழுக்க முழுக்க தந்தைவழி முறையைச் சேர்ந்ததும், முதலாளியத்துக்கு முந்தைய கட்டத்தைச் சேர்ந்ததுமான அம்சங்கள் எப்பொழுதெல்லாம் ஆதிக்கம் செலுத்துகின்றனவோ பண்ட உற்பத்தியும் வர்க்க வேறுபாடுகளும் எங்கு சிறிதும் வளர்ச்சியுறவில்லையோ அங்கெலாம் இத்தகைய அரசு அமைப்பு முறையானது நிலைத்து நிற்கும் சக்தியைப் பெருமளவில் பெற்றிருக்கிறது என்பது பொதுவாகத் தெரிந்த உண்மை. ஆயினும் முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தின் குணாம்சத்தைப் பெற்றிருக்கும் அரசு அமைப்பைக் கொண்டதொரு நாட்டில் முதலாளித்துவம் துரிதமாக வளர்ந்து வருகிற, தேசிய இன ரீதியில் எல்லை வகுக்கப்பட்ட ஒரு பிராந்தியம் இருக்குமேயானால், அப்பொழுது அம் முதலாளித்துவம் எவ்வளவுக்கு எவ்வளவு துரிதமாக வளர்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கும் முதலாளித்துவத்துக்கு முந்திய அரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாடும் அதிகமாக இருக்கும்; முற்போக்கு அடைந்துவரும் பிராந்தியம் முழு நாட்டிலிருந்து—இத்துடன் அது "நவீன முதலாளித்துவ" உறவுகளால் அல்லாமல், "ஆசியக் கொடுங்கோன்மையினால்" பிணைக்கப்பட்டிருக்கிறது—பிரியக் கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

(பக்.84)

6. பிரிந்துபோகும் சுதந்திரம், சுயேச்சையான தேசிய அரசு ஒன்றை அமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஆகியவற்றைவிட ஒரு சிறு தேசிய இனத்துக்குப் பெரிய சுதந்திரம் வேறு என்ன இருக்க முடியும்?

(பக்.113)

7. பொதுவாக மார்க்சிய தத்துவத்தைப் பொறுத்தவரை சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினையில் சிக்கல் ஒன்றுமில்லை. 1896ம் ஆண்டின் இலண்டன் தீர்மானத்தையோ அல்லது சுயநிர்ணயம் என்பது பிரிந்துபோகும் உரிமையைத்தான் உள்ளடக்கப் பொருளாகக் கொண்டது என்பதையோ அல்லது எல்லா முதலாளிய-சனநாயகப் புரட்சிகளிலும் சுயேட்சையான தேசிய அரசுகள் அமைக்கப்படும் போக்கு காணப்படுகிறது என்பதையோ யாரும் தீவிரமாக மறுக்க முடியாது.

(பக். 159)

8. இந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் (இங்கிலாந்து, பிரான்சு, சேர்மனி முதலியவற்றில்) தேசியப் பிரச்சினை நெடுநாட்களுக்கு முன்பே தீர்க்கப்பட்டுவிட்டது. தேசிய ஒற்றுமை என்பது அதன் நோக்கத்தில் நெடுநாட்களுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டுவிட்டது. புறநிலை நோக்கில் நிறைவேற்ற வேண்டிய "பொது தேசியப் பணிகள்" ஒன்றுமில்லை. எனவே இந்த நாடுகளில் மட்டுமே இப்போது தேசிய ஒற்றுமையைத் தகர்த்து எறிந்துவிட்டு, வர்க்க ஒற்றுமையை நிலை நாட்ட முடியும்.

வளர்ச்சி அடையாத நாடுகளின் விசயம் வேறு. கிழக்கு அய்ரோப்பா, காலனிகள், அரைக்காலனிகள் அனைத்தும் அவற்றுள் அடங்கியவை. தத்துவக் கூற்றுகளின் 6ம் பிரிவில் (இரண்டாம், மூன்றாம் மாதிரி வகை நாடுகள்) அவை கவனிக்கப்படுகின்றன. அந்தப் பிரதேசங்கள் பொதுவாக ஒடுக்கப்பட்ட, முதலாளித்துவ முறையில் வளர்ச்சியடையாத தேசங்களாகவே இன்னும் இருக்கின்றன. புறநிலை நோக்கில் இந்த தேசங்கள் இன்னமும் பொதுவான தேசியப் பணிகளை அதாவது சனநாயக பணிகளை வெளிநாட்டு ஒடுக்கல் முறையைத் தூக்கி எறிந்து வீழ்த்தும் பணிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

கேலி (பக். 75,76)

9. உலகம் முழுவதும் தேசிய அரசு என்பது பொதுவிதியாக இருக்கிறது. அதே நேரத்தில் பல்தேசிய இன அரசு என்பது விதிவிலக்காக இருக்கிறது.

-லெனின், தொகுதி 41, (பக். 314)

www.padippakam.com



## 6

## ஆசியா மற்றும் இந்தியாவில் தேசிய இனப் பிரச்சினை

1. மிகவும் அதிக மக்கள் நெருக்கமாக வாழும் கண்டமாகிய ஆசியாவின் பெரும் பகுதி "பெரும் வல்லரசுகளின்" காலனி நாடுகளையோ அல்லது தேசிய நோக்கில் படுமோசமாகச் சார்ந்திருக்கின்ற, ஒடுக்கப் படுகின்ற அரசுகளையோ கொண்டதாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எல்லோருக்கும் தெரிந்ததுதான் இந்தச் சூழ்நிலை; ஆசியா முழுவதிலும் சப்பானில் மட்டும்தான், அதாவது ஒரு சுதந்திரமான தேசிய அரசிலல் மட்டும்தான் பண்ட உற்பத்தியின் மிகவும் முழுமையான வளர்ச்சிக்கும் மிகச் சுதந்திரமான, விரிவான, வேகமான முதலாளித்துவ வளர்ச்சிக்கும் தேவையான நிலைமைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்ற சந்தேகமற்ற உண்மையை இது எவ்விதத்திலும் அசைக்க முடியுமா என்ன? சப்பான் ஒரு பூர்சுவா அரசு; அந்தக் காரணத்தினால் அது மற்ற தேசிய இனங்களை ஒடுக்கி, காலனிகளை அடிமைப்படுத்த தொடங்கிவிட்டது. முதலாளித்துவம் குலைந்து வீழ்வதற்கு முன்னால் சுயேச்சையான தேசிய அரசுகள் என்ற அமைப்பு முறையை அய்ரோப்பாவைப் போல் உருவாக்குவதற்கு ஆசியாவிற்கு காலமிருக்குமா என்பதை நாம் சொல்வதற்கில்லை; ஆனால் முதலாளித்துவமானது ஆசியாவைத் தட்டி எழுப்பிவிட்டதன் விளைவாக அக்கண்டத்திலும் கூட எல்லா இடங்களிலும் தேசிய இயக்கங்களைத் தோற்றுவித்திருக்கிறது என்பதும், இவ்வியக்கங்களின் போக்கு ஆசியாவில் தேசிய அரசுகள் உருவாவதற்கு வழிசெய்யும் பாதையை நோக்கிச் செல்லும்போக்கு என்பதும், இத்தகைய அரசுகள்தான் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கேற்ற மிகச்சிறந்த நிலைமைகளை உண்டாக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

(பக். 77,78)

2. இன்று, இந்தியா ஒரே முழுமை என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தியாவில் ஒரு புரட்சிகர எழுச்சி ஏற்படும் போது, தமக்கென்று தனிப்பட்ட மொழிகளையும் கலாச்சாரங்களையும் கொண்டவையும் இதுவரை அறியப்படாதவையுமான பல தேசிய இனங்கள் அரங்கில் தோன்றும் என்பதில் அய்யமில்லை. பல்வேறு தேசிய இனங்களிடையே பாட்டாளி வர்க்கக் கலாச்-சாரத்தைக் கொண்டுவருவது என்பது, இந்தத் தேசிய இனங்களின் மொழிகள் மற்றும் வாழ்க்கை முறைக்கு இசைவான முறையிலே நடைபெறும் என்பதில் அய்யமில்லை.

—ஸ்டாலின், (1925), தொகுதி 7, (பக் 141)

3. ''இந்தியாவின் விசயத்தில் கூட முதலாளித்துவ வளர்ச்சி மேலே செல்லச் செல்ல அதுவரை உறங்கிக் கிடந்த எண்ணற்ற தேசிய இனங்கள் உயிர்பெற்று எழக் காணலாம்.

—ஸ்டாலின், (1912), (இன்றைய இந்தியா)

## 7

## தொழிலாளிவர்க்க சனநாயகத்தின் தேசியத் திட்டம்

1. தொழிலாளிவர்க்க சனநாயகத்தின் தேசியத்திட்டம் இதுதான்: எந்த ஒரு தேசிய இனத்துக்கோ அல்லது மொழிக்கோ எந்தவித விசேச உரிமைகளும் அறவே கிடையாது; அரசியல் ரீதியாக தேசிய இனங்களின் சுய நிர்ணயம் என்ற பிரச்சினையைத் தீர்ப்பது-அதாவது முற்றிலும் சுதந்திரமான, சனநாயக வழிமுறைகளின் மூலம் அவை அரசுகளாகப் பிரிவது; ஒரு தேசிய இனத்துக்கு எத்தகைய விசேச உரிமைகளையும் புகுத்துகிறதும் தேசிய இனங்களின் சமத்துவத்தையோ அல்லது சிறுபான்மையாய் உள்ள ஒரு தேசிய இனத்தின் உரிமைகளையோ பாதிக்கின்றதுமான எந்த ஒரு

www.padippakam.com



நடவடிக்கையையும் சட்டவிரோதமானதாகவும், பயனற்றதாகவும் செய்யும் ஒரு சட்டத்தை அரசு முழுவதுக்கும் பிறப்பிப்பது- அத்தகையதொரு நடவடிக்கை அரசியல் சட்டத்துக்குப் புறம்பானதாக உள்ளதால் அதை ரத்து செய்ய வேண்டுமென்றும். அதை அமுல் செய்ய முயலுபவர்களை குற்றச்சட்டப்படி தண்டிக்கவேண்டும் என்றும் கோரும் உரிமை அரசின் ஒவ்வொரு குடிக்கும் உண்டு.

பல்வேறு பூர்சுவாக் கட்சிகளும் மொழிப் பிரச்சினை முதலிய பல பிரச்சினைகளைப் பற்றி கூக்குரலிட்டு சச்சரவு செய்துகொண்டு இருப்பதற்கு எதிரிடையாக தொழிலாளி வர்க்க சனநாயகம் தொழிலாளர் வர்க்க அமைப்புகள் அனைத்திலும் தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், துய்ப்போர் சங்கங்கள், கல்வி ஸ்தாபனங்கள் முதலிய அனைத்திலும்—எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் நிபந்தனைகள் எவையும் இல்லாமல் முழுக்க முழுக்க இணைந்து கலந்திட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புகிறது. இது எவ்வகையான பூர்சுவா தேசியவாதத்துக்கும் முற்றிலும் மாறானது. இத்தகையதொரு அய்க்கியமும் கலப்பு இணைப்பும் மட்டுமே சனநாயகத்தை ஆதரித்துக் காத்து மூலதனத்துக் கெதிராக—சர்வதேச ரீதியாக ஏற்கனவே வளர்ந்து போய்விட்ட, மேலும் வளர்ந்து கொண்டிருக்கிற மூலதனத்துக்கெதிராக—தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும்; எல்லா விசேச உரிமைகளுக்கும், எல்லாச் சுரண்டலுக்கும் புறம்பானதொரு புதிய வாழ்க்கை முறையை நோக்கி மனித சமூகத்தின் வளர்ச்சியைச் செலுத்த முடியும்.

(பக்.23,24)

2. பாட்டாளி வர்க்க நோக்கு நிலையிலிருந்து தேசியச் செயல்திட்டம் ஒன்றை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்; சிறந்த உதாரணங்களை விட்டுவிட்டு மோசமானவைகளை முன்மாதிரிகளாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எப்பொழுதிருந்து சிபாரிசு செய்யப்பட்டது?

எப்படியானாலும், எந்த நாடுகளில் முரணில்லாத சனநாயகம் நிலவுகிறதோ அங்கு மட்டும்தான் முதலாளித்துவத்தின் கீழ் தேசிய அமைதி (எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவில்) அடையப்பட்டிருக்கிறது என்ற உண்மை மறுக்க முடியாததாகவும் மறுக்கப்படாததாகவும் இதுவரை இருந்து வருகிறதல்லவா? இது மறுக்க முடியாதது; எனவே, சந்தர்ப்பவாதிகள் மீண்டும், மீண்டும் சுவிட்சர்லாந்தை விட்டு ஆஸ்திரியாவை மேற்கோள் காட்டுவது காடெட்டுகளுக்கே உரிய தந்திரம் தவிர வேறொன்றுமில்லை; ஏனென்றால் காடெட்டுகள்தான் மிகச்சிறந்த அய்ரோப்பிய அரசியல் அமைப்பு சட்டங்களை விட்டுவிட்டு மிக மோசமானவைகளை எப்போதும் காப்பியடிக்கிறார்கள்.

சுவிட்சர்லாந்தில் மூன்று ஆட்சி மொழிகள் இருக்கின்றன; ஆனால் பொதுவாக் கெடுப்புக்குச் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் அய்ந்து மொழிகளில், அதாவது மூன்று ஆட்சி மொழிகளுடன் இரு ரோமன் திசை மொழிகளிலும், அச்சிடப்படுகின்றன. 1900ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி சுவிட்சர்லாந்தின் 33,15,443 மக்களில் 38,651 பேர், அதாவது ஒரு சதவிகிதத்துக்கு சற்று அதிகமான பேர், இவ்விரு திசைமொழிகளைப் பேசுகிறார்கள். "சாதாரணப் படை ஆட்களுடன் அவர்களது சொந்த மொழியிலேயே பேசும் முழுச்சுதந்திரம்" சேனையிலுள்ள மேல்தர அதிகாரிகளுக்கும் கீழ்த்தர அதிகாரிகளுக்கும் "வழங்கப்பட்டுள்ளது" கிரௌபுண்டன், வல்லிஸ் ஆகிய இரு காண்டன்களிலும் (இவை ஒவ்வொன்றிலும் ஒரு லட்சத்துக்குச் சற்று அதிகமான மக்கள் வசிக்கிறார்கள்) இரண்டு திசை மொழிகளும் சம அந்தஸ்து பெற்றுள்ளன.

(பக்.54,55)

3. யார் ஒருவன் தேசிய இனங்கள், மொழிகளின் சம அந்தஸ்தை அங்கீகரித்து அதற்காகப் போராடவில்லையோ, எல்லா தேசிய ஒடுக்கலையும், சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடவில்லையோ அவன் ஒரு மார்க்சியவாதியே அல்ல; அவன் ஒரு சனநாயகவாதிகூட அல்ல; அதில் சந்தேகமே இல்லை.

(பக்.33)

படிப்பகம்

www.padippakam.com



4. தேசிய ஒடுக்குமுறை அனைத்தையும் எதிர்ப்பதா? —கண்டிப்பாக ஆம்! எந்தவகையான தேசிய வளர்ச்சிக்கும், பொதுவாக "தேசியக் கலாச்சாரத்திற்கும்" ஆதரவாகப் போராடுவதா? — நிச்சயமாக இல்லை. முதிர்ச்சியடையாத தேசிய இயக்கங்கள் உலகம் முழுவதும் உள்ளன என்பதற்கு உதாரணங்களை முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சி நமக்கு கொடுக்கிறது. பல சிறிய தேசங்களிலிருந்து அல்லது சில சிறிய தேசங்களுக்குப் பாதகமான வகையில், பெரிய தேசங்கள் உருவாதல்; தேசங்கள் இரண்டறக் கலத்தல் என்ற உதாரணங்களை அது கொடுக்கிறது. பொதுவாகத் தேசிய இன வளர்ச்சி என்பது பூர்சுவா தேசியவாதக் கோட்பாடுதான்; எனவேதான் பூர்சுவா தேசியவாதம் எதனுடனும் சேராமல் தனித்துச் செயல்படுகிறது; எனவேதான் தேசியப் பிரச்சினை பற்றிய சச்சரவு முடிவின்றி நீடிக்கிறது.

(பக். 44,45)

5. தேசிய அமைதியைப் பெறுவதற்காக வேண்டி (இந்த அமைதியை பூர்சுவாக்களால் பூரணமாக ஏற்படுத்த முடியாது; முழு சனநாயகம் மூலமாக மட்டுமே இதை அடைய முடியும்) சம உரிமைகள் பெற வேண்டி, வர்க்கப் போராட்டத்துக்கு சிறந்த நிலைமைகளைத் தோற்றுவிக்கவேண்டி தொழிலாளர் வர்க்கம் பூர்சுவாக்களை ஆதரிக்கிறது. எனவே, பூர்சுவாக்களின் செயல்பூர்வவாதத்துக்கு எதிராகத்தான், தேசியப் பிரச்சினையில்பாட்டாளிகள் தங்களது கோட்பாடுகளைக் கொண்ட கொள்கையை எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் பூர்சுவாக்களுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவைத்தான் அளிக்கிறார்கள். தங்களது தேசிய இனத்துக்கு விசேச உரிமைகள் அல்லது விசேச ஆதாயங்கள்-இவைதான் ஒவ்வொரு பூர்சுவா வர்க்கமும் தேசியப் பிரச்சினையில் அடைய விரும்புவது; இதுதான் "செயல்பூர்வமாயிருத்தல்" என்பது. பாட்டாளி வர்க்கமோ, விசேச உரிமைகள் அனைத்தையும், விசேச நிலைமைகள், தனிச் சலுகைகள் அனைத்தையும் எதிர்க்கிறது.

(பக். 93)

6. பூர்சுவா சமுதாயத்தில் தேசிய இனம் என்ற கோட்பாடு வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது. இந்தச் சமுதாயத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, தேசிய இயக்கங்கள் வரலாற்றுரீதியில் முறையானவை என்பதை மார்க்சியவாதி முழுமையாக ஏற்றுக் கொள்கிறார். ஆனால் இந்த ஏற்பு தேசியவாதத்தை ஆதரித்துப் பேசுவதாகிவிடாமல் இருக்கும் பொருட்டு, அத்தகைய இயக்கங்களில் எது முற்போக்கானதோ அதை மட்டுமே ஏற்றுக் கொள்வதுடன் அது கண்டிப்பாக நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். பூர்சுவா சித்தாந்தமானது பாட்டாளி வர்க்க உணர்வை மங்கச் செய்வதில் இந்த ஏற்பு கொண்டுபோய் விடாதபடி இருப்பதற்காக அவ்வாறு கண்டிப்பான வரையறையில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

நிலப்பிரபுத்துவ மயக்க மந்த நிலையிலிருந்துமக்கள் விழித்தெழுதல்,தேசிய ஒடுக்கல் முறை அனைத்தையும் எதிர்த்தும்,மக்களின் தேசங்களின் அரசுரிமைக்காகவும் அவர்கள் போராடுதல் ஆகியவை முற்போக்கானவை. ஆகையால், தேசியப் பிரச்சினையின் எல்லா அம்சங்களிலும் மிகவும் திடமான, முரண்பாடுகளற்ற சனநாயகம் நிலவவேண்டும் என்பதற்காகப் போராடுவது மார்க்சியவாதியின் கட்டாயக் கடமை. இந்தப் பணி பெரும்பாலும் எதிர்மறையானது. ஆனால், தேசியவாதத்துக்கு ஆதரவாகப் பாட்டாளி வர்க்கம் இந்த அளவுக்குத்தான் செல்லமுடியும். ஏனெனில் இதற்கு அப்பால், தேசியவாதத்தை பலப்படுத்துவதற்காக முயலும் பூர்சுவா வர்க்கத்தின் "ஆக்கப்பூர்வமான நடவடிக்கை" தொடங்குகிறது.

நிலப்பிரபுத்துவ தளைகளையும் தேசிய இன ஒடுக்குமுறை அனைத்தையும் எந்த ஒரு தேசிய இனமோ அல்லது மொழியோ பெற்றிருக்கும் விசேச உரிமைகள் அனைத்தையும் ஒழித்தல் — இது சனநாயகசக்தி என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் கட்டாயக் கடமையாகும். தேசியப் பிரச்சினை பற்றி சச்சரவினால் மங்கடிக்கப்பட்டு, தடைபட்டுள்ள பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு இது நிச்சயம் உகந்தது. ஆயினும் பூர்சுவா தேசியவாதத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஆதரவாக, இந்தக் கண்டிப்பான வரையறைக் கும், திட்டவட்டமான வரலாற்று வரம்பு கட்கும் அப்பால் போவது, பாட்டாளி வர்க் கத்துக்குத் துரோகம் செய்வது ஆகும். பூர்சுவாக்களின் சார்பில் நிற்பதாகும். இங்கே ஒரு எல்லைக்கோடு இருக்கிறது ஆனால் அது பெரும்பாலும் அடிக்கடி மெல் லியதாக இருக்கும்.

(பக்.43,44)

7. தேசியப் பிரச்சினைக்கு முதலாளித்து வத்தின் கீழ் தீர்வுகாண்பது சாத்தியமென் றால், அது ஒரே ஒரு தீர்வாகத்தானிருக்கும், அது முரண்பாடுகளற்ற சனநாயகத்தின் மூலம்தான் இயலும் என்று நான் வலியுறுத் திக்கூறினேன். இதற்குச் சான்றாக மற்ற விசயங்களுடன் சுவிட்சர்லாந்தை மேற் கோள் காட்டினேன்.

(பக்.52)

8. சோசலிசத்தின் கீழ் தேசிய இனங் களின் சுயநிர்ணயத்தை அமுலாக்க மறுப் பது சோசலிசத்துக்குத் துரோகம் செய்வதா கும் என்பதை நாம் வலியுறுத்தியிருக்கிறோம்

(பக்.197)

9. தேசிய ஒடுக்குமுறை இருக்கும் ஒரு நிலையில் தேசிய விடுதலைப் பணியைப் புறக்கணிப்பது சோசலிஸ்டுகளின் நோக்கு நிலையின்படி சந்தேகத்திற்கு இடமற்ற தவறாகும்.

இந்த நோக்கு நிலையிலுள்ள மிகவும் முக்கியமான அடிப்படையான கூற்றுகளை இன்டர்நேசனலின் தீர்மானம் எடுத்துரைக் கிறது. ஒருபுறத்தில் எல்லாத் தேசங்களின் சுயநிர்ணயத்துக்கான பரிபூர்ண உரிமையை யும் நேரடியாகவும் அய்யத்துக்கிடமின்றியும் முழுமையாக ஏற்றுக்கொள்வது; மறுபுறம் தொழிலாளர்கள் தங்களது வர்க்கப் போராட் டத்தில் சர்வதேசரீதியில் அய்க்கியப்பட வேண்டும் என்று அதே போல அய்யத்துக் கிடமின்றி, திட்டவட்டமாக வேண்டுகோள் விடுப்பது.

(பக். 129)

10. கிழக்கு அய்ரோப்பாவிலும் ஆசியா விலும் பூர்சுவா — சனநாயகப் புரட்சிகள் தொடங்கிவிட்ட இக்காலத்தில், தேசிய இயக்கங்கள் விழித்தெழுந்து தீவிரமடையும் இக்காலத்தில், சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் நிறுவப்படும் இக்காலத் தில், தேசியக் கொள்கைப்போக்குப் பற்றி இக்கட்சிகளின் பணி இரண்டுவகைப்பட்ட தாக இருக்கவேண்டும்; எல்லாத் தேசங் களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்வது-ஏனென்றால், பூர்சுவா-சனநாய கச் சீரமைப்பு இன்னும் முற்றுப்பெறவில்லை; தொழிலாளி வர்க்க சனநாயகமானது முரண் பாடற்ற முறையில், தீவிரமாக, மனப்பூர்வ மாக - மிதவாத, கோக்கோஷ்கின் முறையில் அல்ல - தேசங்களுக்குச் சம உரிமைக்காகப் போராடுகிறது; மற்றும் ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைக்குள் வாழும் எல்லா தேசங்களின் பாட்டாளி மக்களும் தங்களது வர்க்கப் போராட்டத்தில் நெருக்கமாக, பிரிக்க முடியாதபடி ஒன்றுபடுவது-அவ்வரசின் வரலாற்றில் எம்மாறுதல்கள் நிகழ்ந்தாலும் பூர்சுவாக்களால் தனி அரசுகளின் எல்லை கள் எவ்வாறு மாற்றப்பட்டாலும் இந்த ஒற்றுமை நீடிப்பதாக இருக்கும்.

பாட்டாளி வர்க்கத்தின் இந்த இருவகைக் கடமையைத்தான் இன்டர்நேசனலின் 1896ம் வருடத்திய தீர்மானம் வகுக்கிறது. 1913 கோடையில் நடந்த ருசிய மார்க்சிய வாதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் கோட்பாட்டு அடிப்படையில் இதுதான். இத்தீர்மானத்தின் 4வது அம்சம் சுயநிர்ணய உரிமையை, பிரிந்துபோகும் உரிமையை அங்கீகரிக்கிறது, இது தேசிய வாதத்துக்கு உயர்ந்தபட்ச அளவு “கொடுத் துவிடுவதாக” தோன்றுகிறது என்றும் (உண்மையில், எல்லா தேசங்களின் சுய நிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்வது உயர்ந்தபட்ச அளவு சனநாயகத்தையும் குறைந்தபட்ச அளவு தேசியவாதத்தையும் குறிக்கிறது); ஆனால் 5வது அம்சமானது, எந்த ஒரு தேசத்தின் பூர்சுவாக்களுடைய தேசியவாதக் கோசங்களுக்கும் எதிராகத் தொழிலாளர்களை எச்சரிக்கிறது, சர்வதேச ரீதியில் அய்க்கியப்பட்ட பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களின் எல்லா தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் அய்க்கியத்துடன் இணைந்திருக்க வேண்டும் என அது கோரு கிறது என்றும் இவ்விரண்டு அம்சங்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com



இடையிலும் ஒரு ''முரண்பாட்டை'' காண்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் மிகவும் மந்தபுத்திக்காரர்களுக்குத் தான் இது ஒரு ''முரண்பாடு''. அவர்களால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாது. உதாரணமாக, பிரிந்து செல்லவும், தனியரசு அமைத்துக் கொள்ளவும், நார்வேக்கு உள்ள சுதந்திரத்தை சுவீடன் தொழிலாளர்கள் ஆதரித்தபொழுது சுவீடன், நார்வேப் பாட்டாளிமக்களுக்கு இடையிலான ஒற்றுமையும் வர்க்க ஒருமைப்பாடும் எவ்வாறு ஏன் இலாபமடைந்தது என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

(பக். 132)

11. எப்பொழுது தேசிய ஒடுக்குமுறையும் தேசியத் தகராறுகளும் ஒன்றிணைந்து வாழும் வாழ்க்கையைச் சகிக்க முடியாததாக்குகின்றனவோ, எந்தவிதப் பொருளாதாரத் தொடர்புகளையும் தடைசெய்கின்றனவோ, அப்போது மட்டுமே மக்கள் பிரிவினையைக் கையாள்வார்கள். அப்பொழுது பிரிவதனால் முதலாளித்துவ வளர்ச்சியின் நலன்களும், வர்க்கப் போராட்ட சுதந்திரத்தின் நலன்களும் சிறந்த பயன்பெறுகின்றன.

(பக். 114,115)

12. தேசியத் தன்மையைக் கொண்ட ஒரு போராட்டத்தில் தேசியப் போராட்டம் எனும் வடிவத்தை வர்க்கப் போராட்டம் பெறுகிறது. அவற்றுக்கிடையிலான ஒற்றுமையை இது காட்டுகிறது. ஒருபுறம், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் இருக்கிற பல்வேறு வர்க்கங்கள் எழுப்புகிற அரசியல், பொருளாதார முழக்கங்கள் யாவும் அவ்வர்க்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பைச் சீர்குலைப்பதாக இருக்கக் கூடாது. மறுபுறம் (சப்பானை எதிர்ப்பதென்னும்) தேசியப் போராட்டத்தினுடைய முழக்கங்கள் யாவும் எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவான தொடக்க நிலையாக இருக்க வேண்டும். ஒற்றுமைக்கும் தனியுரிமைக்கும் இடையிலும் தேசியப் போராட்டத்திற்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் இடையிலும் ஒற்றுமை உண்டு

—மாவோ, தே.நூல் 2, (பக். 215)

13. நம்முடைய வரலாற்று மரபைக்கற்று, அதனை ஆய்வுக்குட்படுத்தி தொகுத்தெடுப்பதற்கு மார்க்சிய அணுகுமுறையைக் கையாள வேண்டும். அதுவும் நம்முடைய கடமைகளில் ஒன்று. நம்முடைய (சீன நாட்டு) தேசிய வரலாறு பல்லாயிரம் ஆண்டு நீண்ட வரலாற்றைக் கொண்டது. அதற்கேயுரிய தனி இயல்புகள் உள்ளன. அது கொண்டுள்ள அளவிடற்கரிய செல்வங்களின் வரலாற்று அறிவைப் பொறுத்தவரை நாம் பள்ளிச் சிறுவர்கள். தற்காலச் சீனா கடந்த காலச் சீனாவிலிருந்தே உதித்தெழுந்தது. வரலாற்றை மார்க்சிய கண்ணோட்டத்தில் அணுகுபவர்களாகிய நாம் நம்முடைய வரலாற்றை வெட்டியெறிந்து விடக்கூடாது. கன்பியூசிசு தொட்டு சன்யாட்சன் வரையிலான நம்முடைய வரலாற்றை நாம் தொகுத்துப் பார்க்க வேண்டும். அவ்வரலாற்றின் சிறப்பான மரபுகளை நமதாக்கிக் கொள்ள வேண்டும். இன்றைய மாபெரும் இயக்கத்தை வழிநடத்துவதற்கு அது இன்றியமையாதது. மார்க்சிஸ்டுகளாகிய, கம்யூனிஸ்டுகளாகிய நாம் சர்வதேசக் கண்ணோட்டம் உடையவர்கள். ஆனால் நம்முடைய நாட்டிற்கேயுரிய தனி இயல்புகளுடன் சர்வதேசியம் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அச் சர்வதேசியம் ஒரு தெளிவான தேசிய வடிவத்தைப் பெற வேண்டும். அப்போது மட்டுமே மார்க்சியத்தை நாம் நடைமுறைப்படுத்த முடியும். எல்லா நாடுகளிலும் இருக்கின்ற சரியான புரட்சி நடைமுறையுடன் ஒன்றுபடுவதிலேயே மார்க்சிய-லெனினியத்தின் மிகப் பெரும் வலிமை இருக்கிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும்கூட, அது சீனாவிற்கேயுரிய தனிச் சூழல்களில் மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டை செயல்படுத்த கற்றுக் கொள்வதைப் பொறுத்ததே. சதையோடு சதையாய் இரத்தத்தோடு இரத்தமாய் இரண்டறக் கலந்த நிலையில் மாபெரும் சீன மக்களின் ஒரு பகுதியினராகவே சீன கம்யூனிஸ்டுகள் இருக்கின்றனர். சீனாவிற்கேயுரிய இயல்புகளிலிருந்து பிரிந்து நின்று மார்க்சியம் பேசுவது வெறும் அருவமான மார்க்சியமே-வெற்று மார்க்சியமே. மார்க்சியத்திற்குரிய ஒவ்வொரு வெளிப்பாடும் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் சீனத் தன்மையைப் பெற வேண்டும். அவ்வகையில் சரியான முறையில் மார்க்சியத்தைச்

படிப்பகம்

www.padippakam.com



செயல்படுத்துவதைப்பற்றி கற்றுத் தீர்வு காண்பது சீனத்திற்கேயுரிய தனித்தன்மைகளின் அடிப்படையில் மார்க்சியத்தை செயல்படுத்துவதாகும். அதுவே கட்சி முழுவதற்கும் உடனடிச் சிக்கலாக இருக்கிறது. பிறநாடுகளின் போலிமாதிரிகளைப் பின்பற்றுவது ஒழிக்கப்பட வேண்டும். வெறுமையும் அருவமும் தோய்ந்த மெட்டுக்களில் பாடுவது குறைய வேண்டும். வறட்டுத்தனத்தைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். சீன மக்கள் விரும்புகின்ற புத்தம் புதிய, உயிரோட்டம் கொண்ட சீன நடையும் உணர்வும் அங்கே இடம்பெற வேண்டும். சர்வதேசிய உள்ளடக்கத்தை தேசிய வடிவிலிருந்து பிரித்துப் பார்ப்பது சர்வதேசியம் பற்றிய அரிச்சுவடி கூட தெரியாதவர்களின் செயலாகும். மாறாக சர்வதேசியத்தையும் அதனுடைய தேசிய வடிவத்தையும் நாம் நெருக்கமாக இணைக்க வேண்டும். இதில் கடுமையான தவறுகளை நம் அணிகளிடையே பார்க்கிறோம். உணர்வுபூர்வமாக அத்தவறுகளை நாம் களைய வேண்டும்.

—மாவோ, தே. நூல் 2, (பக். 209, 210)

14. தேசிய இனம், அரசு என்ற பிரச்சினைகளையும் அதே வரலாற்று அடிப்படையில் தான் மார்க்சிய சோசலிசம் வைக்கிறது- சென்ற காலத்தை விளக்குவது என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்தை அச்சமின்றி முன்னறிந்து கூறி, அதனைச் சாதிப்பதற்குத் தைரியமான நடைமுறைப் பணி மேற்கொள்வது என்ற அர்த்தத்திலும், தேசங்கள் என்பவை சமுதாய வளர்ச்சியின் முதலாளித்துவ சகாப்தத்தில் தவிர்க்க முடியாதபடி உண்டாகிற ஒரு படைப்பு, ஒரு வடிவம் ஆகும். தொழிலாளி வர்க்கம், "தன்னையும் தேசத்துக்குள் ஒரு பகுதியாக்கிக் கொள்ளாமல்" தானும் "தேசியத்தன்மை பெறாமல் ("இந்தச் சொல்லின் முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல'') அது, பலம் பெற முடியவில்லை, பக்குவம் பெற முடியவில்லை. உருவாக முடியவில்லை.

—லெனின் (காரல்மார்க்சும் அவரது போதனையும், பக். 52, தமிழ்ப்பதிப்பு)

15. தேசியப் பிரச்சினையில் செயல்பூர்வமானதும் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததும், சனநாயகம், சுதந்திரம், பாட்டாளி வர்க்க அய்க்கியம் ஆகியவற்றை உண்மையில் பேணுகின்றதுமான கொள்கை இதுதான். எல்லாத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகிற உரிமை அளிப்பது; பிரிந்து போகிற பிரச்சினை எழுகின்றபோது எல்லா ஏற்றத்தாழ்வுகளையும், எல்லா விசேச உரிமைகளையும், எல்லாத் தனித்துவ போக்கையும் நீக்கும் நோக்கத்துடன் அதை அணுகிச் சீர்தூக்கிப் பார்ப்பது.

(பக்.98)

16. நார்வே தேசிய இன மக்களில் பெரும்பான்மையினர் முடியாட்சியை விரும்பினர், ஆனால் பாட்டாளிகளோ ஒரு குடியரசை விரும்பினர். எனவே, நார்வேயின் பாட்டாளி வர்க்கம் இரண்டில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியிருந்தது: நிலைமைகள் சாதகமாக இருந்தால் புரட்சி; அல்லது பெரும்பான்மை விருப்பத்துக்கு இணங்கி நின்று தொடர்ந்து பிரச்சாரமும் கிளர்ச்சியும் நடத்துவது.

(பக். 122)

17. தேசிய சுயநிர்ணயம் என்பதும் பரிபூரண தேசிய விடுதலைக்கானப் போராட்டமும், பிறரிடங்களைத் தமதாகச் சேர்த்துக் கொள்ளும் வலிந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமும் ஒன்றுதான். சோசலிஸ்டுகள், தாம் சோசலிஸ்டுகளாயிருப்பதற்கு முழுக்குப் போடாமல் இருக்கும் வரை அத்தகைய போராட்டத்தை அது எழுச்சியாகவோ, போராகவோ எந்த வடிவத்திலிருந்தாலும் நிராகரித்துவிட முடியாது.

கேலி(பக்.15)

18. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் உழைக்கும் மக்களுக்கு ஒரு தேசமும் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சரியே. ஆனால் அதில் சொல்லப்பட்டிருப்பது இது மட்டுமே அல்ல. தேசிய அரசுகள் உருவாக்கப்படுகின்ற பொழுது பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம் ஓரளவுக்கு விசேசமானதாகும் என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் கருதுகோளை (உழைக்கும் மக்களுக்கு ஒரு தேசமும் கிடையாது) மட்டும் எடுத்துக் கொள்வதும் இரண்டாவது கருதுகோளோடு (தேசியரீதியாகத் தொழிலாளர்கள் ஒரே

படிப்பகம்

www.padippakam.com



வர்க்கமாக அமைக்கப்பட்டிருக்கிறார்கள்- ஆனால் இது பூர்சுவாக்களைப் போன்ற அதே அர்த்தத்தில் அல்ல) அதற்குள்ள தொடர்பை மறந்து விடுவதும் மிகப்பெரிய தவறாகும்.

—சர் (பக்.240)

19. நமது திட்டம் உழைக்கும் மக்களின் சுயநிர்ணயத்தைப் பற்றிப் பேசவில்லை. ஏனெனில் அது தவறாகும். அது உண்மையில் எது நிலவுகிறதோ அதைப் பற்றி பேசுகிறது. மத்திய காலத்திலிருந்து முதலாளிய சனநாயகத்திற்கும், முதலாளிய சனநாயகத்திலிருந்து பாட்டாளி வர்க்க சனநாயகத்திற்கும் செல்லும் பாதையில் தேசங்கள் வேறுபட்ட கட்டங்களிலிருக்கின்றன என்ற நமது திட்டத்திலுள்ள கருதுகோள் மிகவும் சரியானதாகும். நாம் இந்தப் பாதையில் பல்வேறு வளைவு நெளிவுகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும். ஒவ்வொரு தேசமும் சுயநிர்ணய உரிமை பெற்றாக வேண்டும்; அது உழைக்கும் மக்கள் சுயநிர்ணயம் பெறுவதை எளிதாக்கும். பின்லாந்தில் முதலாளி வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கம் விலகிச் செல்லும் முறை குறிப்பிடும்படி தெளிவானதாகவும், வேகமானதாகவும் ஆழமானதாகவும் உள்ளது. எவ்வாறாயினும் பிரச்சினைகளின் செயல்முறை நமது நாட்டைப்போல் இருக்கப் போவதில்லை. நாங்கள் பின்லாந்து தேசம் எதையும் அங்கீகரிக்கப் போதில்லை — தொழிலாளி வர்க்கப் பின்லாந்து தேசம் தவிர—என பிரகடனப்படுத்தினால் அதைப் போன்ற முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. உண்மையில் நிலவுவதை நாம் அங்கீகரிக்க மறுத்தால் அது நம்மை அங்கீகரிக்கும்படி நிர்பந்திக்கும்.

—லெனின், தொகுதி 29 (பக். 174).

20. மார்க்சும், ஏங்கெல்சும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில்உழைக்கும் மக்களுக்கு ஒரு தேசமும் கிடையாது என்று கூறினார்கள். ஆனால் அதே மார்க்ஸ், ஒன்றுக்கு அதிகமான தடவைகளில்தேசியயுத்தத்துக்கு அறைகூவினார்:மார்க்ஸ்1848-ம் வருடத்திலும் ஏங்கெல்ஸ் 1859-ம் வருடத்திலும். (அவருடைய போவும் ரைனும் என்ற பிரசுரத்தின் கடைசியில் செர்மானியர்களின் தேசிய உணர்ச்சி நேரடியாகத் தூண்டிவிடப் படுகிறது; அவர்கள் தேசிய யுத்தத்தை தொடுக்கவேண்டுமென்று நேரடியாகவே சொல்லப் படுகின்றது); எங்கெல்ஸ் 1891-ம் வருடத்தில் அன்றைக்கு செர்மனிக்கு எதிராக பிரான்சும்(புலான்ழே)மூன்றாம் அலெக்சாந்தரும் யுத்தம் தொடுப்போம் என்று பயமுறுத்தி ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்த நேரத்தில் ''தாய்நாட்டைக் காப்பதை'' நேரடியாக அங்கீகரித்தார்.

மார்க்சும், ஏங்கெல்சும் இன்றைக்கு ஒன்றையும் மறுநாள் வேறொன்றையும் சொல்கின்ற குழப்பவாதிகளா? இல்லை. ஒரு தேசிய யுத்தத்தில் ''தாய் நாட்டைக் காப்பதை" அங்கீகரிப்பது மார்க்சியத்தை முழுமையாகப் பூர்த்திசெய்கிறது என்பது என்னுடைய கருத்து.

—சர்(பக்.241)

## 8

## தேசியக் கலாச்சாரமும் பூர்சுவா தேசியவாதமும்

1. ''தேசியக் கலாச்சாரம்" என்ற கோசத்தை முழக்கிக் கொண்டு ஆஸ்திரியாவிலும், ருசியாவிலும் உள்ளஎல்லாதேசங்களையும் சேர்ந்த பூர்சுவாக்கள் உண்மையில் தொழிலாளர்களைப் பிளவுபடுத்துதல், சனநாயகத்தை நலிவுபடுத்துதல், நிலப்பிரபுத்துவவாதிகளிடம் மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் விற்பதற்காகப் பேரம் பேசுதல் என்ற கொள்கையைத்தான் கடைப்பிடிக்கிறார்கள்.

தொழிலாளர் வர்க்க சனநாயகத்தின் கோசம் ''தேசியக் கலாச்சாரம்" அல்ல; அது சனநாயகத்தினுடையதும் உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்ற தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுடையதுமான சர்வதேசக் கலாச்சாரம். ''ஆக்க முறையான'' தேசியத்

படிப்பகம்

www.padippakam.com



திட்டங்கள் பலவற்றை வைத்து பூர்சுவாக்கள் மக்களை ஏமாற்றட்டும். வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளி பூர்சுவாக்களுக்கு ஒரே பதில் சொல்வான்: தேசியப் பிரச்சினைக்கு (இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்ட, சச்சரவுகளும், சுரண்டலும் நிறைந்த முதலாளித்துவ உலகில் பொதுவாக எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கான) ஒரே ஒரு தீர்வுதான் இருக்கிறது—முரண்பாடுகள் இல்லாத சனநாயகம் தான் அந்தத் தீர்வு. மேற்கு அய்ரோப்பாவில் பழங்கலாச்சாரம் ஒன்றையுடைய சுவிட்சர்லாந்தும் கிழக்கு அய்ரோப்பாவில், இளங்கலாச்சாரம் ஒன்றையுடைய பின்லாந்தும் அதற்கு நிருபணங்கள்.

(பக்.22,23)

2. வளர்ச்சிபெறாத ஆரம்ப நிலையிலாவது சனநாயகக் கலாச்சாரம், சோசலிசக் கலாச்சாரம் ஆகியவற்றின் மூல அம்சங்கள் ஒவ்வொருதேசியக் கலாச்சாரத்திலும் இருக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு தேசத்திலும் உழைத்து உழலுகின்ற, சுரண்டப்படுகின்ற மக்கள் இருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகள் தவிர்க்கமுடியாத வகையில் சனநாயகம், சோசலிசம் என்பனவற்றின் சித்தாந்தத்தை தோற்றுவிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு தேசமும் ஒரு பூர்சுவா கலாச்சாரத்தையும் (பெரும்பாலான தேசிய இனங்கள் கறுப்பு நூற்றுவர் வகைப்பட்ட, மதச்சார்புடைய கலாச்சாரம் ஒன்றையும் கூட)அதுவும் ஆதிக்கமுதன்மையான கலாச்சாரம் என்ற வகையில் — அடிப்படை ''மூல அம்சங்களில்'' மட்டுமல்ல—பெற்றிருக்கின்றது. எனவே, பொது ''தேசியக் கலாச்சாரம்'' என்பது நிலப்பிரபுக்களுடைய, மதக் குருமார்களுடைய,பூர்சுவாக்களுடைய கலாச்சாரம் ஆகும். இந்த அடிப்படையான உண்மையை, மார்க்சியவாதிகளுக்கு மூலத் துவக்கமான உண்மையை, பூந்த்காரர் மறைவில் வைத்துவிட்டார்; இதைத் தன்னுடைய வார்த்தை வெள்ளக்குழப்பத்தில் "மூழ்கடித்து விட்டார்"; அதாவது. வர்க்க வேறுபாட்டை வாசகர்களுக்குத் திறந்துகாட்டித் தெளிவாக்குவதற்குப் பதிலாகஅதை உண்மையில் மூடிமழுப்பிவிட்டார். உண்மையைச் சொல்லப் போனால், பூந்த்காரர் ஒரு பூர்சுவாவைப் போல, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட தேசியக்கலாச்சாரம் ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கையை பரப்புவதில் தான் தனது நலன்கள் அனைத்தும் இருக்கின்றன என்று எண்ணும் ஒரு பூர்சுவாவைப் போல, நடந்து கொண்டார்.

''சனநாயகத்தினுடையதும் உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுடையது மான சர்வதேசியக் கலாச்சாரம்'' என்ற முழக்கத்தை முன்னெடுத்துவைக்கும் பொழுது, ஒவ்வொரு தேசியக் கலாச்சாரத்திலிருந்தும் அதனுடைய சனநாயக.சோசலிச அம்சங்களை மட்டுமே நாம் எடுத்துக் கொள்கிறோம். ஒவ்வொரு தேசத்தின் பூர்சுவா கலாச்சாரத்திற்கும் பூர்சுவா தேசியவாதத்திற்கும் நிச்சயமாக எதிராகத்தான், எதிராக மட்டுமேதான் நாம் அவைகளை எடுத்துக்கொள்கிறோம்.

(பக். 26,27)

3. ஒரு நாட்டிலும் உலகின் எல்லா நாடுகளிலும் வர்க்கங்கள் அனைத்தும் புறநிலை ரீதியாக எவ்வாறு அணிவகுத்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் தேசியக் கலாச்சாரம் என்ற முழக்கத்தின் உள் அர்த்தத்தை நிச்சயம் செய்கிறது. பூர்சுவாக்களின் தேசியக் கலாச்சாரம் என்பது ஒரு யதார்த்த உண்மை (நிலப்பிரபுக்களுடனும், மதக்குருமார்களுடனும் பூர்சுவாக்கள் எல்லா இடங்களிலும் பேரம் செய்து கொள்கிறார்கள் என்பதை நான் மீண்டும் கூறுகிறேன்). தொழிலாளர்களை பூர்சுவாக்கள் கடிவாளம் பூட்டி நடத்திச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட பூர்சுவா தேசியவாதமானது அவர்களின் மூளையை போதையில் ஆழ்த்துகிறது, அவர்களை முட்டாள்களாக்கி அவர்களிடையில் பிளவுகளை உண்டாக்குகிறது-இதுதான் இக்காலத்தின் அடிப்படை உண்மை.

(பக்.28)

4. பூர்சுவா தேசியவாதம், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்-இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணான சமரசப்படுத்த முடியாத முழக்கங்கள்; முதலாளித்துவ

படிப்பகம்

www.padippakam.com



உலகம் முழுவதிலுமுள்ள இருபெரும் முகாம்களுக்குஏற்றவாறுஉள்ளஇவை, தேசியப்பிரச்சினை விசயத்தில் இரு கொள்கைகளை (இல்லைஇரு, உலகக் கண்ணோட்டங்களை) வெளியிடுகின்றன. தேசியக்கலாச்சாரம்என்ற முழக்கத்தை ஆதரித்துப் பேசுவதிலும், அந்த அடிப்படையின் மீது, "கலாச்சார தேசிய சுயநிர்வாகம்'' என்று அவர்கள் கூறுகின்ற ஒரு முழுத்திட்டத்தையும் நடைமுறைச் செயல்திட்டத்தையும் கட்டி அமைப்பதிலும், நடைமுறையில் பூந்துக்காரர்கள் தொழிலாளர்களுக்கு மத்தியில் பூர்சுவா தேசியவாதத்தின கருவிகளாக நிற்கின்றனர்.

(பக்.30)

5. **நவீன தேசம் ஒவ்வொன்றிலும் இரண்டு தேசங்கள் இருக்கின்றன என்று நாம் எல்லா தேசியவாத சோசலிஸ்டுகளுக்கும் சொல்கிறோம். ஒவ்வொரு தேசியக் கலாச்சாரத்திலும் இரண்டு தேசியக் கலாச்சாரங்கள்** இருக்கின்றன. புரிஷ்கேவிச்சுகள், குச்கோவ்கள், ஸ்துருவேக்கள் ஆகியோருடைய பெரிய-ருசியக் கலாச்சாரம் இருக்கிறது; செர்னிசேவ்ஸ்கி, பிளெகானவ் ஆகியவர்களின் பெயரால் எடுத்துக்காட்டாக இருக்கும் பெரிய-ருசியக் கலாச்சாரம் ஒனறும் இருக்கிறது. இதேவகை இரு கலாச்சாரங்கள் உக்ரேய்னாவிலும், செர்மனியிலும், பிரான்சிலும், இங்கிலாந்திலும், யூதர்களுக்கிடையிலும் மற்றும் அதுபோல் பலவிடங்களிலும் இருக்கின்றன.

(பக் 39,40)

6. நசுக்கப்படும் தேசங்கள் விசயத்தில் தாம் ஆற்றவேண்டியசோசலிசக்கடமைகளை உணர்ந்துகொள்ள அவர்கள் தவறுவது ''ஆதிக்கம் வகிக்கும் தேசத்தின்'' பூர்சுவாக்களிடமிருந்து அவர்களது தப்பெண்ணங்களைப் பெற்று அப்படியே எதிரொலிப்பதாகும்.

(பக். 134)

## 9

## மொழி சமத்துவம் குறித்து — பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ மிதவாதிகளும்

1. ''பிரம்மாண்டமான'' ருசியா, எவ்வளவோ அதிகப் பல்வகைப்பாடு கொண்ட, படுமோசமாகப் பின்தங்கியுள்ள இந்த நாடு, எந்த ஒரு மொழிக்கும் எந்தவித விசேச உரிமைகளையும் நீடித்து வைத்து தனது வளர்ச்சியை ஏன் தடைபடுத்திக் கொள்ள வேண்டும்? அதற்கு மாறாக இருப்பது அல்லவா சரியாகும். மிதவாத கனவான்களே? ருசியா அய்ரோப்பாவை எட்டிப் பிடித்து முன்னேறி நிற்க விரும்பினால் எல்லாவித விசேச உரிமைகளையும் எவ்வளவு துரிதமாக முடியுமோ அவ்வளவு துரிதமாகவும் எவ்வளவு பரிபூரணமாக முடியுமோ அவ்வளவு பரிபூரணமாகவும் எவ்வளவு ஊக்கத்துடன் முடியுமோ அவ்வளவு ஊக்கத்துடனும் அகற்றிவிட வேண்டாமா?

(பக். 21)

2. மிதவாதிகள், தாங்கள் எவ்வாறு எல்லா அரசியல் பிரச்சினைகளையும் அணுகுகிறார்களோ அவ்வாறே மொழிப்பிரச்சினையையும் அணுகுகிறார்கள். ஒரு கையை (வெளிப்படையாக) சனநாயகத்திடம் நீட்டி குலாவிக் கொண்டும் மற்றொரு கையை (பின்புறம் மறைவாக) நிலப்பிரபுத்துவவாதிகளிடமும், போலிசிடமும் நீட்டிக் குலாவிக் கொண்டும் நயவஞ்சகப் பேரக்காரனைப்போல் அணுகுகின்றனர். நாங்கள் விசேச உரிமைகளுக்கு எதிரானவர்கள் என்று மிதவாதிகள் கத்துகிறார்கள்; அதே சமயம் முதலில் ஒன்று, பிறகு இன்னொன்றாக விசேச உரிமைகளுக்காக நிலப்பிரபுத்துவவாதிகளுடன் மறைவில் பேரம் செய்கிறார்கள்.

(பக்.22)

படிப்பகம்

www.padippakam.com



## 10

## விசேச சலுகைகள் மற்றும் உரிமைகள்பாலான பாட்டாளி வர்க்கத்தின் அணுகுமுறை

1. ஒடுக்கப்பட்ட தேசத்தின் பூர்சுவா வர்க்கம் ஒடுக்குபவர்களை எதிர்த்து எந்த அளவுக்கு போராடுகின்றதோ நாம் அந்த அளவுக்கு அப்போராட்டத்தை ஒவ்வொரு வழக்கிலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிக உறுதியாக ஆதரிக்கிறோம். ஏனென்றால் ஒடுக்குதலுக்குத் தீவிரமான சிறிதும் விட்டுக் கொடுக்காத எதிரி நாம்தான். ஆனால், ஒடுக்கப்பட்ட தேசத்தின் பூர்சுவா வர்க்கம் எந்த அளவுக்குத் தனது சொந்த பூர்சுவா தேசியவாதத்துக்காக போராடுகிறதோ அந்த அளவுக்கு நாம் அதை எதிர்க்கிறோம். ஒடுக்கும் தேசத்தின் விசேச உரிமைகளுக்கும் பலாத்கரத்துக்கும் எதிராக நாம் போராடு கிறோம்; ஒடுக்கப்பட்ட தேசம் தனக்கு விசேச உரிமைகள் வேண்டுமென்று முயல்வதையும் எவ்விதத்திலும் அனுமதிக்க மாட்டோம்.

நமது அரசியல் கிளர்ச்சியில் பிரிந்து போகும் உரிமை பற்றிய கோசத்தை முன்வைத்து ஆதரித்துப் பேசத் தவறினால் நாம் பூர்சுவாக்களின் வலையில் சிக்கிக் கொள்வோம் என்பது மட்டுமல்ல; ஒடுக்கு கின்ற தேசத்தின் நிலப்பிரபுக்களின், அதன் வரம்பிலா ஆட்சியின் வலையிலும்கூடச் சிக்கிக் கொள்வோம்.

(பக். 96,97)

2. போலந்தில் தேசியவாதத்திற்கெதி ராக நடைபெறும் போராட்டத்தின் ஆர்வத் தினால் உந்தப்பட்டு ரோசா லக்சம்பர்க் பெரிய-ருசியர்களின் தேசிய வாதத்தை மறந்துவிட்டார். இந்தத் தேசியவாதம்தான் தற்சமயம் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. இந்தத் தேசியவாதத்தில் பூர்சுவா அம்சங்களைவிட நிலப்பிரபுத்துவ அம்சங் களே அதிகம்; இதுதான் சனநாயகத்துக்கும் பாட்டாளிகளின்போராட்டத்துக்கும்முக்கியத் தடையாகவிளங்குகிறது. எந்த ஒரு ஒடுக்கப் படும் தேசத்தின் பூர்சுவா தேசியவாதத் திலும் ஒடுக்கல் முறைக்கு எதிரான பொது வான சனநாயகத் தன்மையொன்று இருக் கிறது; இந்த தன்மையைத்தான் நிபந்தனை ஏதுமின்றி நாம் ஆதரிக்கிறோம். அதே சமயத்தில், தேசிய தனித்துவத்தை நோக்கிய போக்கிலிருந்து இந்தச் சனநாயகத் தன்மை முற்றிலும் வேறானது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். யூதர்களை ஒடுக்கும் போலிஷ் பூர்சுவாக்களின் போக்கையும் மற்றும் அது போன்றவற்றையும் எதிர்த்து நாம் போராடுகிறோம்.

பூர்சுவாக்கள், பிலிஸ்டைன்களின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் இது ''செயல்பூர்வமல்லாதது.'' ஆனால் தேசியப் பிரச்சினையில் ''செயல்பூர்வமானதும் கோட் பாடுகள் அடிப்படையில் அமைந்ததும், சனநாயகம், சுதந்திரம், பாட்டாளி வர்க்க அய்க்கியம் ஆகியவற்றை உண்மையில் பேணுகின்றதுமான கொள்கை இதுதான்.

எல்லா தேசங்களுக்கும் பிரிந்து போகிற உரிமை அளிப்பது; பிரிந்து போகின்ற பிரச்சினை எழுகின்றபோது எல்லா ஏற்றத் தாழ்வுகளையும், எல்லா விசேச உரிமைகளை யும்; எல்லா தனித்துவப் போக்கையும் நீக்கும் நோக்கத்துடன் அதை அணுகிச் சீர்தூக்கிப் பார்ப்பது.

(பக். 97,98)

3. இந்த நிலைமையில் ருசியாவில் பாட்டாளி வர்க்கத்தின் கடமை இருவகைப் பட்டது அல்லது இரட்டையானது: எல்லா வகையான தேசியவாதத்தையும், எல்லா வற்றுக்கும் மேலாக பெரிய-ருசிய தேசிய வாதத்தை எதிர்த்துப் போராடுதல்; பொது வாக எல்லா தேசங்களின் சம உரிமைகளை யும் ஏற்றுக்கொள்வது மட்டுமன்றி, அரசு அமைப்பதற்கான சம உரிமைகளை, அதாவது தேசங்களின் சுயநிர்ணய உரிமையை, பிரிந்துபோகும் உரிமையை ஏற்றுக் கொள்ளுதல். அதே சமயத்தில், எல்லா தேசங்களிடையிலும் எல்லாவிதமான தேசிய வாதத்தையும் எதிர்த்து வெற்றிகரமாகப் போராடவேண்டி, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அய்க்கியத்தை, பாட்டாளி

படிப்பகம்

www.padippakam.com



வர்க்க ஸ்தாபனங்களின் அய்க்கியத்தைப் பேணிக்காப்பதும் அவர்களது கடமை; பூர்சுவாக்களின் தேசியத் தனித்துவ முயற்சிகளுக்கு எதிராக இந்த ஸ்தாபனங்களை, நன்கு நெருக்கம் அமைந்த ஒரு சர்வதேசப் பொது நிறுவனமாக இணைப்பதுஅவர்களது கடமை. எல்லா தேசங்களுக்கும் சம உரிமைகள்; தேசங்களுக்கு சுயநிர்ணய உரிமை; எல்லா தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமை-இதுதான் மார்க்சியமும், அகில உலகின் அனுபவமும், ருசிய அனுபவமும் தொழிலாளர்கட்குப் போதிக்கும் தேசியச் செயல்திட்டம்.

(பக்.163)

4. தேசியப் பிரச்சினையை வெற்று வழிபாட்டுப்பொருள் ஆக்குவது தொழிலாளி வர்க்கத்திற்கு இயலாது; ஏனென்றால், முதலாளித்துவத்தின் வளர்ச்சி எல்லா தேசங்களையும் ஒரு சுயேச்சையான வாழ்வை நடத்தும்படி தட்டி எழுப்பிவிடுவதில்லை. ஆனால் பொதுசனத் தேசிய இயக்கங்கள் தொடங்கிய பிறகு அவைகளை ஒதுக்கித் தள்ளுவதும், அவைகளில் முற்போக்கானவைகளை ஆதரிக்க மறுப்பதும் தேசியவாதத் தப்பெண்ணங்களுக்கு ஊக்கமளிப்பதாகும்; அதாவது ''தனது'' தேசம்தான் ''சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் தேசம்'' என்று (அல்லது தனது தேசத்துக்கு மட்டும்தான் அரசு ஒன்றை அமைத்துக்கொள்ளும் விசேட உரிமை உண்டு என்று) கொள்வதாகும்.

(பக்.137)

5. விசேச அரசு உரிமைகள், விசேச தேசிய உரிமைகள் அனைத்துக்கும் எதிராகவும், எல்லா தேசங்களுக்கும் தங்களது தேசிய அரசுகளை அமைத்துக் கொள்ள சம உரிமையுண்டு என்பதை ஆதரித்தும் அன்றாடக் கிளர்ச்சியும் பிரச்சாரம் செய்தலும்தான் (தற்சமயத்தில்)தேசியப்பிரச்சினையில் நமது தலையாயக் கடமை;

(பக் 100)

6. ருசியா ஒரு பல்தேசிய அரசாக இருக்குமானால் அதில் தேசிய அமைதி நிலவுவதற்கும், அது தனித் தனியான பல தேசிய அரசுகளாகப் பிரிய வேண்டுமானால் மிகவும் அமைதியாகப் (பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்குத் தீங்கற்ற முறையில்) பிரிவதற்கும் மிக அதிக வாய்ப்புகளை இந்தப் பிரச்சாரம் மட்டும்தான் உறுதியாக்க முடியும்.

(பக்.100)

## 11

## ஒடுக்கப்பட்ட, ஒடுக்கும் தேசிய இனங்களும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் அணுகுமுறையும்

1. பிறநாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்வதற்கெதிராகவும், பொதுப்படையாகத் தேசங்களின் சம அந்தஸ்துக்கு ஆதரவாகவும் மிதவாத பூர்சுவாக்களால் வழக்கமாகத் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் பொதுவான அதே சொற்களை ஒடுக்கும் தேசங்களின் பாட்டாளி வர்க்கம் தானும் கூறுவதுடன் நின்றுவிடக் கூடாது. தேசிய ஒடுக்கலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசின் எல்லைகளைப் பற்றிய பிரச்சினையில் —ஏகாதிபத்திய பூர்சுவாக்களுக்கு இப்பிரச்சினையானது மிகவும் "கசப்பானது"— பாட்டாளி வர்க்கம் மௌனமாய் இருக்க முடியாது. ஒரு அரசின் எல்லைகட்குள் ஒடுக்கப்படும் தேசங்கள் பலவந்தமாகப் பிடித்து நீடித்து வைத்துக் கொண்டிருக்கப்படுவதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் போராட வேண்டும்; அதாவது சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டும். ''தங்களது சொந்த தேசத்தினால் ஒடுக்கப்படும் காலனிகளுக்கும், தேசங்களுக்கும் அரசியல் ரீதியில் பிரிந்து போகும் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று பாட்டாளிகள் கோர வேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் என்பது வெற்று வார்த்தை; ஒடுக்கப்படும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் ஒடுக்கும் தேசத்தின்

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர்கட்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையோ அல்லது வர்க்க ஒருமைப் பாடோ அப்பொழுது சாத்தியமில்லை. சீர்திருத்தவாதிகளும் காவுட்ஸ்கிவாதிகளும் சுயநிர்ணயத்தை ஆதரித்து, அதே சமயத்தில் "தமது சொந்த" தேசத்தால் ஒடுக்கப்பட்டு "தமது சொந்த" அரசுக்குள் பலவந்தமாகப் பிடித்து வைத்திருக்கப்படும் தேசிய இனங்களைப் பற்றி மவுனமாக இருக்கிறார்கள் அல்லவா? இந்த மனிதர்களின் வெளிவேடமும் அப்பொழுது கலைக்கப்படாமல் இருந்துவிடும்.

(பக். 180,181)

2. 1905 வரை சுவீடன் பகுதி என்ற முறையில் நார்வே மிக விரிவான சுய நிர்வாக அதிகாரம் பெற்றிருந்தது; ஆயினும் உரிமைகளைப் பொறுத்தவரையில் அது சுவீடனுக்குச் சமமல்ல. அது சுதந்திரமாகப் பிரிந்ததினால்தான் அதன் சமத்துவம் செயலில் காட்டப்பட்டது, உறுதி செய்யப்பட்டது. (சம உரிமைகள் என்ற அடிப்படையில் மேலும் நெருக்கமான, மேலும் சனநாயகமான நட்புறவு வளர்வதற்கு இந்தச் சுதந்திரமான பிரிவுதான் ஆதாரமாக விளங்கியது என்பதையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும்.)

(பக். 233)

3. ஒரு சீர்திருத்தம் என்ற முறையில் சுயநிர்வாகமானது, புரட்சிகரமான நடவடிக்கை என்ற முறையில் பிரிந்து போவதிலிருந்து மாறுபட்டது; இது சொல்லாமலே விளங்கும். ஆயினும் சீர்திருத்தம் என்பது நடைமுறையில் புரட்சியை நோக்கி வைக்கும் ஒரு அடியே என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு தேசத்துக்குச் சுயநிர்வாகம் அளிப்பதானது அதைத் திட்டவட்டமாக ஒரு தேசமாக நிறுவுவதற்கு வழிசெய்கிறது; அதன் சக்திகளை ஒன்றுதிரட்டி, மதிப்பிட்டு, ஒழுங்குபடுத்தி அமைப்பதற்கு வழி செய்கிறது.

(பக். 233)

4. இந்த உதாரணமானது சற்று மாறுபட்ட ஒரு கோணத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்துக்குச் சர்வதேசிய உணர்வைப் போதிப்பது பற்றிய பிரச்சினைக்கு நம்மை இட்டுச் செல்கிறது. அத்தகைய போதனையானது — இதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் பற்றி ஸிம்மெர்வால்ட் இடது சாரியினரிடையில் கருத்துவேற்றுமைகள் எண்ணிக்கூடப் பார்க்க முடியாதவை — பெரிய, ஒடுக்கும் தேசங்களிலும் சிறிய, ஒடுக்கப்படும் தேசங்களிலும், கட்டாயமாக இணைத்துக் கொள்ளும் தேசங்களிலும், கட்டாயமாக இணைத்துக்கொள்ளப்படும் தேசங்களிலும் பருண்மையாக முற்றிலும் ஒரே மாதிரியாயிருக்க முடியுமா?

நிச்சயம் இருக்க முடியாது. பொது இலட்சியத்தை — எல்லா தேசங்களுக்கும் இடையில் சமத்துவம், நெருங்கிய நல்லுறவு, அதன்பின்னர் அனைத்து தேசங்களும் இரண்டறக் கலத்தல் — அடையும் வழி ஒவ்வொரு பருண்மையான வழக்கிலும் ஒவ்வொரு விதம்; ஒரு நூலில் ஒரு பக்கத்தின் மையத்திலுள்ள ஒரு இடத்துக்கான பாதை ஒரு ஓரத்திலிருந்து இடமாகவும் எதிர் ஓரத்திலிருந்து வலமாகவும் எப்படி இருக்கிறதோ அதேபோல்தான்.

(பக். 235,236)

5. ஒடுக்கும் நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களைச் சர்வதேசிய உணர்வில் பயிற்றும்பொழுது ஒடுக்கப்படும் நாடுகளுக்குப் பிரிந்து போகும் சுதந்திரமளிக்க வேண்டும் என்பதை அவர்கள் ஆதரித்து, அதற்காகப் போராட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இது இல்லாமல் சர்வதேசியம் என்பது இருக்க முடியாது. ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த சோசல் - டெமாக்கிரட் அத்தகைய பிரச்சாரத்தைச் செய்யத் தவறினால் அவ்வாறு தவறியவர் ஒவ்வொருவரையும் ஏகாதிபத்தியவாதி என்றும் கயவர் என்றும் கருதுவது நமது உரிமையும் கடமையும் ஆகும். சோசலிசத்தை அடையும் முன்னர் பிரிந்து போகும் வாய்ப்பு ஆயிரத்தில்-

படிப்பகம்

www.padippakam.com



ஒன்றுதான் என்றாலும்கூட இது ஒரு தனி முழுமையான கோரிக்கை.

(பக். 236)

6. மறுபுறத்தில், சிறிய தேசத்தைச் சேர்ந்த ஒரு சோசல் டெமாக்கிரட் தமது கிளாச்சி முறையில் நமது பொதுச்சூத்திரத்தில் இரண்டாவது சொல்லை — தேசங்களின் "மனப்பூர்வமான அய்க்கியம்" என்பதை — வலியுறுத்த வேண்டும். அவர் தம்முடைய நாட்டின் அரசியல் சுயேச்சையையும், அது தனது அண்டை நாடான X, Y, Z போன்ற ஏதாவது ஒன்றுடன் இணைவதையும் ஆக இரண்டையும் ஆதரிக்கலாம். சர்வதேசியவாதி என்ற முறையில் தமது கடமைகள் தவறாதபடி அவ்வாறு செய்யலாம். ஆனால் அவர் எல்லாச் சமயங்களிலும் சிறு தேசக்குறுகிய மனப்பான்மை, தனித்திருத்தல் ஒதுங்கிவாழ்தல் ஆகியவற்றுக்கு எதிராகப் போராட வேண்டும்; முழுமையையும் பொதுவையும் ஏற்றுக் கொள்வதற்காகப் போராட வேண்டும்; பொதுவின் நலன்களுக்குத் தனியின் நலன்கள் கீழ்ப்பட்டவை என்பதற்காகப் போராட வேண்டும்.

ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த சோசல் டெமாக்கிரட்டுகள் ''பிரிந்துபோகும் உரிமையை" வலியுறுத்துவதும், அதே சமயம் ஒடுக்கப்படும் தேசத்தைச் சேர்ந்த சோசல் டெமாக்கிரட்டுகள் "அய்க்கியமுறும் உரிமையை" வலியுறுத்துவதும் ''முரணானவை'' என்று பிரச்சினையை நன்கு கவனிக்காதவர்கள் நினைக்கிறார்கள். எனினும் சற்று சிந்தித்துப் பார்த்தால் இப்போதுள்ள இந்த நிலையிலிருந்து சர்வதேசியத்துக்கும், தேசங்களின் அய்க்கிய கலப்புக்கும் இட்டுச்செல்லும் பாதை இதைத் தவிர வேறு எதுவுமில்லை, வேறு எதுவும் இருக்க முடியாது என்பது விளங்கும்.

(பக். 237,238)

7. ஒரு அய்க்கியப்பட்ட அமைப்பு தேவை என்று சொல்லப்படுகிறது. ஆனால் எங்கிருந்து அந்த உறுதிமொழி வந்தது? ஜாரிசத்திடமிருந்து ஒரு அமைப்பை நாம் அப்படியே எடுத்துக்கொண்டு அதன்மேல் கொஞ்சம் சோவியத் வர்ணம் பூசியதைப் பற்றி எனது நாட்குறிப்பேட்டின் முன்பகுதி ஒன்றில் குறிப்பிட்டுள்ளேனே? அதே ருசிய அமைப்பினின்று இந்த உறுதிமொழி வரவில்லையா?

(பக்.258)

8. ஒடுக்குகின்ற தேசங்களைச் சேர்ந்த மக்களிடம், அவர்கள் மற்ற தேசங்களை ஒடுக்குவதற்கு உதவி செய்கின்றவரை, அந்தத் தேசங்களுக்குச் சுயநிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து செல்வதற்கான சுதந்திரத்தை அங்கீகரித்துக்காப்பாற்றி நிற்காதவரை தங்களுக்கு விடுதலை கிடைக்குமென்று நம்பக் கூடாது என்று விளக்க வேண்டும். சமாதானப் பிரச்சினை, தேசியப் பிரச்சினையப் பற்றி எல்லா நாடுகளுக்கும் கையாளப்பட வேண்டிய—ஏகாதிபத்தியக் கொள்கையிலிருந்து வேறுபட்டிருக்கின்ற—சோசலிஸ்டுக் கொள்கை அதுவே.

சர். (பக்.186)

9. தேசியப் பிரச்சினையின் நோக்கு நிலையினின்று பார்க்கும்போது ஒடுக்கப்பட்ட தேசங்களிலுள்ள தொழிலாளிகளுடைய உண்மை நிலைமையும் ஒடுக்கும் தேசங்களிலுள்ள தொழிலாளிகளுடைய நிலைமையும் ஒன்றுதானா?

இல்லை. அது ஒன்றல்ல!

i. பொருளாதார முறையில் ஒடுக்குகின்ற தேசங்களின் பூர்சுவாக்கள் ஒடுக்கப்படும் தேசங்களிலுள்ள தொழிலாளிகளை கூடுதலாகச் சுரண்டுவதனால் பெறுகின்ற கூடுதல் இலாபத்தில் ஒரு சிறுபகுதியை ஒடுக்குகின்ற தேசத்தைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் சில பகுதிகள் பெறுகின்றன. மேலும், ஒடுக்கப்படும் தேசங்களைவிட அதிக அளவிலான விகிதத்தில் ஒடுக்கும் தேசத்தில் உள்ள தொழிலாளிகள் ஒட்ட உறிஞ்சும் மேலாளர்களாகி இருக்கிறார்கள்; மிகப் பெரும்விதத்தில் தொழிலாளர் உயர் குடிகளாக மாறுகிறார்கள் என்பதை பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இது ஒரு உண்மை நிலை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளிகளும் அவர்களுடைய நாட்டின் பூர்சுவாக்களுடன் சேர்ந்து ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழி

படிப்பகம்

www.padippakam.com

லாளிகளை (அத்துடன் மொத்த மக்கள் தொகையின் பெரும் பகுதியினரையும்) சுரண்டுவதில் கூட்டாளிகளாக இருக்கின்றனர்.

ii. அரசியல் முறையிலான வேறுபாடு என்ற வகையில் பார்த்தால் ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளர்களுடன் ஒப்பிட்டால் அரசியல் வாழ்வின் சில துறைகளில் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளிகள் சலுகை பெற்றவர்களாக இருக்கின்றனர்.

iii. கருத்தியல் முறையில் அல்லது ஆன்மிக முறையில் இரண்டு தேசங்களின் தொழிலாளர்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுளென்னவெனில்ஒடுக்கும் தேசத்தாருடைய பள்ளிகளிலும், வாழ்விலும் ஒடுக்கப்பட்ட தேசத்தின் தொழிலாளிகளைப் பற்றித் துச்சமாக எண்ணவும், அவர்களை உதாசீனப் படுத்தவும் போதிக்கப்படுகிறது; பயிற்றுவிக்கப்படுகிறது, உதாரணமாக, பெரிய ருசியர்களிடையில் வாழ்ந்து, வளர்ந்து வரும் 'பெரிய'ருசியன் ஒவ்வொருவனும் இதனை அன்றாட அனுபவத்தில் உணர்ந்திருக்கிறான்.

இவ்வாறாக, "நெடுகிலும் எல்லாத் துறைகளிலும் புறநிலை யதார்த்தத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன. அதாவது தனிமனிதர்களது விருப்பத்தையும், உணர்வையும் சாராமல் புறநிலை உலகினில் "இருமைத் தன்மை" ''இருமைப்பாடு" இருக்கின்றது.

கேலி. (பக். 66-68)

## 12

## ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கக் கட்சியும் சர்வதேசியவாதமும்

1. ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசியவாதத்துக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசியவாதத்துக்கும் இடையில், ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசியவாதத்துக்கும் ஒரு சிறிய தேசிய இனத்தின் தேசியவாதத்துக்கும் இடையில் உள்ள வேற்றுமையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவது வகைத் தேசியவாதத்தைப் பொறுத்த விசயத்தில் ஒரு பெரிய தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம் வரலாற்று நடைமுறையில் எண்ணற்ற வன்முறைக்குக் காரணமாயிருந்து எப்பொழுதுமே குற்றமிழைத்துள்ளோம், மேலும் நாம் எண்ணற்ற தடவைகள், நமக்கேகூடத் தெரியாமல் வன்முறையில் ஈடுபடுகிறோம்; அவமதிப்பு செய்கிறோம். ருசியரல்லாதார் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது பற்றிய எனது வோல்கா நினைவுகளை மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்பது போதுமானது. எப்படி போலந்துக்காரர்கள் 'போல்யாசிவுக்கா' என்ற பெயரில் மட்டுமே அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும், எப்படி தாத்தாரியர் ஒருவரைக் கேலி செய்ய வேண்டுமென்றால் அவரை "இளவரசே" என்றழைத்தால் போதும் என்பதையும், எப்படி உக்ரேனியர்கள் எப்பொழுதும் "கோகோல்கள்'' என்றும் ஜார்ஜியர்களும் மற்ற காகேசியத் தேசிய மக்களும் "கப்கோசியன்கள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள் என்பதையும் நினைவுபடுத்திப் பார்ப்பது போதுமானது.

ஒடுக்குவோர் அல்லது "வல்லரசு" எனப்படும் தேசிய இனத்தைப் (அது தனது வன்முறையில்தான் அல்லது தெர்ஜிமோர்தாக்கள் போலவே பெரியது) பொறுத்த வரையில் சர்வதேசியவாதம் என்பது தேசிய இனங்களுக்கிடையில் பெயரளவில் சமத்துவத்தைக் கடைப்பிடிப்பது என்பது மட்டுமல்ல, ஒடுக்கும் தேசிய இனமானது, பெரிய வல்லரசு தேசிய இனமானது, நடைமுறையில் நிலவும் ஏற்றத் தாழ்வுக்கு ஈடு செய்யும் வகையில் தானே சம உரிமைக்குக் குறைந்த உரிமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை யார் புரிந்து கொள்ளவில்லையோ அவர் தேசியப் பிரச்சினை பற்றிப் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான அணுகு முறையை, கொள்கையைப் புரிந்துகொள்ள

படிப்பகம்

www.padippakam.com



வில்லை; அவர் சாராம்சத்தில் இன்னும் குட்டிபூர்சுவாக் கண்ணோட்டத்தையே கொண்டுள்ளார், எனவே பூர்சுவாக் கண்ணோட்டத்தைக் கடைசியில் அவர் பெற்று விடுவார் என்பது உறுதி.

(பக்.261)

2. முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியச் சகாப்தத்துக்குத் தொடர்பான வகையில் தேசங்களின் சுயநிர்ணயம் என்ற முழக்கத்தையும் முன்வைக்க வேண்டும். நாம் இன்றுள்ள நிலையில் பாதுகாப்பவர்கள் அல்ல; அல்லது மாபெரும் யுத்தங்களின் போது ஒதுங்கி நிற்கின்ற பிலிஸ்தினியக் (குட்டி முதலாளிய) கற்பனைக்கு ஆதரவானவர்களுமல்ல. நாம் ஏகாதிபத்தியத்துக்கு, அதாவது முதலாளித்துவத்துக்கு எதிராக புரட்சிகரமானப் போராட்டத்திற்காக நிற்கிறோம். மற்ற தேசங்களை ஒடுக்குகின்ற தேசங்கள் இந்த ஒடுக்கு முறையை விஸ்தரிப்பதற்கும், பெருக்குவதற்கும் மற்றும் காலனி நாடுகளை மறுபடியும் தமக்கிடையேபிரித்துக் கொள்வதற்கும் செய்கின்ற முயற்சியில்தான் ஏகாதிபத்தியம் அடங்கியிருக்கிறது. அதனால் தான் இன்றுள்ள சகாப்தத்தில் தேசங்களின் சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினையின் மூல வேரானது ஒடுக்குகின்ற தேசங்களிலுள்ள சோசலிஸ்டுகளின் நடத்தையைச் சுற்றிச் சுழன்று வருகிறது. ஒடுக்குகின்ற தேசங்களில் (பிரிட்டன், பிரான்ஸ், செர்மனி, சப்பான், இரசியா, அமெரிக்க அய்க்கிய நாடுகள் இதரவை) ஏதாவதொரு தேசத்தை சேர்ந்த ஒரு சோசலிஸ்ட் ஒடுக்கப்படும் தேசங்களுக்கு சுயநிர்ணய உரிமையை (அதாவது, பிரிந்து போவதற்கான உரிமையை) அங்கீகரிக்காவிட்டால், அதற்காகப் போராடாவிட்டால், உண்மையில் அவர் ஒரு தேசிய வெறியரே தவிர, சோசலிஸ்ட் அல்ல.

இந்தக் கருத்தோட்டமே ஏகாதிபத்தியத்துக்கு எதிராக முரணில்லாத, மனப்பூர்வமான போராட்டத்துக்கு வழிவகுக்கும்; தேசிய பிரச்சினையில்—பிலிஸ்தினிய அணுகு முறை அல்ல— பாட்டாளிவர்க்க அணுகு முறைக்கு (இன்றுள்ள சகாப்தத்தில்) இட்டுச் செல்லும் இந்தக் கருத்தோட்டமே தேசங்களின் ஒடுக்கு முறையின் எந்த வகையான வடிவத்தையும் எதிர்த்துப் போராடும் கொள்கையை முரணில்லாமல் கடைபிடிக்க வழி வகுக்கும்; ஒடுக்கும் தேசங்களையும், ஒடுக்கப்படுகின்ற தேசங்களையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரிடையே அவநம்பிக்கையை அகற்றி, பிலிஸ்தினியக் கற்பனை உலகமான பொதுவில் முதலாளித்துவத்தின் கீழ் எல்லா சிறு அரசுகளுக்குமே சுதந்திரம் என்பதிலிருந்து வேறுபட்டு, சோசலிஸ்டுப் புரட்சிக்காக (அதாவது, அது ஒன்றுதான் பரிபூரண தேசிய சமத்துவத்தைச் சாதிக்கக் கூடிய ஆட்சி முறை) ஒன்றுபட்ட சர்வதேசப் பாராட்டத்தை உருவாக்கும்.

சர். (பக்.184)

## 13

## மூன்றுவித நாடுகளும் ஒடுக்கும் தேசப் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்

1. இது சம்பந்தமாக நாடுகளை மூன்று முக்கிய விதங்களாகப் பிரிக்க வேண்டும். முதலாவது, மேற்கு அய்ரோப்பிய முன்னேறிய, முதலாளித்துவ நாடுகளும் அமெரிக்க அய்க்கிய நாடுகளும். இந்நாடுகளில்பூர்சுவா-முற்போக்குத் தேசிய இயக்கங்கள் நெடு நாட்களுக்கு முன்பே முடிவுக்கு வந்துவிட்டன. இந்த "மாபெரும்" தேசங்கள் ஒவ்வொன்றும் காலனிகளிலும் தமது நாட்டிலும் உள்ள மற்ற தேசங்களை ஒடுக்குகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்து சம்பந்தமாக ஆங்கிலேயப்பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள் என்னவோ, அவையே இந்த ஆளும் தேசங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் ஆகும்.

இரண்டாவது, கிழக்கு அய்ரோப்பா: ஆஸ்திரியா, பால்கன் நாடுகள் குறிப்பாக ருசியா. இங்கு இருபதாம் நூற்றாண்டுதான் குறிப்பிடத்தக்க வகையில் பூர்சுவா - சனநாயகத் தேசிய இயக்கங்களை வளர்த்து, தேசியப்போராட்டத்தைத்தீவிரப்படுத்தியது.

படிப்பகம்

www.padippakam.com



இந்நாடுகளின் பாட்டாளி வர்க்கமானது தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகப் போராடுவதன் வாயிலாக அன்றி அது தனது கடமைகளை—தனது நாட்டின் பூர்சுவா-சனநாயகச்சீரமைப்பு நிறைவு எய்துவதற்கும், மற்ற நாடுகளின் சோசலிசப் புரட்சிக்கு உதவுவதற்குமான தனது கடமைகளை—நிறைவேற்ற முடியாது. இது சம்பந்தமாக மிகவும் கடினமான, மிகவும் முக்கியமான கடமையானது, ஒடுக்கும் தேசங்களின் தொழிலாளர்களது வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கப்படும் தேசங்களின் தொழிலாளர்களது போராட்டத்துடன் அய்க்கியப்படுத்துதல்தான்.

மூன்றாவது, சீனா, பாரசீகம், துருக்கி போன்ற அரைக்காலனி நாடுகளும், இதர காலனி நாடுகளும்; இவைகளின் மொத்த மக்கட்தொகை 100 கோடி. இந்நாடுகளில் பூர்சுவா-சனநாயக இயக்கங்கள் இப்பொழுது தான் தொடங்கியுள்ளன; அல்லது அவை முடிவுபெற இன்னும் நெடுநாட்கள்பிடிக்கும். இக்காலனி நாடுகள் நட்ட ஈடு ஒன்றுமின்றி, உடனடியாக நிபந்தனைகளின்றி விடுதலைபெற வேண்டுமென்று சோசலிஸ்டுகள் கோரவேண்டும்-அரசியல் ரீதியில் இக்கோரிக்கையானது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வது தானேயொழிய, வேறில்லை. அதுமட்டுமல்லாமல், இந்நாடுகளில் தேசிய விடுதலைக்கான பூர்சுவா-சனநாயக இயக்கங்களின் அதிகப் புரட்சிகரச் சக்திகளுக்கு உறுதியான முறையில் ஆதரவு நல்க வேண்டும்; தங்களை ஒடுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கு எதிரான அவைகளின் கிளர்ச்சிக்கு-அல்லது புரட்சிப் போர் ஒன்று இருந்தால் அப்போருக்கு-உதவ வேண்டும். (பக்.185,186)

## 14

## அயர்லாந்து விடுதலை பற்றி மார்க்ஸ்

1. இன்டர்நேசனலின் கவுன்சிலில் வாசிக்கப்போகும் அயர்லாந்து பிரச்சினை பற்றிய தமது கட்டுரை கீழ்வருமாறு இருக்கும் என்று 1869 டிசம்பர் 10 ல் மார்க்ஸ் எழுதினார்:

"...அயர்லாந்துக்கு நீதி காட்டுவது பற்றிய 'சர்வதேச ரீதியிலான' 'மனிதாபிமான' வாய்ச்சொற்களிலிருந்து முற்றிலும் வேறாக — இவை எப்போதுமே இருப்பவை தான் என்பது இன்டர்நேசனலின் கவுன்சிலுக்குத் தெரியும் — ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்தின் நேரடியான நிச்சயமான நலன்களுக்கேற்றது அயர்லாந்துடனான தனது இன்றைய தொடர்பை அது அறுத்துக் கொள்வதுதான். இது என்னுடைய சந்தேகமில்லாத முழுநம்பிக்கை. அதற்குக் காரணங்கள் உண்டு; ஆனால் அவைகளில் சிலவற்றை நான் ஆங்கிலேயத் தொழிலாளர்களுக்குக் கூடச் சொல்லமுடியாது. ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் கை ஓங்கி வந்தால் அயர்லாந்து மீதான ஆட்சியை ஒழித்துக் கட்டுவது சாத்தியம் என்று நீண்ட காலம் நான் நம்பி வந்தேன். இக்கருத்தை எப்பொழுதும் நான் 'நியூயார்க் டிரிப்யூனில்' (இது ஒரு அமெரிக்கப் பத்திரிகை, மார்க்ஸ் இதில் நீண்டகாலம் எழுதி வந்தார்) வெளியிட்டு வந்தேன். உண்மை இதற்கு நேர் எதிரானது என்று ஆழ்ந்த ஆராய்ச்சி இப்பொழுது என்னைத் திடமாக நம்பச் செய்து விட்டது. அயர்லாந்தை விட்டுத் தொலைக்கும் வரைஆங்கிலேயத் தொழிலாளர் வர்க்கம் எதையும் சாதிக்க முடியாது... இங்கிலாந்தில் ஆங்கிலேயப் பிற்போக்கு வாதத்துக்கு மூலகாரணம் அயர்லாந்தை அடிமைப்படுத்தியதுதான்." (அழுத்தக் குறிகள் மார்க்சினுடையவை —லெனின்) (பக்.140,141)

2. அயர்லாந்து, ஆங்கிலேயப் பாட்டாளிகள் மார்க்சின் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால், அயர்லாந்து பிரிய வேண்டும் என்பதைத் தங்களது முழக்கமாக ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் அது படுமோசமான சந்தர்ப்பவாதமாக இருந்திருக்கும்; சனநாயகவாதிகள், சோசலிஸ்டுகள் என்ற முறை

படிப்பகம்

www.padippakam.com



யிலான தங்களது கடமைகளைக் கைவிட்ட தாக இருந்திருக்கும்; ஆங்கிலேயப் பிற் போக்குக்கும், ஆங்கிலேயப் பூர்சுவாக்களுக் கும் விட்டுக்கொடுத்ததாக இருந்திருக்கும். (பக்.145)

3. ஒடுக்கப்படும் தேசத்தின் தேசிய இயக்கத்தினால் அல்ல, ஒடுக்கும தேசத்தின் தொழிலாளி வர்க்க இயக்கத்தினால்தான் அயர்லாந்து விடுதலை அடையும் என்றும் மார்க்ஸ் முதலில் நினைத்தார். தேசிய இயக் கங்களைச் சார்பற்ற முழுமையாக மார்க்ஸ் கருதவில்லை; ஏனென்றால் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிதான் எல்லா தேசங் களுக்கும் பரிபூரண விடுதலையைத் தரும் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஒடுக்கப் படும் தேசங்களின் பூர்சுவா விடுதலை இயக் கங்களுக்கும் ஒடுக்கும தேசத்தின் பாட்டாளி வர்க்க விடுதலை இயக்கத்துக்கும் இடையில் என்னென்ன விதமான உறவுகள் சாத்தியம் என்பதை முன்கூட்டியே மதிப்பிட முடியாது (இந்தப் பிரச்சினைதான் இன்று இரசியாவில் தேசியப் பிரச்சினையைக் கடினமானதாக்குகிறது) ஆனாலும், ஆங்கி லேயத் தொழிலாளர் வர்க்கமானது கணிச மான காலம் மிதவாதிகளுடைய செல்வாக் கின் கீழிருந்தது. மிதவாதிகளுக்கு வால் பிடித்து, மிதவாத தொழிலாளர் கொள்கை யைக் கடைப்பிடித்ததன் மூலம் அது தலைமையற்று நின்றுவிட்டது. அயர்லாந் தின் பூர்சுவா விடுதலை இயக்கமானது வலுப்பெற்று, புரட்சிகர வடிவங்களை எடுத்தது. மார்க்ஸ் தமது கருத்துகளை மறுபரிசீலனை செய்து, திருத்தினார். "ஒரு தேசத்தை அடிமைப்படுத்துவது இன்னொரு தேசத்துக்கு எவ்வளவு துர்பாக்கியம்." **அயர்லாந்து இங்கிலாநதின் தளையிலிருந்து விடுபடும்வரை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் சுதந்திரம் பெற்றிருக்க முடியாது.** அயர்லாந்தை இங்கிலாநது அடிமைப்படுத் தியதால் இங்கிலாந்தில் பிற்போக்கு வலுப் பெற்று, ஊட்டம் பெற்றுவிட்டது. (பல்தேசிய இனங்களை இரசியா அடிமைபபடுத்தியதால் அங்கு எவ்வாறு பிற்போக்கு ஊட்டம் பெற் றிருக்கிறதோ, அதே போல்தான்.)

(பக்.141)

## 15

## சொந்த தேசம் குறித்து மார்க்ஸ், லெனின் பெருமிதம்

1. "என் போன்றோரின் படைப்பில் பல பெரிய குறைகள் இருக்கும் என்பதை எனது நண்பராகிய நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்! எனினும் இந்நூல் ஒரு தொடர்ச்சி யான கட்டமைப்பு கொண்டதாகும். இக் கட்டமைப்பு செருமானிய அறிவியல் கண்ட வெற்றியாகும். என்னுடைய சொந்தத் தகுதியில் வந்த வெற்றி என்பதைவிட செருமனி நாட்டின் தகுதியால் வந்த வெற்றியே அது என்பதை ஒரு செர்மானியன் தெரிந்துகொள்ள வேண்டும்."

—மார்க்ஸ், மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் தொகுதி 31, (பக்.183)

2. "மூலதனம் என்ற நூலைப் போன்ற சிறந்த நூல் இதுவரை தோன்றியதில்லை. இச்சமூக அமைப்பு முழுவதற்கும் அச்சாக இருப்பது மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையான உறவே. இவ்வுறவை இந்நூல் அறிவியல் பூர்வமாக ஆராய்கிறது. முழுமை யாகவும் நுட்பமாகவும் விளக்குகிறது. இது ஒரு செர்மானியனால் மட்டுமே முடியக்கூடியதாகும்...... இச்சமூக உறவுகள் அடங்கிய அனைத்தும் ஒரு மலை முகட்டி லிருந்து கீழிருக்கும் காட்சிகள் அனைத்தை யும் தெளிவாகப் பார்க்க முடிவதைப்போல் தெளிவாகப் பார்க்க முடியும் வகையில் அறிவின் உச்சியை எட்டும் வாய்ப்பு ஒரு செர்மானியனுக்கு மட்டுமே உறுதியாகும்.

—ஏங்கெல்ஸ், மா.ஏ.தொகுதி 16, (பக்.235)

3. "விஞ்ஞான சோசலிசம் உண்மையில் ஒரு செர்மானிய சரக்காகவே இருக்கிறது. செர்மனியின் உணர்வுமிக்க இயங்கியல் மரபில் காக்கப்பட்டுவந்த ஒரு மரபான தத்துவத்தைக் கொண்ட செர்மனியில்தான் இது தோன்ற முடிந்தது.

—ஏங்கெல்ஸ், மா.ஏ.தொகுதி 19, (பக்.187)

படிப்பகம்

www.padippakam.com



4. உலக அரசியலில் பிரெஞ்சு, இத்தாலிய மொழிகளில் வெளிவருகின்ற கட்சி வெளியீடுகளை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும். செர்மானியராகிய நம்மிடம் இயல்பாகவே ஒரு தத்துவ மேன்மை உண்டு. நமது விமர்சனத்தின் மூலம் அந்த மேன்மையை இத்துறையிலும் நாம் வெளிப்படுத்த வேண்டும்.

—ஏங்கல்ஸ், மா.ஏ. தொகுதி 35, (பக். 349)

5. பிரான்சில் இருக்கிற மேலை அய்ரோப்பிய இயக்கத்தின் ஈர்ப்பு மையம், செர்மானியரின் மேன்மையால் அஃது செர்மனிக்கு மாறிவிடும். கோட்பாடு, ஸ்தாபனம் ஆகிய இரண்டிலும் செர்மன் தொழிலாளி வர்க்கம் பிரெஞ்சுதொழிலாளிவர்க்கத்தைவிட மேலானது. 1866ம் ஆண்டு முதல் இன்று வரை இவ்விரு நாடுகளின் இயக்கங்களை ஒப்பிட்டாலே இது தெரியும். உலக அரங்கில் பிரெஞ்சு தொழிலாளரை செருமானிய தொழிலாளர் வென்றுவிடுவர். புரூதான் மீது நமது கொள்கை பெறும் வெற்றியாகவே அது இருக்கும்.

—மார்க்ஸ், மா.ஏ.தொகுதி 35, (பக். 5)

6. மறுபுறத்தில் மனநிலையில் செர்மனிய இனவெறியர்களாகவும் சிந்தனையில் தனித்து சிந்திக்கக்கூடிய மிதவாதிகளாகவும் இருக்கின்ற (சில) நல்லவர்கள் உண்டு. நம்முடைய உரிமையின் வரலாற்றை அவர்கள் நம்முடைய வரலாற்றுக்கு அப்பால் தொடக்க கால தியுத்தாணியக் காடுகளில் சென்று தேடுகின்றனர். இது காடுகளில் தான் கிடைக்குமாயின் நம்முடைய உரிமையின் வரலாறு ஒரு காட்டுப்பன்றிக்கு இருக்கும் உரிமையைப் பற்றிய வரலாற்றிலிருந்து வேறுபடப்போவதில்லை. அதோடு காட்டில் போடும் சத்தமும் எதிரொலிக்கும் என்பதும் எல்லோருக்கும் தெரியும் அப்பண்டைய தியுத்தானியக் காடுகளில் அமைதி நிலவட்டும்.

—மார்க்ஸ், மா.ஏ.தொகுதி (பக். 380)

7. இந்த சித்தாந்தப் போக்கைப்பற்றி பெரிய ருசிய சோசல் டெமாக்கிரட்டுகளாகிய நாமும் நமது கொள்கையை விளக்குவோம். அய்ரோப்பாவின் கிழக்குக் கோடியிலும், ஆசியாவின் ஒரு பெரும்பரப்பிலும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தேசத்தின் பிரதிநிதிகளாகிய நாம் தேசியப் பிரச்சினையின் மாபெரும் முக்கியத்துவத்தை மறப்பது அழகல்ல; அதுவும் "மக்களின் சிறைச்சாலை" என்று மிகப் பொருத்தமாக அழைக்கப்படும் ஒரு நாட்டில்; அய்ரோப்பாவின் கிழக்கு கோடியிலும், ஆசியாவிலும் முதலாளித்துவமானது பல "புதிய" பெரிய, சிறிய தேசங்களுக்கு உயிரும் உணர்வும் ஊட்டி எழுப்பிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில்; அய்க்கியப் பிரபுக்களின் கவுன்சிலின் நலன்களுக்கும், குச்கோவ்கள், கிரெஸ்தோவ்னிக்கவ்கள், தல்கருக்கவ்கள், குத்லெர்கள், ரோதிச்செவ்கள் ஆகியோரது நலன்களுக்கும் உகந்த வகையில் பல தேசியப் பிரச்சினைகளைத் "தீர்ப்பதற்கு வேண்டி" இலட்சக்கணக்கான பெரிய ருசியர்களையும் "அந்நியர்களையும்" ஜாரிச முடியாட்சியானது ஆயுதம் தந்து தயாராக வைத்திருக்கையில் அதை நாம் மறப்பது அழகல்ல.

வர்க்க உணர்வு கொண்ட பெரிய ருசியப் பாட்டாளிகளாகிய நமக்குத் தேசியப் பெருமிதம் அப்பாற்பட்டதா? இல்லை, நிச்சயமாக இல்லை! நாம் நமது மொழியையும் தாய் நாட்டையும் நேசிக்கிறோம், அதன் உழைக்கும் மக்களை (அதன் மொத்த மக்கட் தொகையில் இவர்கள் பத்தில் ஒன்பதுபங்கு) சனநாயகவாதிகள், சோசலிஸ்டுகளின் உணர்வுபூர்வமான வாழ்க்கைத்தரத்துக்கு உயர்த்துவதற்கு நாம் நம்மால் இயன்றது அனைத்தையும் செய்கிறோம். ஜாரிசக் கொலையாளிகளும், பிரபுக்களும், முதலாளிகளும் நமது அருமையான தாய்நாட்டுக்குச் செய்யும் வன்முறைச் செயல்களையும் கொடுமையையும் அவமதிப்புகளையும் கண்டு உணரும்பொழுது மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாக நாம் வேதனைப்படுகிறோம்; பெரிய ருசியர்களாகிய நமது மத்தியில் இக்கொடுமைகளை எதிர்த்துப் போராடுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதும்; அதே நம்மிடையிலிருந்துதான் ரதிஷ்செவ், டிசம்பர்காரர்களும், 1870-80 ஆம் ஆண்டு

படிப்பகம்

www.padippakam.com



களைச் சேர்ந்த புரட்சிக்கார ராஸ்னச் சீன்த் ஸுயும் தோன்றினார்கள் என்பதும்; 1905ல் பெரிய ருசியத் தொழிலாளி வர்க்கம் ஒரு பெரும்வலிமை வாய்ந்த. வெகுசனப் புரட்சிக் கட்சியை உருவாக்கியது என்பதும்; அதே சமயத்தில்தான் பெரிய ருசிய "முழீக்குகள்" (குடியானவர்கள்) சனநாயகவாதிகளாகத் தொடங்கி, மத குருமார்களையும் நிலப் பிரபுக்களையும் துரத்தியடிக்க கிளம்பினார்கள் என்பதும், ஆகிய இவற்றைக் கண்டு நாம் பெருமிதப்படுகிறோம்.

(பக்.167)

8. நம்மை ஒரு தேசியப் பெருமித உணர்வு ஆட்கொள்கிறது. அதே காரணத்தினால் நாம் நமது அடிமைத்தனம் நிறைந்த கடந்த காலத்தைக் குறிப்பாக வெகுவாக வெறுக்கிறோம் (அப்பொழுது தான் அங்கேரி, போலந்து, பாரசீகம் சீனா ஆகியவற்றின் சுதந்திரத்தை நசுக்குவதற்காக நிலப்பிரபுக்கள் குடியானவர்களைப போர் நடத்திச் சென்றார்கள்); அதே காரணத்தினால் அடிமைத்தனம் நிறைந்த இக்காலத்தையும் நாம் வெறுக்கிறோம். இப்பொழுது போலந்தையும் உக்ரெய்னாவையும் குரல்வளையைப் பிடித்து நெறிப்பதற்காகவும், பாரசீகத்திலும் சீனாவிலும் சனநாயக இயக்கத்தை நசுக்குவதற்காகவும், நமது பெரிய ருசிய தேசிய கௌரவத்துக்கு இழுக்காக விளங்கும் ரொமானவ், பப்ரின்ஸ்கி, புரிஷ்கேவிச் கூட்டங்களைப் பலப்படுத்துவதற்காகவும் அதே நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் ஆதரவுடன், நம்மைப் போர் நடத்திச் செல்கிறார்கள். ஒரு மனிதன் அடிமையாகப் பிறந்தது அவனது குற்றம் அல்ல; ஆனால் தனது விடுதலைக்குப் போராட விரும்பாதது மட்டுமன்றி, தனது அடிமைத்தனத்தை ஆதரித்து அதை அழகு பட வர்ணிக்கும் (உதாரணமாக, போலந்து, உக்ரெய்னா ஆகியவைகளின் கழுத்தை நெறிப்பது பெரிய-ருசியர்களின் "தாய் நாட்டைக் காப்பதாகும் என்று கூறும்) ஒரு அடிமை அடிவருடி, கீழ் மகன்; அவனைக் கண்டால் நியாயமான சீற்றமும் வெறுப்பும் அருவருப்பும் நம் மனதில் எழுகின்றது.

(பக்.169)

## 16

## பல்தேசிய அரசுகள் எப்போது முற்போக்கானவை?

1. அண்டை நாடுகளைக் காட்டிலும் ஜாரிசம் அதிகப் பிற்போக்குத்தனமானது. சுதந்திரமான பொருளாதார வளர்ச்சிக்கு அது எல்லாவற்றையும் விட மிகப்பெரிய தடையாக விளங்குகிறது. பெரிய-ருசிய தேசியவாதத்தை ஊட்டிவளர்ப்பதற்கு அது தன்னாலான அனைத்தையும் செய்கிறது. மற்ற எல்லா நிலைமைகளும் சரிசமமாக இருந்தால் சிறிய நாடுகளைவிடப பெரிய நாடுகளை மார்க்சியவாதிகள் இயல்பாக விரும்புகிறார்கள். ஆனால், ஜாரிச முடியாட்சியின் கீழ் உள்ள நிலைமைகள் எல்லா அய்ரோப்பிய நாடுகளிலும் பெரும்பாலான ஆசிய நாடுகளிலும் உள்ள நிலைமைகளுக்குச் சமமானவைகளாக இருக்கக்கூடும் என்று எண்ணுவதுகூடப் பரிகசிக்கத்தக்கது, பிற்போக்குத்தனமானது.

(பக்.16,17)

2. மற்ற விசயங்கள் மாறுபடாமல் இருக்குமேயானால் வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளி வர்க்கமானது பரந்த பெரிய அரசுகளையே எப்போதும் விரும்பும். மத்திய காலத்தைச் சேர்ந்த தனிப்பகுதிச் சுயேச்சைத்தனத்தைஅதுஎப்போதுமே எதிர்க்கும்; பூர்சுவாக்களுக்கு எதிரான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் ஒரு விரிவான அடிப்படையில் உருவாவதற்கு ஏற்றவாறு பெரிய பிரதேசங்கள் பொருளாதார ரீதியில் முடிந்த அளவு மிகவும் நெருக்கமாகக் கலந்து ஒன்றினைவதையே அது எப்பொழுதும் வரவேற்கும்.

முதலாளித்துவத்தின் உற்பத்தி சக்திகளின் விரிவான, துரிதமான வளர்ச்சிக்குப் பரந்த, அரசியல் ரீதியில் நெருக்கமாக நன்கிணைந்த, அய்க்கியப்பட்ட பிரதேசங்கள்தான் தேவை; ஏனென்றால் அங்குதான்

படிப்பகம்

www.padippakam.com



பூர்சுவா வர்க்கம்-அதற்கு தவிர்க்க முடியாத படி நேர் எதிரிடையான பாட்டாளி வர்ககத் துடன் சேர்ந்து-அய்க்கியப்பட்டு, பழைய, மத்தியகால சமூக வகுப்புப் பிரிவுகளையும் குறுகிய வட்டாரப்பற்று, சிறு இனப்பற்று மதம் முதலியவற்றையும் சேர்ந்த எல்லாத் தடைகளையும் அபபுறப்படுத்த முடியும்.

(பக்.61)

3. மத்தியகால ஒற்றுமையின்மையி லிருந்து எதிர்காலத்தில் அனைத்துலக சோசலிச அய்க்கியத்துக்கான பாதையில் இந்தப் பெரிய அதிகார மையப்பாடு பெற்ற அரசானது வரலாற்று ரீதியில் ஒரு பிரமாண்டமான முன்னேற்றம்; (முதலாளித் துவத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்த) அத்தகையதொரு அரசின் வழியாகத்தான் எந்த ஒரு பாதையும் சோசலிசத்தை நோக்கிச செல்ல முடியும்.

ஆயினும், மையப்பாட்டை ஆதரிக்கும் பொழுது நாம் சனநாயக மையப்பாட்டை மட்டுமே ஆதரிக்கிறோம் என்பதை மறந்து விடுவது மன்னிக்க முடியாதது.

(பக்.62)

4. இரசியாவில் மையப்பாட்டைக் கொடுங்கோன்மையுடனும் அதிகாரவர்க்க ஆட்சிமுறையுடனும் சேர்த்து மக்கள் அடிக் கடி குழப்பிக் கொள்கிறார்கள். இந்தக் குழப்பம் இரசிய வரலாற்றிலிருந்து இயற்கையாகவே எழுகிறது; இருந்தாலும் ஒரு மார்க்சியவாதி அதற்கு ஆளாவது சிறிதும் மன்னிக்க முடியாதது.

(பக்.62)

## 17

## ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும் - சனநாயக விரோத அரசு எல்லையும்

1. மார்க்சியத்தை கேலிச் சித்திரமாக்கிய பழைய "பொருளாதாரவாதிகள்" மார்க்சிய வாதிகளுக்குப் "பொருளாதார அம்சம்" "மட்டுமே" முக்கியமானது என்று தொழிலா ளர்கட்குப் போதித்தார்கள். வெற்றிகர சோசலிசத்தின் சனநாயக அரசானது எல்லை களில்லாமல் (சடப்பொருளின்றிப் "புலனு ணர்வுகளின் தொகுப்பு" போல) இருக்கும் என்றோ அல்லது உற்பத்தித் தேவைகளுக்கு ஏற்ற வகையில் "மட்டுமே" எல்லைகள் வரையப்படுமென்றோ நவீனப் "பொருளா தாரவாதிகள்" எண்ணுகிறார்கள் போலிருக் கிறது. உண்மையில் பார்க்கப் போனால் சனநாயக முறைப்படி, அதாவது மக்களின் சித்தத்துக்கும், "உணர்வுக்கும்" ஏற்றபடி எல்லைகள் வரையப்படும். முதலாளித்துவம் இவ்வுணர்வுகளை ஒடுக்குகிறது; தேசங்களுக் கிடையில் பரஸ்பர நல்லுறவு ஏற்படுவதற்கு மேலும் அதிகத் தடைகளை நிறுத்தி இருக் கிறது. வர்க்க ஒடுக்கல் இல்லாமல் உற்பத்தி முறையை அமைத்து, அரசின் எல்லா அங்கத்தினர்களுக்கும் நல்வாழ்வுக்கு வழி செய்து சோசலிசமானது மக்களின் "உணர்வு களுக்கு" முழு சுதந்திரம் அளிக்கிறது; அதன்மூலம் தேசங்கள் ஒன்று கலப்பதற்கு உதவுகிறது, அதைப் பெரிதும் துரிதப்படுத்து கிறது.

(பக்.201)

2. இது உண்மை. முதலாளித்துவத்தின் கீழ் தேசிய (அல்லது எந்த ஒரு அரசியல்) ஒடுக்குமுறையை அகற்றுவது சாத்திய மில்லை. இதைச் செய்யவேண்டுமென்றால் வர்க்கங்கள் அகற்றப்படவேண்டும். அதா வது, சோசலிசம் புகுத்தப்படவேண்டும். ஆனால் சோசலிசம்பொருளாதாரத்தின்அடிப் படையில் அமைந்திருக்கிறது என்றாலும்கூட அது பொருளாதார இயலாக மட்டுமே இருக்க முடியாது.தேசிய ஒடுக்கல் முறையை அகற்றுவதற்கு ஒரு அடிப்படை—சோசலிச முறைப் பொருளுற்பத்தி—அவசியம்; மேலும் இந்த அடிப்படையின் மீது சனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு அரசு, சனநாயகப்படை முதலியனவும் கூட, அவசியம். முதலாளித்துவத்தை சோசலிசமாக மாற்றுவதன் மூலம் தேசிய ஒடுக்கல் முறையைப் பூரணமாக ஒழிக்கும் சாத்தியப்

படிப்பகம்

www.padippakam.com



பாட்டை பாட்டாளி வர்க்கம் உருவாக்கு கிறது; எல்லாத் துறைகளிலும் சனநாயகம் நிறுவப்பட்ட "பின்னர்தான்" — "அதற்கு முன்னர் அல்ல"!— உதாரணமாக மக்களின் "உணர்வுகளுக்கு" ஏற்றவகையில் அரசின் எல்லைகள் வரையப்பட்ட பின்னர், பிரிந்து போகும் உரிமை பூரணமாகத் தரப்பட்ட பின்னர், இந்தச் சாத்தியப்பாடு **உண்மைப் பாடு** ஆகிறது. அடுத்தபடியாக, இந்த அடிப்படையின் மேல் தேசியச் சச்சரவுகளும், தேசிய அவநம்பிக்கைகளும் மிகச் சிறிய அளவிலாகஇருப்பினும்அவை **நடைமுறைச்** செயல்பாட்டில் அழிக்கப்படுவது என்ற போக்கு வளர்கிறது, அத்துடன் அரசு **வாடி உதிர்ந்து போகுங்காலம்** முடிவ வடையும் ஒரு போக்கு, வேகமாக தேசிய இனங்கள் பரஸ்பர நல்லுறவு கொண்டு முழுமையாகக் கலத்தல் என்பது நடைபெறு கின்றது. இதுதான் மார்க்சிய சித்தாந்தம்;

(பக்.202,203)

3. தமது வரலாற்று ரீதியான வளர்ச்சி யில் பல சிறிய, தனித்து இயங்க முடியாத தேசங்களை விழுங்கிய ''பெரிய, தனித்தியங் கும் சக்தி பெற்றஅய்ரோப்பியத்தேசங்களின் எல்லைக் கோடுகள் மக்களின் ''மொழி உணர்வுகள்" ஆகியவைகளால் மேலும் மேலும் உறுதியாக நிர்ணயிக்கப்படுகின்றன என்று ஏங்கெல்ஸ் அக்கட்டுரையில் எழுதி னார். இவைகளை ''இயற்கையான எல்லை கள்'' என்று ஏங்கெல்ஸ் கூறினார். அய்ரோப்பாவில் முற்போக்குத் தன்மை படைத்திருந்த முதலாளித்துவ கட்டத்தில், சுமார் 18-8-71ல், நிலைமை இவ்வாறு இருந்தது. ஆனால் இன்று, இவ்வாறு சனநாயக முறையில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கோடுகளைப் பிற்போக்குத்தன மான ஏகாதிபத்திய முதலாளித்துவமானது முன்னிலும் அடிக்கடி **தகர்த்துக் கொண்டி ருக்கிறது**. தனது வாரிசான சோசலிசத் துக்கு ஏகாதிபத்தியம் விட்டுச் செல்லப் **போவது**: இப்போதுள்ளதை விடக் **குறைவான** சனநாயக எல்லைக் கோடுகள், அய்ரோப்பாவிலும் உலகின் மற்றப் பகுதி களிலும் தான் கைப்பற்றிய, கவர்ந்து கொண்ட பல நாடுகள். அப்பொழுது என்ன நடக்கும்? எங்கும் பூரண சனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டி அமுல் செய்யும் வெற்றிகர சோசலிசமானது **சனநாயக முறையில்** எல்லைகளை வரைய மறுக்குமா? மக்களின் ''உணர்வுகளை'' கவனிக்க அது விரும்பாதா? இக் கேள்விகளை எழுப்பின மாத்திரத்திலேயே நமது போலிஷ் நண்பர்கள் மார்க்சியத்திலிருந்து நழுவி **''ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கு''** செல்வதை தெளிவாக நாம் காணலாம்.

(பக்.200,201)

4. ஒடுக்கப்படும் தேசங்களை விடுதலை செய்வதற்கு அரசியல் துறையில் இரண்டு நடவடிக்கைகளை அமுல் செய்ய வேண்டும் என்று நமது முதல் ஆய்வுரையில் கூறினோம்:

i. எல்லா தேசங்களுக்கும் சமத்துவம். இதை யாரும் மறுக்க முடியாது. இது அரசின் எல்லைக்குள் நடக்கும் சம்பவங் களை மட்டும்தான் பாதிக்கிறது;

ii. அரசியல் ரீதியில் பிரிந்து போகும் சுதந்திரம். இது அரசின் எல்லைக் கோடு களை வரைவதைக் குறிக்கிறது.

(பக்.198,199)

5. அடைவதற்கு முடியாததென்று கூறப் பட்ட சுயநிர்ணய உரிமையை 1905ல் ஏகாதி பத்தியமானது மிகவும்மூர்க்கமாக நின்றகால கட்டத்தில் நார்வே 'அடைந்தது.' எனவே ''அடைய முடியாத நிலைமை'' என்பதைப் பற்றிப் பேசுவது மடமை என்பது மட்டுமல்ல, தத்துவ நோக்கு நிலையிலிருந்து அது கேலிக் கூத்தானது, ஏளனத்திற்குரியது.

—கேலி (பக்.48)

## 18

### சுயநிர்ணய உரிமை மறுப்பு என்பது கட்டாயப் பிரதேச இணைப்பு

1. ''கட்டாயப் பிரதேச இணைப்பை எதிர்ப்பதானது சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதாகும்." கட்டாயப் பிரதேச இணைப்பு எனும் கருதுகோள் கீழ்வருவன

படிப்பகம்

www.padippakam.com



வற்றைச் சாதாரணமாக உள்ளிட்டது:

i. பலாத்காரக் கருதுகோள் (பலாத்காரத்தின் மூலம் அய்க்கியம்);

ii. இன்னொரு தேசத்தினால் ஒடுக்கப்படுதல் என்ற கருதுகோள் (''அந்நிய'' பிரதேசங்களை ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளுதல் முதலியவை);

iii. சில சமயங்களில் நடப்பு நிலையை மீறுவது என்ற கருதுகோள்.

(பக்.207)

2. கட்டாயப் பிரதேச இணைப்பு என்பது ஒரு தேசத்தின் சுயநிர்ணயத்தை மீறுவதாகும்; மக்களின் விருப்பத்திற்கு மாறான முறையில் அரசின் எல்லைகளை வரைவதாகும். கட்டாயப் பிரதேச இணைப்புகளை எதிர்த்து நிற்பது சுய நிர்ணய உரிமையை ஆதரிப்பது என்று பொருள்படும்.

(பக்.208)

3. சோசலிசத்துக்குத் துரோகம் செய்யாமல் நமது பிரதான விரோதியான பெரிய அரசுகளின் பூர்சுவாக்களுக்கெதிரான ஒவ்வொரு எழுச்சியையும் நாம் ஆதரிக்க வேண்டும்; அது ஒரு பிற்போக்கு வர்க்கத்தின் எழுச்சியாக இல்லாதிருந்தால். கட்டாயமாக இணைத்துக் கொள்ளப்பட்ட பிரதேசங்களின் எழுச்சியை ஆதரிக்க மறுப்பதன் மூலம், நாம் புறநிலை ரீதியில் கட்டாயப் பிரதேச இணைப்பைஆதரிப்பவர்களாகி விடுகிறோம்.

(பக்.214,215)

4. லென்சுகளுக்கு இது சரியான பதிலல்ல; ஏனென்றால் அவர்களுடைய பிரதான வாதம் கட்டாயப் பிரதேச இணைப்புகள் இராணுவத் தேவை என்பதல்ல; அவை பொருளாதாரரீதியில் முற்போக்கானவை—ஏகாதிபத்தியத்தின் கீழ் ' இதன்பொருள் ''குவிவு" எனப்பொருள்படும்—என்பதுதான். ஏகாதிபத்தியத்தினால் தகர்த்தெறியப்பட்ட ஐரோப்பாவின் எல்லை நிலைகள் மீண்டும் நிறுவப்படுவதைக் கைவிட்டுவிடுவதன் மூலமாக போலிஷ் சோசல் டெமாகிரட்டுகள் அத்தகைய ஒரு குவிவின் முற்போக்குத் தன்மையை ஏற்றுக் கொள்கிறார்கள்; அதே சமயத்தில் கட்டாயப் பிரதேச இணைப்புகளை எதிர்த்துக் கண்டனம் செய்கிறார்கள்; இதில் தர்க்க நியாயம் எங்கே இருக்கிறது?

(பக்.219)

5. ஆய்வுரைகளின் முதல் பகுதியில் (3)ல், கட்டாயப் பிரதேச இணைப்புகளால் பாட்டாளி வர்க்கம் பிளவுண்டுவிடும் என்கிற மேலே குறிப்பிட்ட வாதத்தை நாம் காண்கிறோம்; அதற்கடுத்த (4)ல், அய்ரோப்பாவில் ஏற்கனவே நடைபெற்றுவிட்ட கட்டாயப் பிரதேச இணைப்புகளை ரத்துசெய்வதை நாம் எதிர்க்க வேண்டுமென்றும், ''போராட்டத்தில் ஒற்றுமை என்கிற உணர்வை ஒடுக்கப்படும் தேசங்களையும் ஒடுக்கும் தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு போதிக்க வேண்டியதை நாம் ஆதரிக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. கட்டாயப் பிரதேச இணைப்புகளை ரத்து செய்ய வேண்டும் என்று கோருவது பிற்போக்குத்தனமான ''உள்ளங்குழையும் உணர்ச்சி'' என்றால், ''பாட்டாளி வர்க்கத்தின்'' பகுதிகளுக்கிடையில் கட்டாயப் பிரதேச இணைப்புகள் ஒரு "உடைப்பை'' தோற்றுவிக்கின்றது என்றும் "பிளவுக்கு" காரணமாகிறது என்றும் வாதிக்கக்கூடாது. அதற்கு மாறாக, பல்வேறு தேசங்களையும் சேர்ந்த பாட்டாளி மக்களுக்கிடையில் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்துவதற்கு அவை தேவையானவை என்று கருத வேண்டும்.

நாம் சொல்கிறோம்: சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான பூர்சுவாக்களை அதிகாரத்திலிருந்து வீழ்த்துவதற்கான வலிமையை நாம் பெறுவதற்குத் தொழிலாளர்கள் இன்னும் அதிக நெருக்கமாக ஒன்றுபட வேண்டும். இந்த நெருங்கிய அய்க்கியமானது சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தினால், அதாவது கட்டாயப் பிரதேச இணைப்புக்கு எதிரான போராட்டத்தினால் வளர்க்கப்படுகிறது. நாம் முரண்பாடுகளின்றி இருப்போம். அய்ரோப்பாவின் கட்டாயப் பிரதேச இணைப்புகள் ''ரத்து செய்யப்பட முடியாதவை'' என்றும், தேசியப் போர்கள் ''சாத்தியமில்லை'' என்றும் கூறுகிற போலிஷ் தோழர்கள், தேசியப் போர்

படிப்பகம்

www.padippakam.com



களைப் பற்றிய வாதங்களை உபயோகித்துக் கட்டாயப் பிரதேச இணைப்புகளை "எதிர்த்து'' சர்ச்சை செய்ய இறங்குகையில், அவர்கள் தம்மைத் தாமே தாக்கிக் கொள்கின்றனர். கட்டாயப் பிரதேச இணைப்புகள் பல்வேறு தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் நல்லுறவு கொள்வதையும் இரண்டறக் கலப்பதையும் மேலும் கடினமாக்குகின்றன - இவ்வகையானவைதான் அவர்கள் வாதங்கள்.

வேறுவிதமாகச் சொல்லப்போனால், கட்டாயப் பிரதேச இணைப்புகளை ஆட்சேபிப்பதற்காக போலிஷ் சோசல் டெமாக்ரட்டுகள் கோட்பாட்டு ரீதியில் அவர்கள் தாமாகவே நிராகரித்துவிட்ட அதே சித்தாந்த மூட்டையிலிருந்தே வாதங்களை எடுத்தாள வேண்டியிருக்கிறது.

(பக்.220)

## 19

## பிரிவினையும் பாட்டாளி வர்க்க அய்க்கியமும்

1. நார்வே, சுவீடன் தொழிலாளர்களுக்கிடையிலான நெருங்கிய கூட்டும், அவர்களது பூரணமான சகோதர வர்க்க ஒருமைப்பாடுமதான் நார்வே மக்களின் பிரிந்து போகும் உரிமையை சுவீடிஷ் தொழிலாளர்கள் ஏற்றுக் கொணடதன் மூலம் லாபமடைந்தது.

(பக்.124)

2. ருசியாவில் சுதந்திரமான, சுயேச்சையான தேசிய அரசு ஒன்று ஏற்படுத்திக் கொள்வது என்பது தற்சமயம் பெரிய ருசிய தேசத்துக்கு மட்டுமேயான ஒரு தனிச்சலுகையாக இருக்கிறது. எந்தத் தனிச்சலுகைகளையும் ஆதரிக்காத பெரிய ருசியப் பாட்டாளிகளாகிய நாம் இந்தத் தனிச்சலுகையையும் ஆதரித்துக் காக்கமாட்டோம். ஒரு திட்டவட்டமான அரசு என்ற அடிப்படையில் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்; இந்த அரசில் வாழும் தேசங்கள் அனைத்தையும் சேர்ந்த தொழிலாளர்களை நாம் ஒற்றுமைப்படுத்துகிறோம்; எந்தக் குறிப்பிட்ட தேசிய வளர்ச்சிப் பாதையைப் பற்றியும் நாம் உத்தரவாதமளிக்க முடியாது; ஏனென்றால் சாத்தியமான எல்லாப் பாதைகள் வழியாகவும் நமது வர்க்க இலட்சியத்தை நோக்கி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆயினும், எல்லா வகைத் தேசியவாதத்தையும் எதிர்த்துப் போராடி, பல்வேறு தேசங்களின் சம அந்தஸ்த்தையும் ஆதரித்தாலொழிய நாம் அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேற முடியாது. உதாரணமாக, உக்ரெய்னா ஒரு சுதந்திர அரசாக அமையுமா என்பது முன்கூட்டியே அறிய முடியாத ஆயிரம் காரணிகளால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. பயனற்ற "ஊகங்களை" செய்ய நாம் முற்படாமல், சந்தேகத்துக்கு இடமில்லாத ஒன்றை—உக்ரெய்னாவுக்கு அத்தகையதொரு அரசாக அமைய உரிமையுண்டு என்பதை—உறுதியாக ஆதரிக்கிறோம். இந்த உரிமையை நாம் மதிக்கிறோம்; உக்ரேனியர்கள் விசயத்தில் பெரிய ருசியர்களுக்கிருக்கும் தனிச்சலுகைகளை நாம் ஆதரிக்கவில்லை; இந்த உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற உணர்வை, எந்த ஒரு தேசத்துக்கும் விசேச அரசு உரிமைகள் இருப்பதை நிராகரிக்க வேண்டும் என்ற உணர்வை நாம் பொது மக்களுக்கு ஊட்டுகிறோம்.

(பக்.99)

3. நார்வே, சுவீடன் மக்களின் பொது நலன்களும், அவர்களின் நெருங்கிய உறவும் தான் சுவீடனிலிருந்து நார்வே பிரிந்ததால் பயன் பெற்றன.

—லெனின், தொகுதி 20, (பக்.22)

4. இதற்காக நாம் அஞ்சவில்லை, சுதந்திரக் குடியரசுகளின் எண்ணிக்கை எத்தனையானாலும் நாம் அஞ்சவில்லை. அரசு எல்லைகள் எப்படி வரையறுக்கப்பட்டிருக்கிறன்ன என்பது நமக்கு முக்கியமானதல்ல.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் எல்லா தேசங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்கள் முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தில் தேசிய இன வேறுபாடின்றி தொடர்ந்து கூட்டாக இருப்பதுதான் நமக்கு முக்கியமானது.

—லெனின், தொகுதி 26, (பக்.344)

## 20

## தேசிய விடுதலையும் தேசங்கள் இரண்டறக் கலத்தலும்

**1. பலாத்கார அடிப்படையிலான அல்லது தனி விசேச உரிமைகளின் அடிப்படையிலான தேசங்களின் இரண்டறக் கலத்தல் தவிர மற்றெல்லாவிதமான இரண்டறக் கலத்தலையும் அது வரவேற்கிறது.**

"நியாயமான வரம்புகளுக்குட்பட்டதொரு துறைக்குள் தேசியவாதத்தைப் பலப்படுத்துதல், தேசியவாதத்தை "அரசியல் சட்ட ரீதியானதாக்குதல்", ஒரு தனி அரசாங்க நிறுவனத்தின் மூலமாக தேசங்களைத் தனித் தனியாகப் பிரிப்பதற்கு வகை செய்தல் — கலாச்சார தேசிய சுயநிர்வாகத்தின் சித்தாந்த அடிப்படையும், உள்ளடக்கமும் இதுதான். இக்கருத்து முற்றமுழுக்க பூர்சுவாக்களுடையது, முற்றமுழுக்கப் பொய்யானது. தேசியவாதத்தைப் பலப்படுத்தும் எதையும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியாது, அதற்கு மாறாக, தேசிய வேறுபாடுகளை அழித்தொழிப்பதற்கும் தேசியப் பிரிவுத் தடைகளை அகற்றுவதற்கும் உதவும் எதையும் அது ஆதரிக்கிறது. தேசிய இனங்களின் பரஸ்பர தொடர்புகளை மேலும் மேலும் நெருக்கமுள்ளது ஆக்கும் எல்லாவற்றையும், தேசிய இனங்கள் கலந்து ஒன்றாவதற்கு இட்டுச் செல்லும் எல்லாவற்றையும், பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கிறது. வேறுவிதமாக நடப்பது என்பது பிற்போக்குத்தனமான தேசியவாத பிலிஸ்டைனிசத்திற்கு ஆதரவாக நிற்பதாகும்.

(பக். 45)

2. ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளால் வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த முதலாளிகளும் ஒன்றுகூடிப் பரிபூரணமாக ஒருமித்து இயங்குவதை நாம் காணகிறோம். தொழிற்சாலைகளில் வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த தொழிலாளிகளும் தோளோடு தோள்நின்று வேலை செய்கிறார்கள். உண்மையிலேயே தீவிரமான, ஆழ்ந்த எந்த ஒரு அரசியல் பிரச்சினையிலும் கட்சி சேருவது வர்க்க ரீதியில்தான் இருக்கிறதேயொழிய தேசங்களின் அடிப்படையில் அல்ல.

(பக்.47)

3. மனித சமுதாயம் சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்து, பலவகை தேசங்களாகத் தனித்து வாழ்வதை முடிவுக்குக் கொண்டு வருவதும், அவைகளிடையில் பரஸ்பர நல்லுறவை மீண்டும் ஏற்படுத்துவதும் மட்டும் சோசலிசத்தின் நோக்கமல்ல; அவைகளை ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலக்கச் செய்வதும் அதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காகத்தான் நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருபுறம், "கலாச்சார-தேசிய சுயநிர்வாகம்" என்பதைப் பற்றிய ரென்னர், ஓட்டோ பௌவர் ஆகியவர்களது கருத்தின் பிற்போக்குத் தன்மையை மக்களுக்கு விளக்குதல்; மறுபுறம் ஒடுக்கும் தேசங்களிலுள்ள சோசலிஸ்டுகளின் வெளி வேசத்தையும் கோழைத்தனத்தையும் விசேசமாகக் கவனித்துக்கொண்டு பொதுவான தெளிவற்ற சொற்றொடர்களிலல்ல, அர்த்தமற்ற வாய்வீச்சுகளிலல்ல, சோசலிசத்தை அடைந்த பின்னர் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்று அதை "ஒதுக்கி வைத்துவிடும்" முறையிலல்ல, தெளிவாகவும், கூர்மையாகவும் வரையப்பட்ட அரசியல் செயல்திட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையைக் கோர வேண்டும். **எவ்வாறு ஒடுக்கப்படும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற இடைநிலைக் காலத்திற்குப் பிறகுதான் வர்க்கங்களை மனித சமுதாயம் ஒழிக்க முடியுமோ அதேபோல, ஒடுக்கப்படும் எல்லா தேசங்களுக்கும் முழுவிடுதலை என்ற—அதாவது, பிரிந்துபோவது என்றால் அதற்குத் தடையேதும் இல்லை, சுதந்திரம்**

படிப்பகம்

www.padippakam.com

உண்டு என்ற—இடைநிலைக் காலத்துக்குப் பிறகுதான் தேசங்கள் தவிர்க்க முடியாதவகையில் ஒன்றுபடுவது, இரண்டறக் கலத்தல் என்ற நிலையை அடைய முடியும்.

(பக்.178,179)

4. சிறு தேசங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை என்பது கற்பனைரீதியானது, சாத்தியமற்றது என்றும், பொருளாதாரக் குவிவு மட்டுமின்றி அரசியல் குவிவும் கூட முற்போக்கானது என்றும் முதலாளித்துவத்தின் ஆதரவாளர்கள் கூச்சலிடுகிறார்கள்; இதற்கு மாறாக இந்தக் குவிவு எப்பொழுது ஏகாதிபத்தியம் அல்லாத குவிவாக இருக்கிறதோ அப்பொழுது முற்போக்கானது என்றும், எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கங்கள் தாங்களே விரும்பி ஒன்றிணைவதன் மூலம்தான் தேசங்கள் ஒன்றுபடுதலைக் கொண்டுவர வேண்டுமேயன்றி பலாத்காரத்தினால் அல்ல என்றும் இம்முறையில்தான் மார்க்சால் வாதிக்க முடிந்தது!

(பக்.184)

○

குறிப்பு :

1. பக். எண் என்ற குறியீட்டுக்குப்பின் வரும் எண்கள் "தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதமும்: சில பிரச்சினைகள்" என்ற லெனின் கட்டுரைத்தொகுப்பு நூலின் (மாஸ்கோ வெளியீடு, 1969, தமிழ்ப் பதிப்பு) பக்க எண்களைக் குறிக்கும்.

2. சர்— "பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதம்" —லெனின் கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பு நூல், மாஸ்கோ வெளியீடு, 1984, தமிழ்ப் பதிப்பு.

3. மா— "மார்க்சியமும், தேசிய இனப் பிரச்சினையும்" —ஸ்டாலின், சென்னை புக் ஹவுஸ், 1981, தமிழ்ப் பதிப்பு.

4. கேலி—"ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும் மார்க்சியத்தை இழிவுபடுத்தும் கேலிச்சித்திரமும்" —லெனின், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1974, தமிழ்ப் பதிப்பு.

○ மேற்கோள்களில் மொழிபெயர்ப்புத் தவறுகள் திருத்தப்பட்டுள்ளன.

□ பிற மேற்கோள்களுக்கு ஆசான்களின் ஆங்கிலத் தொகுப்பு நூல் தொகுதிகள் எண்ணும், பக்க எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளன.

○ மேற்கோள் தொகுப்பில் இடப்பட்டிருக்கும் இருபது உட்தலைப்புகளும் நமது.

□ **சதுரமான தடித்த எழுத்து அழுத்தம் மார்க்சிய ஆசான்களுடையவை.**

○ **குண்டான தடித்த எழுத்து அழுத்தம் நமது.**

**'இந்தியாவில் சனநாயகப் புரட்சியும் தேசியப் பிரச்சினையும்'**

என்ற கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்

படிப்பகம்

www.padippakam.com






மொழிப் போர் தியாகிகள் நாளில்
தமிழகமெங்கும் சுவரொட்டி இயக்கம்

ஆசிரியர் : கார்முகில், பொதுச்செயலர்
தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்